

# பாலாவின் பயணம்

## மணிவிழா மலர்

சி.பாலகிருஷ்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலாவின் பயணம்

திரு.சின்னத்தம்பி பாலகிருஷ்ணன்

அவர்களின்

அகவை

# 60

# மணிவிழா மலர்

22-02-2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் முகம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பாலாவின் பயணம் |
| நூலின் வகை | : | மணிவிழா மலர் |
| பதிப்புரிமை | : | மலர்க்குழு |
| வெளியீடு | : | திரு.சி.பாலகிருஷ்ணன் அதிபர் அவர்களின் மணிவிழாக்குழு |
| அச்சுப்பதிப்பு | : | சப்தமி பிறிண்டேர்ஸ், நல்லூர் |
| பக்கங்கள் | : | viii + 89 |
| பதிப்பு | : | பெப்ரவரி, 2019 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானமறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே!

-சுப்பிரமணிய பாரதியார்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/பளை மத்திய கல்லூரி

## பாடசாலைக் கீதம்

பச்சிலைப்பள்ளியில் பளை தரும் உயர்தர
மத்திய கல்லூரி
நித்தியமாகவே நிலந்தனில் புகழொடு
ஓங்கியே வாழ்கவே
அன்பொடு ஒழுக்கமும் அறநெறியும் தந்தே
இன்புடன் இறைபக்தியும் வளர்த்தே
மங்கலப் பண்புகள் மாணவர் காட்டியே
மாநிலம் போற்றிட எமை வளர்க்கும் - எங்கள்

(பச்சிலை)

செந்தமிழ் ஆங்கிலம் கணித விஞ்ஞானம்
சுந்தர அழகியல் மனையியல் தொழினுட்பம்
சிந்தனை தூண்டும் சமூகமும் சமயமும்
முந்தும் விவசாயம் உறுதியாயீட்டிடும்

(பச்சிலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இதழாசிரியரின் மனப்பதிவுகள்

# "நித்திலம் போற்றும் நிறைஞானச்சுடர்"

கிளி/பளை மத்திய கல்லூரி அதிபர் திரு.சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் அவர்களின் பாலாவின் பயணம் மணிவிழா மலரின் இதழாசிரியர் என்ற வகையில் உங்களுடன் கருத்துத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

தனிமனிதனுடைய வாழ்க்கைப் பயணம் அர்த்தமுடையதாகவும், சமூகம் போற்றும் ஒரு சாதனையாளனாகவும் மிளிர்வதனால் வரலாற்றில் தடம் பிடித்த பெருமைக்குரியவராக எல்லோர் மனங்களிலும் பதிவாகிவிடுகின்றார்கள். அந்த வகையில் அதிபர் திரு.சி.பாலகிருஷ்ணன் அவர்களின் மணிவிழா ஆண்டில் அவரின் வாழ்வுத் தடத்தினைப் பதிவு செய்யக்கிடைத்த சந்தர்ப்பம் அளப்பரியது.

மணிவிழா நாயகனின் "பாலாவின் பயணம்" என்ற மகுட வாக்கியத்துடன் வரும் இந்த மணிவிழா மலர் உங்கள் கரங்களில் தவழுகின்ற பொழுது பேருவகை கொள்கின்றேன். பாடசாலைச் சமூகத்தை நேசித்து, அயலவரை நேசித்து அவர்களுக்கு உதவி செய்து அவர்களது இன்ப துன்பங்களில் பங்குகொண்டு அவர்களை உயர்த்த அவர்களது உயர்வில் மகிழ்வு கொள்ளும் பண்பு கொண்ட ஓர் ஆளுமையின் பிரகாசமாக எம்மை ஈர்ந்திருக்கும் நிலையில் அவருக்கென விழா எடுப்பதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம்.

கல்வியில் சிறந்து பட்டம் பல பெற்று கல்வியமைச்சின் தேசிய மட்ட சிறந்த அதிபர் விருது (குரு பிரதீபா பிரபா 2015) கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கத்தினால் "தமிழ் எழில்" விருது 2014இல் பெற்று தொழிலால் மேன்மையுற்று அன்பு, கருணை, நட்பு, அறிவு, விவேகம், சிந்தனை, சிறப்பு ஆகிய யாவும் ஒரு தோன்றலின் இயக்கத்தினுள்ளே ஒளிரச் செய்துள்ள புதுமையாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலருக்கு பெருமை தரும் வாழ்த்துரைகளை வழங்கிய மதிப்பு மிக்கவர்களுக்கும், ஆக்கங்களைத் தந்துதவிய உள்ளங்களுக்கும், மலர் ஆக்கத்துக்கு உழைத்த மலர்க்குழுவிற்கும், நிதியுதவியளித்தோருக்கும், மலர் வெளிவர உதவிய பாடசாலைச் சமூகத்திற்கும், புகைப்படங்களை உரிய காலத்தில் எடுத்து வழங்கி உதவிய கே.எஸ்.எம். புகைப்பட நிறுவனத்தினருக்கும் மலரைச் சிறப்புற பதித்த சப்தமி பிறிண்டேர்ஸ் நிறுவனத்திற்கும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பழைய மாணவர் சங்கத்திற்கும், ஆக்கங்கள் வழங்கிய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இன்னும் நூலாக்கத்திற்கு அனைத்து வழிகளிலும் உதவிய அன்பு உள்ளங்களுக்கும் நூலாக்கத்திற்கான நிதிப்பங்களிப்பை வழங்கிய யாழ் வைத்தியசாலை உரிமை யாளரும் யாழ் மாகாணசபை உறுப்பினருமாகிய S.புலேந்திரராசா அவர்களுக்கும் பாடசாலைச் சமூகம் சார்பாகவும், மலர்க்குழு சார்பாகவும் உளமார்ந்த நன்றி யைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி.நே.ரஞ்சிதமலர்**
இதழாசிரியர்,
ஆசிரியர் (தமிழ்)
கிளி/பளை மத்திய கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் வெளியீட்டுக்குழு



திரு.சி.வதனராசா, திருமதி.நே.ரஞ்சிதமலர், திரு.பா.பத்மநாதன், திரு.யோ.பகீரதன்,
திரு.ப.நிசாந்தன், திரு.நா.கேதீஸ்வரன், திரு.க.சுரேஸ்குமார், திரு.வே.சசிகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக்குழு



திரு.சி.வதனராசா, திரு.ப.நிசாந்தன், திரு.வை.சசிக்குமார், திரு.க.ருகுணன், திருமதி.நே.ரஞ்சிதமலர், திருமதி.வ.சந்திரசேகரம், திருமதி.ஜ.சசிதா, திருமதி.வெ.அன்னமேரி, திருமதி.லூ.நேசநாயகம், திருமதி.ஜெ.அருந்தவராசா, திருமதி.பா.யசோதா, திருமதி.த.மோகனவனிதா, திருமதி.தி.நிசாந்தன், திரு.து.திரவியரத்தினம், திரு.சி.செல்வராசா, திருமதி.இ.குமாரவேலு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபர்

## கடமையே கண்ணாக...



**திரு.சின்னத்தம்பி பாலகிருஷ்ணன்**

S.L.P.S - I, Maths.Trd., B.Ed, Dip. in S.M, M.Ed.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


- தமிழ்த்தாய் வாழ்த்து iii
- பாடசாலைக்கீதம் iv
- இதழாசிரியரின் மனப் பதிவுகள் v

**ஆசிச்செய்திகள்**

1. ஆசிச்செய்தி - செ.கனகசபை (பளை இரட்டைக்கேணி கண்ணகை அம்மன் ஆலயம்) 01
2. ஆசிச்செய்தி - அருட்திரு.செபஸ்ரியன் (தூய பேதுரு ஆலயம்) 02

**வாழ்த்துச் செய்திகள்**

1. சிவஞானம் சிறீதரன் (பா.உ) 03
2. சி.சத்தியசீலன் (கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு - வடமாகாணம்) 05
3. செ.உதயகுமார் (மாகாணக் கல்விப் பணிப்பாளர் - வட மாகாணம்) 06
4. தி.யோண் குயின்ரஸ் (வலயக் கல்விப் பணிப்பாளர் - கிளிநொச்சி) 07
5. ப.ஜெயராணி (பிரதேச செயலர், பச்சிலைப்பள்ளி) 08
6. த.குருகுலராசா (முன்னாள் மாகாணசபை உறுப்பினர் - வடமாகாணம்) 09
7. ப.அரியரத்தினம் (முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளரும், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும்) 11
8. க.முருகவேல் (முன்னைநாள் வலயக் கல்விப் பணிப்பாளர் - கிளிநொச்சி) 13
9. ச.சுரேன் (தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை) 15
10. ஐ.குகானந்தராசா (கோட்டக்கல்விப் பணிப்பாளர்- பளை) 16
11. அமரசிங்கம் கேதீஸ்வரன் (உதவித்திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலகம், கிளிநொச்சி) 18
12. க.குணபாலசிங்கம் (முன்னாள் அதிபர்) 19
13. ச.பூலோகராஜா (தலைவர், அதிபர்கள் சங்கம், கிளிநொச்சி) 20
14. சரா.புவனேஸ்வரன் (பொதுச்செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்) 21
15. க.ருகுணன் (பிரதி அதிபர்) 23
16. து.திரவியரத்தினம் (செயலாளர் - SDS) 24
17. திருமதி.இ.குமாரவேலு (செயலாளர், பழைய மாணவர் சங்கம்) 27
18. வே.இறைபிள்ளை (தமிழ்ச்சங்கம், கிளிநொச்சி) 28




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. சி.வதனராசா (தலைவர், ஆசிரியர் நலன்புரிச்சங்கம்) 30
20. ச.வசந்தராணி (உப அதிபர்) 31
21. சி.செல்வராசா (இணைச் செயலாளர், SDS) 32
22. ப.கவிதன் (சிரேஷ்ட மாணவ தலைவன்) 33

## கட்டுரைகளும் கவிதைகளும்

01 பாலாவின் பயணம்... 34
02. பாலாவின் காலத்தில் எம்பள்ளி (திருமதி.வெ.அன்னமேரி, ஆசிரியர்) 42
03. பல்லாண்டு வாழ்க (நிசாந்தன், ஆசிரியர்) 44
04. மனிதவள விருத்திக்குக் கல்வியின் பங்களிப்பு (பா.பத்மநாதன், ஆசிரியர்) 45
05. மணிவிழா நாயகனாம் ... (திருமதி.அ.காந்தரூபி, ஆசிரியர்) 50
06. க.பொ.த உயர்தரத்தில் (A/L) இரசாயனவியலில் சில அணுகுமுறைகள் (திரு.சுப்பிரமணியம் சுரேஸ்குமார், ஆசிரியர்) 51
07. பள்ளியை வளர்த்திட்ட பாலாவே... (வ.அபிலாசா, மாணவி) 58
08. 2019ஆம் ஆண்டிலிருந்து க.பொ.த (சா/த) கணித வினாப்பத்திர அமைப்பும், எதிர்கொள்ளும் சவால்களும் அதற்கான தீர்வும் (திரு.நா.கேதீஸ்வரன், ஆசிரியர்) 60
09. எங்கள் அதிபர் (பா.சதுஸ்டிகன், பா.சாரங்கன் - மாணவர்கள்) 63
10. தமிழ்மறையே எங்கள் திருக்குறளே... (திருமதி.நே.ரஞ்சிதமலர், ஆசிரியர்) 65
11. கிருஷ்ண லீலை (திருமதி.லூர்தகவி தேசநாயகம்) 67
12. அதிபர்களுக்கோர் முன்னுதாரணம் ... (திரு.ம.மதிதாஸ், ஆசிரியர்) 68
13. "யாம் வாழும் நாளின் பின்பும் நீங்கள் வாழியவே" (திருமதி.பிரேமலா தங்கறூபன், ஆசிரியர்) 71
14. சேவைக்கு நீர்தான் ஐயா! (நாகராசா நகுலேஸ்வரன், பெற்றோர்) 73
15. **How to choose streams for higher studies** (N.Nithunshan, Old Studend) 75
16. வளமோடும் நலமோடும் வாழ்ந்திட .... (திரு.திருமதி.அன்பழகன்) 77
17. மனதார வாழ்த்துகிறேன் (க.அபிஷிகா, மருத்துவப் பிரிவு மாணவி) 78
18. எம் அதிபர் (செல்வராசா கின்ஷிகா, மாணவி) 79
19. என் கல்லூரி அதிபரே! (நகுலேஸ்வரன் சங்கவி, மாணவி) 80
20. **Will remember you always Sir!** (Mrs.Mathura Parameswaran) 81
21. எம் அதிபர் - அனுபவப் பகிர்வு (கேதீஸ்வரன் திவாரகா, மாணவி) 83

## சில குறிப்புகள்

1. சேவையாற்றிய பாடசாலைகளும் அதிபர்களும் 85
2. கல்லூரியின் சாதனைகள் 87

**நன்றியுரை** 89



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச்செய்தி

நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே அமையப் பெற்ற பச்சிலைப்பள்ளி பிரிவில் தலைநிமிர்ந்து நிற்கின்றது பளை மத்திய கல்லூரி.

அதன் அதிபர் திரு.க.பாலகிருஷ்ணன் அவர்கள் சேவை மூப்படிப் படையில் ஓய்வு பெறும் வயதை எய்தியுள்ளார். அவரது ஓய்வு நிகழ்வில் ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

நான் ஆரம்ப வகுப்பையும், இடைநிலை வகுப்பையும் பளை கனிஷ்ட வித்தியாலயம் எனப் பெயர்சூட்டப்பட்ட இப்பாடசாலையிலேயே கற்றேன். காலப் போக்கில் பளை மகாவித்தியாலயம், பளை மத்திய கல்லூரி எனும் பெயரில் வளர்ச்சியடைந்தமை மன மகிழ்வைத் தருகின்றது. நானும் எனது குடும்பமும் கற்றது இவ்வித்தியாலயத்திலேயேயாகும். கல்வி கேள்விகளில் பெயர் பொறித்த பாடசாலை எனலாம். “எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்” என்ற ஆன்றோர் வாக்குக்கமைய கல்விக்கூடம் வளம் பெற்றது. வளர்ச்சியடைந்து கல்லூரிக்கு அதிபராகும் வாய்ப்பைப் பெற்ற க.பாலகிருஷ்ணன் அவர்கள் ஓய்வு காலத்தில் சிறப்பான பொதுப்பணிகளில் ஈடுபட்டு சிறப்பாக வாழ வாழ்த்துகின்றேன். மனைவி, மக்களுடன் இன்புற்றிருக்க இறையாசி வேண்டி நிற்கின்றேன். அறிவுக்கொரு அன்னசத்திரம், ஒழுக்கத்திற்கொரு கலங்கரை விளக்கு இவ்வாறுதான் இக் கல்லூரி வளர்ந்தது. கல்விக்கு மட்டுமன்றி தமிழன் பண்பாடு, கலாசாரம் விழுமியங்கள் பேணிப்பாதுகாக்கப்பட்ட வித்தியாலயம் எனலாம். அருகில் இரட்டைக்கேணி கண்ணகை அம்பாளின் அருட்கடாட்சம் பெற்ற கல்லூரி எனலாம்.

ஓய்வு காலம் சிறப்பாக அமைய இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

**செ.கனகசபை,**
தலைவர்,
நித்திய பூசகர்,
பளை இரட்டைக்கேணி
கண்ணகை அம்மன் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய பேதுரு ஆலயம்
# St. Peter's Church



Pulopallai,
Pallai,
Kilinochchi,
Sri Lanka.

புலோப்பளை,
பளை,
கிளிநொச்சி,
இலங்கை.

## ஆசிச்செய்தி

சிறந்த கல்வித் தகைமைகளைப் பெற்றுக் கல்விப் பணியைத் தொடங்கி பல இடங்களில் மாணவர், ஆசிரியர்களுடன் சிறப்புற நிறைவேற்றிய மனிதர். மாணவர்களின் உயர்ச்சியிலும் வளர்ச்சியிலும் தன் வாழ்வை அர்ப்பணித்த சிறந்த ஆசான்.

ஆசிரியர்களின் அன்பனாக நண்பனாக இருந்து வழிகாட்டிய வழிகாட்டி. பெருமைக்குரியவர்; அன்புக்குரியவர்.

தன் பணியில் திருப்தி கண்டவர் திரு.சி.பாலகிருஷ்ணன் அவர்கள். நம் அதிபர் சிறந்த அதிபர். ஓய்வு பெறவிருக்கும் நிலையில் மணிவிழாக் கொண்டாடி மகிழும் விழா நாயகனைப் பாராட்டுகின்றேன்; வாழ்த்து கின்றேன்.

நீண்ட ஆயுளுடன் உடல் உள நலத்துடன் வாழ ஆசி கூறி நிற் கின்றேன்.

**அருட்திரு.செபஸ்ரியன்,**
பங்குத் தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
:021 2280024 021 2221595,
:021 2280024 021 2221595,
:077 6913244
: shritharanmp@gmail.com
: www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
:021 2280024 021 2221595,
:021 2280024 021 2221595,
:077 6913244
: shritharanmp@gmail.com
: www.shritharan.com



# மணிவிழா நாயகனுக்கு மகிழ்வான வாழ்த்துக்கள்

யாழ்ப்பாணம் புத்தூரைத் தன்பூர்வீகமாகக் கொண்டு பணிகளில் உயர்ந்ததாய்ப் பார்க்கப்படும் கல்விப் பணியிலே இணைந்து ஆசிரியர் சேவையில் இருபது ஆண்டுகளும், அதிபர் சேவையில் இருபத்தொரு ஆண்டுகளுமாக தன் வாழ்நாளில் முக்காற்பகுதியை கல்விப்பணிக்காகவே கரைத்து பணி ஓய்வுபெறும் மணிவிழா நாயகன் உயர்திரு.சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

ஆசிரியராக, கொத்தணி உதவியாளராக, அதிபராக, கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்கத் தலைவராக பல்வேறுபட்ட பரிமாணங்களில் படிப்படியாக வளர்ச்சி கண்டு, அறுபது வயதிலும் நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, கலைகளில், ஒழுக்கத்தில் உயர்ந்த பல்லாயிரம் மாணவர்களை உருவாக்கிய பெருமைக்குரிய இப்பெருமகனார் வாழும் காலமெல்லாம் இவ்வையம் அவரை வாழ்த்தும் வண்ணம் பணிபுரிந்திருப்பது போற்றுதற்குரியது.

ஆசிரியராக நாட்டின் பல பாகங்களில் கடமையாற்றியபோதும், தனது பூர்வீக மண்ணான யாழ்ப்பாணத்தை விடுத்து இடர்மிகு சூழலை எதிர் கொண்டிருந்த கிளிநொச்சி மண்ணையும், மாணவர்களையும் நேசித்து அவர்களை கல்விப்புலத்தில் உயர்ந்தவர்களாக வளர்த்தெடுக்க வேண்டுமென்ற வேணவாவில் தனது 21 வருட அதிபர் சேவையை இந்த மாவட்டத்திற்கே அர்ப்பணித்து அரும்பணியாற்றியுள்ள அதிபர் உயர்திரு.சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் அவர்களின் பணி அனைவருக்கும் முன்னுதாரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மண்ணின் மீதும், மொழியின் மீதும் அளவற்ற பற்றுக்கொண்டு பல்வேறு அறப்பணி நிலையங்களின் நிர்வாக சபை உறுப்பினராகவும் இருந்து சமூகப்பணியாற்றி தலைசிறந்த கல்விமானாக, தலைமைத்துவத்தின் அடையாளமாக, அன்பும், அறனும் தன்னிதயத்தில் சுமந்த சமூக சேவகனாக, நல்லதொரு குடும்பத்தலைவனாக விளங்கியதனூடு மக்கள் மனங்களில் நிலை பெற்ற ஒரு நல்ல மனிதனாக அதிபர் பாலகிருஷ்ணன் அவர்கள் பரிணமிக்கிறார்.

கல்வி, நிர்வாகம், சமூக சேவைகள், அறப்பணிகள் என எல்லாவற்றிலும் தன்னை முழுதாய் அர்ப்பணித்து ஒப்பாரும், மிக்காரும் இல்லாத உயர் மனிதனாக ஒவ்வொருவர் உள்ளங்களிலும் தன் பணியால் உயர்ந்து நிற்கும் அதிபர் உயர்திரு.சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் அவர்களின் ஓய்வுக்காலம் ஒளி மயமாய் அமையவும், இம்மணிவிழா மலர் சிறப்புறவும் மனமுவந்து வாழ்த்தி நிற்கிறேன்.

**சிவஞானம் சிறீதரன்**
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
இணைத்தலைவர் – மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அர்ப்பணிப்பும், கண்ணியமும் மிக்க கடமையாளர்

கிளி/பளை மத்திய கல்லூரியில் அதிபராக கடமையாற்றி தனது அறுபதாவது அகவையில் ஓய்வு பெறவிருக்கும் திரு.சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.சி.பாலகிருஷ்ணன் அவர்கள் ஆசிரிய சேவையில் 20 வருடங்களும், 21 வருடங்கள் அதிபராகவும் தன் கல்விப் பணியைச் செவ்வனே ஆற்றியுள்ளார். அறியாமை எனும் இருளை நீக்கும் ஒளியான கல்வியைப் பல மாணவர்களின் வாழ்வுக்குரிய அடித்தளமாக அளித்துத் தன் பணியினை திறம்பட ஆற்றியுள்ளார். கல்வியுடன் சேர்த்து ஒழுக்கத்தையும் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுத்து மாணவர்களை நல்வழிப்படுத்தி அவர்களின் எதிர்காலத்தில் நன் மக்களாக வாழ்வதற்கு வழிகாட்டியாக இருந்துள்ளார். இவர் தனது கடின உழைப்பினாலும் விடாமுயற்சியினாலும் வாழ்க்கையில் உயர்ந்தவர். இவரது வாழ்க்கை ஏனையவர்களிற்கு முன்னுதாரணமானது. பட்டம் பதவிகளினால் இறுமாப்பு அடையாது எளிமையாக எல்லோரையும் மதித்து நடக்கும் நல்ல சுபாவம் கொண்டவராகவும் இருப்பது பாராட்டத்தக்கதாகும்.

கல்விச் சமூகத்திற்கு அளப்பெரிய பணியினை ஆற்றியதுடன் இவர் தனது கடமைக் காலத்தில் சமூகம் சார் பணிகளில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு மாணவர்களினதும் சமூகத்தினதும் முன்னேற்றத்தில் பங்கேற்றமையினைப் பாராட்டுவதோடு இவர் தனது ஓய்வுகாலத்தில் பலசமூக, சமய பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**சி.சத்தியசீலன்**

செயலாளர்,

கல்வி,பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறைமற்றும்

இளைஞர் விவகாரஅமைச்சு,

வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கிளி/பளை மத்திய கல்லூரி அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் திரு.சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் அவர்களது மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

41 வருடங்கள் கல்விப் பணியாற்றி ஓய்வுபெறும் இவர் கல்விமாணி, கல்வி முதுமாணிப் பட்டங்களைப் பெற்றவராவார். இவர் தனது பணிக் காலத்தில் 20 வருடங்கள் ஆசிரியராகவும், 21 வருடங்கள் அதிபராகவும் பணியாற்றியுள்ளார். தனது சேவைக் காலத்தில் பல பின்தங்கிய கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் ஆசிரியராகச் சேவையாற்றியுள்ளதோடு, அதிபராகவும் இப்பிரதேசங்களில் தனது பணியினை ஆற்றியுள்ளார். இவர் தான் கடமையாற்றிய பாடசாலைகளில் மாணவர்களினது கல்வி, இணைப் பாடவிதான செயற்பாடுகளினது வளர்ச்சிக்காகவும், பாடசாலைகளினது மேம்பாட்டிற்காகவும் அயராது பணியாற்றி ஓய்வு பெறுகின்றார்.

இவர் தனது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு எனது நன்றி களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு இவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

**செ.உதயகுமார்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கிளி/பளை மத்திய கல்லூரியின் அதிபர் திரு.சி.பாலகிருஷ்ணன் அவர்கள் கல்லூரியின், மாவட்டத்தின் சிறந்த அதிபர்களில் ஒருவர் மட்டுமல்ல ஒரு சிறந்த நியாயவானாகவும் திகழ்ந்து தனக்கும் அதிபர் சமூகத் திற்கும் பெருமை சேர்த்தவர்.

எதையும் பொறுமையாக கையாள்வது மட்டுமல்ல, நசூக்காக விடயங்களைச் செயற்படுத்துவதில் வல்லவர். பளைப் பிரதேச செயலர் பிரிவில் நிலைகொண்ட பயணத்தில் பளை மத்திய கல்லூரியில் நின்று முழு அதிபர் சமூகத்திற்கும் மாவட்டத்தில் தலைமை தாங்கி இவர் நடந்து வந்து இன்று சேவை நிறைவு கண்டு நிற்பது கண்டு வாழ்த்துகின்றேன்.

யுத்த காலத்தில்கூட மாவட்டத்தின் கல்விப் பணிக்காய் அப் போதைய காலங்களில் பணிப்பாளர்களுடன் கைகோர்த்து நின்று உழைத்தது மட்டுமல்ல அலுவலகக் காவலில் வைக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு.

எதையும் மேல் அதிகாரிகளுடன் ஆலோசித்துச் செய்ய வேண்டும், சுற்று நிருபங்களைச் சிறப்பாகக் கையாள்வதன் மூலம் "தரமான கல்வி" என்ற எண்ணக்கருவை வலுவடையச் செய்ய வேண்டும் என எண்ணி முனைப்பாகச் செயற்பட்டு "பிரதீபா பிரபா" எனப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

தட்டுவன்கொட்டி, அக்கராயன், இராமநாதபுரம் மேற்கு, D7 ஊர்கள் இவரது பெயர் நன்கு சொல்லும். கணித வித்துவான் மட்டுமல்ல அக்கராயனில் காடு வளர்த்து வெற்றி கண்டது மட்டுமல்ல 40 வருடத்திற்கு மேலான சேவைக்காலத்தில் 30 வருடங்களை கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

இவரின் எதிர்காலம் சிறப்படைய வாழ்த்துகின்றேன்.

**தி.யோண் குயின்ரஸ்**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித்துறையின் மாண்புறு சேவையாளன்

தன்நிலை உயர்ந்து தலைநிமிர்ந்து மணிவிழாக் காண விளையும், எம் கல்விச் சமூகம் வளர கல்விப்பணியாற்றிய அதிபர் சின்னத்தம்பி பாலகிருஷ்ணனுக்கு மணிவிழா வாழ்த்துச் செய்தியளிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

கல்விப்பணி கடவுட்பணி, காலம் முழுவதும் பயன்பெற்றோர் போற்றும் பணி, இப்பணியில் சிறந்தவராய் பழகுவதற்கு எளிமையானவராய் எவருடனும் இன்முகத்துடன் பழகும் பண்பாளன்,

இவருடைய மாணவர்கள் சகபாடிகள் எவரும் இவர் மூலமாக நன்மையடையத் தவறியதேயில்லை. ஆக்க பூர்வமான ஆலோசனைகள் வழி காட்டலில் மேம்பட்டோர் ஏராளம். தனது கடமையைப் பூர்த்தி செய்வதில் மனநிறைவு காணும் ஆர்வலன் மணிவிழாவில் கௌரவிக்கப்பட்டதை பாராட்டி விளைகின்றேன்.

மாணவர்கள் கல்வியை ஊக்குவிப்பதோடு மட்டும் ஆசிரிய சேவை மட்டுப்படுத்தப்பட மாட்டாது. அதற்கு மேலாக மாணவர்களை நல்ல மனிதர்களாக உருவாக்குதல், அறிவு சார் சமுதாயத்தை உருவாக்குதல் எனும் கடப்பாட்டில் வாழ்ந்து காட்டிய இவர் பெருமை பணியுமாம் ... எனும் குறளுக்கு பொருத்தமானவரே.

"தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதில்லை" எனும் கூற்றுக் கமைவாக ஒருவரின் வாழ்வும் பணியும் ஒரு சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாக அமையும். அவ்வகையில் மணிவிழாக் காணும் நாயகன் சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் அவர்களுக்கு மணிவிழாவினை ஏற்பாடு செய்த ஏற்பாட்டாளர் களுக்கும் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மணிவிழா நாயகனின் ஓய்வுக்காலம் மாண்புற அமைய எனது வாழ்த்துக் களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ப.ஜெயராணி**

பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
பச்சிலைப்பள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



நாற்பது ஆண்டுகள் கல்விப் பணிபுரிந்து மணிவிழா நாயகனாக சேவையில் இருந்து விடைபெறும் நண்பன் பாலகிருஷ்ணனை வாழ்த்து வதில் பெருமை கொள்கிறேன்.

தட்டுவன்கொட்டியில் 1978ஆம் ஆண்டில் தனது ஆசிரியத் தொழிலைக் கடமையேற்கும்போது பாலா பத்தொன்பது வயது நிரம்பிய அரும்பு மீசைகொண்ட பள்ளிப்படிப்பில் இருந்து வெளிவந்த உலகமறியாப் பாலகன். இவ்வாறு எழுபதுகளின் இறுதிக்காலப் பகுதியில் நியமனம் பெற்ற சிலரே எமது நாட்டில் பத்தொன்பது வயதில் நியமனம் பெற்ற இறுதித் தொகுதியினராவர்.

இவர்கள் பெரிய செய்தியைச் சொல்லி இளைப்பாறுவது அவர் களுக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகும். தற்போது ஆசிரியர் நியமனம் பெறுபவர்கள் இருபத்தைந்து வயதை எட்டியவர்களாகவுள்ளனர். ஆனால் பாலா போல் பத்தொன்பது வயதில் நியமனம் பெற்றோர் மிகச் சொற்ப வருடங்களில் தங்களின் இளமைத்துடிப்பின் உத்வேகத்தாலும் தம்முன்னே வீற்றிருக்கும் மாணவர்கள் ஒரு சில வருடங்கள் தங்களை விட இளமையாக வுள்ளதாலும் மாணவ மனச்சிந்தனைகளைப் புரிந்து, கடமையைக் கண்ணியத்துடன் மேற்கொள்ள மிகச் சுலபமாகத் தம்மை அர்ப்பணித்துக் கொள்கிறார்கள்.

இவ்வர்ப்பணிப்பை அதிபர் பாலகிருஷ்ணனிடம் நாற்பது வருடங் களுக்கு முன்னே கண்டேன். எத்தனை துன்பங்கள், தடைகள், சிக்கல்கள் ஏற்பட்டாலும் அத்தனையையும் துணிவுடன் எதிர்கொண்டு தான் பொறுப் பேற்ற பள்ளிகளைச் செழுமையாக்கப் பாலா தவறியதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்சிரிப்பும், சிரிப்பும், மலர்ந்த முகமும் பாலாவை என் கண்முன்னே எப்போதும் காண்பித்தது. இந்த முகமலர்வு அவரது உள்ளத்திலும் குடி கொண்டிருந்தது.

மிகத் துன்பமான 1996 இடப்பெயர்வின் போது அக்கராயன் மகா வித்தியாலத்தில் எல்லோரையும் ஒன்றிணைத்து கல்விப் பணியாற்றியவர். இதேபோல் மீள்குடியேற்றத்தின்போது கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் மறுமலர்ச்சிக்கும் பாலாவின் தலைமைத்துவம் மிளிர்ந்தது.

கிளிநொச்சியின் பெருமைக்குரிய பாடசாலைகளில் தனது முத்திரையைப் பதித்து இளைப்பாறும் பாலகிருஷ்ணனும் குடும்பத்தினரும் பல்லாண்டு இன்புற்று வாழ எனது நல்லாசிகள் உரித்தாகுக.

**த.குருகுலராசா**

முன்னாள் மாகாணசபை உறுப்பினர்,

வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



பளை மத்திய கல்லூரி அதிபராகப் பணி புரிந்து, அதிபர் பதவியிலிருந்து ஓய்வுபெறும் உயர்திரு.சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் அவர்களைக் கௌரவிக்குமுகமாக பளை மத்திய கல்லூரி ஆசிரியர் நலன்புரிச் சங்கம் வெளியிடும் மணிவிழா மலருக்காக ஆசிச்செய்தி ஒன்றை வழங்குவதில் மன நிறைவடை கிறேன்.

திரு.சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் அவர்கள் ஆசிரியராக 01.06.1978 அன்று நியமனம் பெற்றவர். ஆசிரியராக அவர் ஆற்றிய அர்ப்பணிப்புக் களைக் கருத்திற்கொண்டு 01.05.1998 அன்று கிளிநொச்சி கல்வி வலயத்தில் அக்கராயன் மகா வித்தியாலயத்தின் அதிபராக என்னால் நியமனம் வழங்கப் பட்டது.

கிளிநொச்சி மாவட்டம் மிகப்பெரும் இடப்பெயர்வுகளைச் சந்தித்த நேரத்தில் யாழ் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைந்து சகல மக்களும் யாழ் மாவட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டு கிளிநொச்சி யில் அமர்த்தப்பட்டனர். அதுவும் கிளிநொச்சி அக்கராயன் பகுதியிலேயே அதிக மக்கள் குடியமர்ந்தனர். இதனால் அதிகளவு மாணவர்கள் அக்கராயன் மகாவித்தியாலயத்தில் சேர்ந்தனர். இதனால் மிகப்பெரும் கஷ்டங்களை அதிபர் அவர்கள் எதிர்நோக்கி மனங்கோணாது இன்முகங் காட்டி சேர்த்துக் கொண்டது என் மனமுன் இப்பொழுதும் நிழலாடுகின்றது.

சிறந்த ஆற்றலும், தலைமைத்துவப் பண்பும், எதனையும் சமாளிக்கும் துணிவும் அதிபரின் பண்பாடும் யாழ்ப்பாண மக்கள் மீண்டும் யாழ்ப்பாணத் திற்குத் திரும்பியவுடன் அக்கராயன் மகா வித்தியாலத்தின் நெருக்கடிகள் சற்றக் குறைவடைய அதிபருக்கு என்னால் இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலைக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையின் அதிபர் பதவியை திரு.சி.பாலகிருஷ்ணன் ஏற்றது அப்பாடசாலையின் ஒரு பொற்காலமாகும். இவரது காலத்தில் இப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை விளையாட்டுத்துறையில் பல சாதனைகளை மாவட்ட மட்டத் திலும், தேசிய மட்டத்திலும் பெற்றுக்கொண்டது. இப்பாடசாலையின் பெயரை நாற்றிசையிலும் மிளிரச் செய்தது.

பின்னர் கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் அதிபராகப் பணியாற்றிய காலத்தில் இந்துக்கல்லூரியிலிருந்து மருத்துவத் துறைக்கும், பொறியியல் துறைக்கும் பல மாணவர்கள் சென்றமைக்காகப் பலராலும் பாராட்டப் பட்ட ஒரு விடயமாகும். இவ்வாறே கிளிநொச்சி இந்துக் கல்லூரியிலிருந்து பளை மத்திய கல்லூரிக்கு அதிபராகப் பதவி ஏற்றுப் பல சாதனைகளை நிறுவியுள்ளார். விளையாட்டுத் துறையில் மாவட்ட மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் பலர் விருதுகளைப் பெறக் காரணமாக விளங்கினார். அவ்வாறே சகல துறைகளுக்கும் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல வழி காட்டியவர். இவரது காலத்திலேயே அதிகளவு மாணவர்கள் பல்கலைக் கழகம் சென்றமையை யாவரும் அறிவர்.

சுருங்கக் கூறின் போரின் பல பக்க விளைவுகளையும் சந்தித்து ஒரு மாவட்டத்தில் துணிந்து நின்று சகல கல்விச் செயற்பாடுகளையும் வெற்றி கரமாக மேற்கொண்ட ஒருவர். யான் கல்விப் பணிப்பாளராகவும், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக இருந்தாலும் எனக்கு பல வழிகளிலும் உறுதுணையாக இருந்தவர் என்பதுடன், எனது உற்ற நண்பராகவும் விளங் கினார். அனைத்து ஆற்றல்களுடனும் பணிபுரிந்த ஒருவர் இளைப்பாறுவது எமது மாவட்ட கல்வித்துறையில் பாரிய ஒரு இடைவெளியை ஏற்படுத்தும் என்பது தவிர்க்க முடியாததாக உள்ளது. எனினும் 60 வயதில் இளைப்பாற வேண்டியது நிருவாக ஏற்பாடென்னும் வகையில் அவரை மகிழ்வுடன் விடை கொடுத்து அனுப்புவது எமது கடமையாகும். தனது இறுதிக் காலத்தில் மன நிறைவுடனும் தனது மனைவி, பிள்ளைகளுடன் உடல் உள ஆரோக்கியத்துடன் வாழ இறைவன் வழிசமைத்திட வேண்டுமென மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தியை இத்தால் சமர்ப்பிக்கின்றேன்.

**ப.அரியரத்தினம்,**

முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளரும்,

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்துச்செய்தி

கிளி/பளை மத்திய கல்லூரியின் பள்ளி முதல்வர் திரு.சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தியினை வழங்கச் சந்தர்ப்பம் வழங்கியதையிட்டு பெரிதும் மகிழ்வடைகின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தட்டுவன்கொட்டி கிராமப் பாடசாலையில் **01.06.1978** அன்று முதல் நியமனம் பெற்று கணித பாட ஆசிரியராக தனது கல்விச் சேவையை ஆரம்பித்துள்ளார். **22.02.2019** அன்று கிளிநொச்சி மாவட்ட பள்ளியிலிருந்து முதலாம் தர அதிபராக அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

**40** வருடங்களுக்கு மேலாக நீண்ட பல வருட காலமாக அர்ப்பணிப்புடன் கல்விச் சேவையாற்றிய இவர் **20** வருட காலமாக சிறந்த கணித பாட ஆசிரியராகவும் **20** வருடங்களுக்கு மேலாக சிறந்த ஆளுமை மிக்க அதிபராகவும் தனது கடமைகளை ஆற்றியுள்ளார்.

அக்கராயன் ம.வி.இல் முதன்முதலாக அதிபர் கடமைகளைப் பொறுப்பெடுத்து அப்பள்ளியில் அபார வளர்ச்சிக்குப் பெரிதும் அயராது உழைத்தார். பாலைவனமாகக் காட்சியளித்த அந்தப் பள்ளியைச் சோலைவனமாக மாற்றிப் புதுமை படைத்தார்.

**1996 - 1998** காலப்பகுதியில் கிளிநொச்சி நகரை அண்டிய மக்கள் போர் அச்சம் காரணமாக பாதுகாப்புத் தேடி A9ற்கு மேற்குப் புற கிராமங்களை நோக்கி நகரத்தொடங்கினர். அவர்களுடன் எமது கல்வித் திணைக்களமும் அக்கராயன் பிரதேசத்தை நோக்கி நகர்த்தப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்களுக்கும் பள்ளிகளுக்கும் கல்வித்திணைக்களத்திற்கும் தனது விடுதிகளிலும் பள்ளி வளாகத்திலும் தங்க பள்ளிகளைச் செயற்பட வைக்கவும் பெரிதும் உறுதுணையாக அதிபர் பாலகிருஷ்ணன் செயற்பட்டார். எல்லோரையும் அன்பாக அரவணைத்து எதுவித பேதமும் இன்றி நாம் அக்கராயன் பிரதேசத்தில் கல்விப்பணி ஆற்ற இவரின் அன்பான அரவணைப்பே முக்கிய காரணமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் கல்விச்சேவையாற்றிய காலத்தில் ஆசிரியர் விடுதிகளிலோ அல்லது தனியார் வீடுகளிலோ பள்ளிக்கு அருகாமையில் மனைவி, பிள்ளைகளுடன் தங்கியிருந்து சேவையாற்றிய காரணத்தினால் 24 மணி நேரமும் எந்நேரம் என்றாலும் இவரை அணுகி பலர் பயன் பெற்றதை நான் நன்கு அறிவேன்.

நான் கல்விப் பணிப்பாளராக் கடமை புரிந்த காலத்தில் சிறந்த முதல்தர அதிபராக முதன்மை நிலையில் இவரின் செயற்பாடுகள் அமைந்ததை நான் உறுதியுடன் கூறுகின்றேன்.

காங்கேசன்துறைக்கு அண்மையில் இவருக்கு சொந்த நிலம் இருந்தும் இன்றுவரை அங்கு சென்று குடியிருக்கக்கூடிய ஏதுநிலை காணப்படவில்லை. எது எப்படியெனினும் ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்ற கோட்பாடு இவருக்கு மிகவும் பொருத்தமானதாக அமைந்துள்ளது. இவரின் ஆண் பிள்ளையும் பெண் பிள்ளையும் கல்வியிலும் விளையாட்டிலும் கவின் கலைகளிலும் முதன்நிலை மாணவர்களாகத் திகழ்ந்து இன்று உயர்கல்வியைக் கற்று வருகின்றனர். இவரின் மனைவியும் சிறந்த ஆசிரியப் பணியை நிறைவு செய்து இவரின் வருகைக்காகக் காத்து நிற்கிறார்கள்.

மிகவும் கஷ்ட பிரதேசங்களில் 40 வருடங்களுக்கு மேலாக நிறைவான கல்விப் பணியாற்றி அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்ற அன்புக்கும் மதிப்பிற்குமுரிய அதிபர் பாலகிருஷ்ணன் அவர்களும் அவர் தம் குடும்பத்தினரும் உடல் உள ஆரோக்கியத்துடன் மகிழ்வுடனும் எல்லா வளங்களுடனும் நிறைவாக வாழ எல்லாம் வல்ல இறைவனின் ஆசிகளை இறைஞ்சி நாளும் வாழ்த்துகிறோம்.

**க.முருகவேல்**

முன்னைநாள் வலயக் கல்விப் பணிப்பாளர்,

கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

வட மாகாணத்தின் பால் அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே அமையப்பெற்ற பச்சிலைப்பள்ளியிலே சிறந்து விளங்குகிறது பளை மத்திய கல்லூரி.

வானளாவ உயர்ந்து வளர்ந்தோங்கிய பாடசாலைக் கட்டடம் பளை நகருக்கு அழகு சேர்க்கிறது. அக்கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறுகின்ற திரு.சி.பாலகிருஷ்ணன் அவர்களுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு நான் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

"தோன்றில் புகழொடு தோன்றுக அஃது இலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க அவரின் சேவைக்காலத்தில் அவர் ஆற்றிய சேவை மகத்தானது. உயர்ந்த உன்னதமான கல்விச் சேவையை முழுமனதோடு ஆற்றி நின்று எம் மாணவச் செல்வங்களுக்கு ஒளியூட்டிய காலங்கள் என்றுமே நினைவுச் சின்னங்கள் தான்.

நேரம் காலம் பாராது கற்பிப்பதையே தன் வாழ்நாள் பணியாக ஏற்றுக்கொண்டவர். அன்பும் நகைச்சுவையுணர்வுடன் கூடிய கண்டிப்பும் மிக்கவர். அவரின் ஆங்கில வசன நடையும் தமிழ் மொழிபெயர்ப்பும் எங்குமே காண முடியாது.

அவரின் எதிர்கால வாழ்வு ஒளிமயமாக விளங்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு வாழ்த்துகிறேன்! வாழ்க.

நீண்டதொரு கல்விப்பணியாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் எமது மாவட்டத்தின் மூத்த அதிபர் திரு.சி.பாலகிருஷ்ணன் அவர்களது ஓய்வுக் காலம் சீரும் சிறப்புமாக அமைய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன். வாழ்க!

**ச.சுரேன்**
தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டக்கல்விப் பணிப்பாளர்
# திரு.ஐ.குகானந்தராசாவின்
# உள்ளத்திலிருந்து...



அகவை அறுபதை அடைந்த அன்புத் தோழனே! ஆக்கினைகளில் இருந்து விடுபட்டு ஆனந்தம் காணவுள்ளவனே! அரச சேவைக்கு மட்டுந்தானே வயது வரையறை. சமூக சேவைக்கு அது இல்லைத்தானே. அதிபர் சங்கத்தின் தலை மகனே! மாவட்ட அதிபர்களில் பெருமகனே! பல 1AB, 1Cக்களின் முதல்தர முகாமையாளனாக இருந்து வழிநடாத்தியதுடன், சவால்கள் பலதைத் துணிவோடு எதிர்கொண்டவனே! வாழ்த்துகிறேன் மனதார. நீடுழி காலம் நலமோடும், மகிழ்வோடும், வளமோடும் வாழ்க வென. உற்றார் உறவோடு, சுற்றம் சூழ, பேரன், பேத்திகளைக் கண்டு வாழ்கவென.

சேவையின் இறுதிக்காலம் பளை C.Cக்குச் சேவையாற்றினாய். பளைக் கோட்டத்தின் பணிப்பாளராய் என்னை வரவேற்று, அனுசரித்து, ஒன்றிணைந்து பயணித்தாய். அதிபர் பணி என்பது சவால்களும், சிக்கல்களும் நிறைந்தது என்றாலும், அவைகளைச் சாமர்த்தியமாய்க் கையாண்டு சாதனைகளைப் படைத்து நின்றாய். விளையாட்டு, கல்வி, கலைத்துறை என நீ பணிபுரிந்த பாடசாலைகள் முத்திரை பதிக்க, முன்னணித் தலைவனாய் வழிகாட்டி நின்றாய். அக்கராயனில் தொடங்கிய எமது உறவு, பளை வரை நீடித்துள்ளது. அப்பாலும் இது தொடர வேண்டுமென ஆசைப்படுகிறேன். ஆசை நிறைவேறும். அச்சமில்லை நம்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் ஆதங்கப்படுகிறேன். ஓய்வு எனும் பாக்கியத்தை ஒரு வருடம் முந்தி நீ பெற்றுவிடப் போகிறாய். பார்ப்போம். 2020தை எனக்கும் அது நியமாக்குந்தானே!

ஒன்றுகூடல்களிலே பேச்சைவிடப் பழைய, அர்த்தமுள்ள பாடல் களையும் பாடி அனைவரையும் ஈர்ப்பவனே! ஓய்வின் பின் இசைக்குழுவில் சேர்ந்துவிடாதே! பாவம் அவர்களின் எதிர்காலம் உன்னால் பறிக்கப் பட்டுவிடும். பணங்கொடுத்துப் பெற்ற "வண்டிகளை" ஓட்டியதாலோ என்னவோ, பணம் இன்றிக் கிடைத்த "வண்டிகளை" வைத்திருக்கின்றோம். அவற்றிற்கு எங்காவது விலை கிடைத்தால் எனக்கும் கூறு. சந்தைப்படுத்தி விடுவோம். சங்கடத்தை நீக்கிவிடுவோம். வேறென்ன தோழா! நீட்டவில்லை வாழ்த்துமடலை. நிறுத்துகிறேன். நின்று நிதானிக்கின்றேன். மீண்டும் வாழ்த்துகின்றேன். உற்றார், உறவினருடன், சுற்றம் சூழ நீடூழி காலம் இன்பமாய் வாழ்கவென! நலமாய் வாழ்கவென.

**திரு.ஐ.குகானந்தராசா**

கோட்டக்கல்விப் பணிப்பாளர்,

பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமுறையின் குரு ...



கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து கடந்த நான்கு தசாப்தங்களாக கல்விப் புலத்தில் பணியாற்றி இரண்டு தலைமுறைகளைக் கல்வி கற்பித்த ஒரு அதிபராக எமது பளை மத்திய கல்லூரியின் மூத்த அதிபர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் விளங்கி வருகின்றார். நான் ஆண்டு 10 இல் கல்வி கற்றுக் கொண்டிருந்த தர்மபுரம் மகாவித்தியாலயத்தில் கம்பீரமான 20 வயது இளைஞனாக எமது கணித பாட ஆசானாக கற்பிக்க வந்த அந்தக் கால நினைவுகள் இன்றும் பசுமையானவை. அழகான உடையும் கம்பீரமான நடையும் அவருக்கே உரியது. பின்னர் எனது பிள்ளைகளுக்கும் அவரிடம் கல்வி கற்கும் வாய்ப்பும் கிடைத்தது. ஆசிரிய வாண்மை என்பதில் அவர் கொண்டிருந்த அதீத திறன் அவரை விரைவில் ஒரு அதிபராக மாற்றியிருந்தது. வட்டக்கச்சி தெற்கு அ.த.க பாடசாலை, கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளி/ பளை மத்திய கல்லூரி ஆகிய எமது மாவட்டத்தின் முன்னிலைப் பாடசாலைகளில் அவரது செயற்றிறன் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு நல்லாசான் என் பிள்ளைகளின் நல் அதிபர், நமது மாவட்டத்தின் சிறப்பார்ந்த நிர்வாகி, தனது மணிவிழாக் கண்டு மகிழ்வுற்றுள்ள இன்றைய நாளில் அவரின் ஓய்வு காலமும் மகிழ்வுடன் அமையும் என வாழ்த்துகின்றேன்.

**அமரசிங்கம் கேதீஸ்வரன்,**
உதவி திட்டமிடல் பணிப்பாளர்,
மாவட்ட செயலகம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் தாய்ப்பாடசாலையாக விளங்கும் கிளி/பளை மத்திய கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் திரு.சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் அவர்கள் கல்விப் பணியில் இணைந்து பல அர்ப்பணிப்புடன் பல சேவைகளைச் செய்துள்ளார். அத்துடன் பல கல்விமான்களை உருவாக்கியுள்ளார். எனவே அவர் தனது ஓய்வு காலத்தில் நோய்நொடியின்றிச் சீரும் சிறப்புடன் வாழ இறைவனைப் பிரார்த்தித்து மனமார வாழ்த்துகின்றேன்.

**க.குணபாலசிங்கம்**
முன்னாள் அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

எனக்கு விஞ்ஞான பாடத்தைக் கற்பித்து கிளி பளை மத்திய கல்லூரியில் இருந்து மணிவிழா கண்டு ஓய்வு பெறவுள்ள அதிபர் மதிப்புக்குரிய திருவாளர் சி.பாலகிருஷ்ணன் அவர்களது மணி விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கத் தலைவர் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

20ஆம் நூற்றாண்டில் இரண்டு தசாப்தத்திற்கு மேலாகவும் 21ஆம் நூற்றாண்டில் ஏறக்குறைய இரண்டு தசாப்தத்தை அண்மித்தும் தனது கல்விப் பணியை நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆற்றிய இவர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நுவரெலியா போன்ற மாவட்டங்களில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் சிறப்பாகப் பணியாற்றிய இவர் தனது அதிபர் சேவையில் கிளிநொச்சி மாவட்டத்தின் புகழ் பூத்த கல்விக்கூடங்களாகிய அக்கராயன் ம.வி, இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை, இந்துக் கல்லூரி, பளை மத்திய கல்லூரி ஆகியவற்றில் அதிபர் கதிரையை அலங்கரித்துப் பல ஆயிரம் மாணவர்களின் உருவாக்கத்தில் அர்ப்பணிப்பான சேவையாற்றி ஓய்வுபெறும் அதிபர் அவர்கள் எமது மாவட்டம் யாழ்ப்பாண மாவட்டத்துடன் இணைந் திருந்த காலத்தில் கண்ணகை அம்மன் வித்தியாலயம், தருமபுரம் மத்திய கல்லூரி போன்றவற்றில் ஆசிரியராக அளப்பரிய பணியாற்றியுள்ளார் என்பதை நான் சாட்சியாக இருந்து சான்றுப் படுத்துவதில் மகிழ்வடைகிறேன்.

எமது மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட அதிபர் சங்கத்தை உருவாக்கு வதற்கு அயராது உழைத்து நீண்ட காலமாகச் சங்கத்தின் நிர்வாகத்தைக் கட்டிக்காத்து வளர்த்த பெருமையும் முன்னாள் அதிபர்கள் சங்கத் தலைவர் என்ற வகையில் திரு.சி.பாலகிருஷ்ணன் அவர்களையே சாரும்.

நீண்டதொரு கல்விப்பணியாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் எமது மாவட்டத்தின் மூத்த அதிபர் திரு.சி.பாலகிருஷ்ணன் அவர்களது ஓய்வுக் காலம் சீரும் சிறப்புமாக அமைய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன் நீடூழி வாழ்கவென.

**ச.பூலோகராஜா**
தலைவர்,
அதிபர்கள் சங்கம்,
கிளிநொச்சி மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
CEYLON TAMIL TEACHERS' UNION
தலைமைப் பணிமனை. 131.கண்டி வீதி. யாழ்ப்பாணம்.
Head Office. 131.Kandy Road. Jaffna.(Reg.NO: 5001)
Email:tamilteachers@gmail.com Web:www.tamilteachers.com



## மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

### உயர்திரு. சின்னத்தம்பி பாலகிருஷ்ணன்

பலநூறு சவால்களைக் கடந்து, பணிகளில் மேலோங்கி நிற்கும் உயர்திரு.சி.பாலகிருஷ்ணன் அவர்களை வாழ்த்துவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மகிழ்ச்சிகொள்கின்றேன்.

அனைத்திலும் உண்மை உணர்வும், அசைக்க முடியாத துணிச்சலும் கொண்ட இவரது உயரிய பல பண்புகள் கண்டு வியந்திருக்கின்றேன்.

புத்தூரில் பிறந்து அங்கேயே கல்வி கற்று, கணித ஆசானாக உயர்ந்து, இன்று முதலாம் தர அதிபராக ஓய்வு பெறும் திரு.சி.பாலகிருஷ்ணன் அவர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் எமக்கு மூத்தவராக இருந்து, இடரான காலங்களில் பல பணிகளை முன்னெடுத்தவர். பல்வேறு பதவிகளை அலங்கரித் தவர். எமக்கு நல்லதொரு ஆலோசகர்.

மற்றவர்களின் மனதை அறிந்து, விட்டுக்கொடுத்து, விடாப்பிடியை விலக்கி தனது குழந்தைகளையும், தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளையும் சிறப்பாக வழிப்படுத்தியவர். ஆசிரியத்துணையை மணந்ததால் இவருக்கு ஆசிரியப் பணியோ அன்றி அதிபர் பணியோ அவ்வளவு கடினமானதாக இருந் திருக்க முடியாது.

ஆனாலும் இன்றைய உலகு சவால் மிக்கது. அதிபர்களோ, ஆசிரியர்களோ பணி செய்ய முடியாத அளவுக்கு பக்குவங்கள் பலவாறு சிதறிப் போயுள்ள காலம் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் திரு.சி.பாலகிருஷ்ணன் அவர்கள் தனது பணியில் தான் கண்ட வெற்றிகளை தன் பின்னே வரும் சந்ததிக்கு எடுத்துச்சொல்லி நல்ல ஆலோசகராக எமக்கும், சமூகத்திற்கும் தொடர்ந்தும் பணிசெய்ய வேண்டும் எனக் கேட்டு, பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.




சரா.புவனேஸ்வரன்.
*சிரேஷ்ட விரிவுரையாளர்,*
பொதுச் செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.


சரா.புவனேஸ்வரன்
பொதுச் செயலாளர்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
131, கண்டி வீதி, யாழ்ப்பாணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள புவியில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் தான் விரும்பும் துறையில் பணியாற்ற விரும்புகின்றான். ஆனால் சிலருக்கு அவ் விருப்பம் நிறைவேறுகின்றது. பலருக்கு கிடைத்த துறை யில் பணியாற்ற வேண்டிய நிர்ப்பந்தம்.

இதில் எது எமது கல்லூரி அதிபருக்குப் பொருந்துமோ அது அவரது உள்மனமே அறியும். எது எவ்வாறோ கல்வித் துறையில் 41 வருடங்கள் பல சவால்களுக்கு மத்தியில் பணியாற்றி ஓய்வு பெறும் அவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அவரோடு எனக்குப் பணியாற்றக் கிடைத்த காலங்கள் ஏறத்தாழ இரண்டு வருடங்கள் மாத்திரமே. இக்காலப்பகுதியில் நான் அவரிடமிருந்து கற்ற விடயங்கள் பல உள்ளன என்பதை இதில் எழுத வேண்டும் என்பதற் காகச் சொல்லவில்லை. உண்மையாக என் ஆழ்மனத்திலிருந்து கூறு கின்றேன். தனி மனித ஆளுமை என்பது மனிதனுக்கு மனிதன் மாறுபட்டது. நாம் எல்லோரும் ஒரு தலைமைத்துவத்திடமிருந்து எதிர்பார்ப்பது நிறைய உண்டு. அது மனித இயல்பு. ஆனால் அது ஒரு இலட்சிய எதிர்பார்ப்பு. நாம் எதிர்பார்த்தவை எல்லாம் ஒரு தலைமைத்துவத்திடமிருந்து கிடைக்கும் என்பது கற்பனையே. பாலா சேரிடமும் நான் கற்ற பல தலைமைத்துவப் பண்புகளைக் கண்டேன். "தன்னுடன் பணியாற்றும் ஒவ்வொருவரினதும் பின்புலம், குடும்பச் சூழல், பொருளாதார நிலை, அதிகார பலம் என்பவற்றை அறிந்து அவர்களைக் கையாளும் விதம்"

மேலே நான் குறிப்பிட்டது அவரது தலைமைத்துவப் பண்பிற்கு ஓர் எடுத்துக்காட்டு. இவ்வாறே தன்னகத்தே பல தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டு தன்னாலான பணியைக் கல்வி உலகிற்கு ஆற்றி ஓய்வு பெறும் எமது கல்லூரி அதிபரும் அவரது குடும்பமும் இறையாசிகள் பெற்று வாழ இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**க.ருகுணன்**
பிரதி அதிபர்,
(அதிபர் தரம் III)
கிளி/பளை மத்திய கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவிரு ஆண்டில் முதல்வருடன் நாம்



பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்தின் பளைக் கல்விக் கோட்டமதில் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் பாடசாலைகளுள் தாய்ப்பாடசாலையாக நிமிர்ந்து நின்று மானிட வாழ்வில் அரும்பெரும் சொத்தாம் கல்விச் சேவைதனை வழங்கி தலை சிறந்து விளங்கும் பளை மத்திய கல்லூரியின் அதிபராக கடமையாற்றி அகவை அறுபதில் ஓய்வு பெற்று மணிவிழாக் காணும் அதிபர் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

இப்பாடசாலையின் ஆரம்பம் முதல் இன்று வரை பல வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், நீதிபதிகள் மட்டுமன்றி பல கல்வியாளர்களையும், அறிவுசார் பெரியோர்களையும், புத்தி ஜீவிகளையும் உருவாக்கிய பெருமை எமது பளை மத்திய கல்லூரிக்கே உரியதாகும்.

இவ்வகையில் புகழ்பூத்து நிற்கும் இப்பாடசாலையில் மிகவும் திறமை கொண்ட அதிபர்கள் கடமையாற்றியுள்ளார்கள். அந்த வரிசையிலே அன்பும், அறிவும், பண்பும், ஆற்றலும் கல்விப்புலத்திலே நீடிய அனுபவமும் தேர்ச்சியும் கொண்டவரான உயர்திரு. சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் அவர்கள் கடந்த ஆறு ஆண்டுகள் கடமையாற்றியுள்ளார்.

யாழ்ப்பாணம் வாதரவத்தையூரை பிறப்பிடமாகக் கொண்ட அதிபர் அவர்கள் 01.06.1978ல் முதல் நியமனத்தைப் பெற்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் கிளி /தட்டுவன் கொட்டி கண்ணகை அம்மன் வித்தியாலயம், கிளி/ தர்மபுரம் மத்திய கல்லூரி, நு/நாணு ஓயா- சிங்கள தமிழ்வித்தியாலயம், யா/காங்கேசன்துறை மகாவித்தியாலயம், யா/நடேஸ்வராக் கல்லூரி, யா/குட்டியபுலம் அ.த.க பாடசாலை, கிளி/அக்கராயன் மத்திய கல்லூரியிலுமாக (20) இருபது வருடங்கள் ஆசிரியராகக் கடமையாற்றி அனைவரது நன் மதிப்பையும், பாராட்டுக்களையும் பெற்றதுடன் கிளி/அக்கராயன் மத்திய கல்லூரி, கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை, கிளி/இந்துக்கல்லூரி யிலும் அதிபராகக் கடமையாற்றி தனது சேவைக்காலத்தின் இறுதியில் எமது பளை மத்திய கல்லூரியிலுமாக இருபத்தியொரு வருட அதிபர் சேவையினையும் ஆற்றி தனது வாழ்நாளில் 41 வருடங்களை கல்விச் சேவைக்கு அர்ப்பணித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கல்விமாணி" கல்வித்தகைமையைக் கொண்ட இவர் பயிற்றப்பட்ட கணிதம், பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா, கல்வி முதுமாணி தொழிற் தகைமையினையும் பெற்றவராவார். சேவை என்பதிலே "இலங்கை அதிபர் சேவை தரம் 1" ஐப்பெற்று சிறந்த ஓர் அதிபராகத் திகழ்வதுடன் கல்வி அமைச்சின் தேசிய மட்ட சிறந்த அதிபர் விருது (குரு பிரதீபா பிரபா - 2015) , கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கத்தினால் "தமிழ் எழில்" விருது - 2014 இவ்விருதுகளையும் பெற்றது மட்டுமன்றி ஆசிரியர், கொத்தணி உதவியாளர், அதிபர் என்றதுடன் கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்கத் தலைவராகவும் பதவிகளை வகித்து தனது சேவையில் மேலும் சிறப்புற்றிருக்கின்றார்.

எமது கல்லூரியில் அவரைப் பற்றிக் கூறுவதனால் ஆசிரியர்களின் கடமைப் பொறுப்பினைக் கவனிப்பது மட்டுமன்றி மாணவர்களின் வரவொழுங்கு, அவர்களின் சீருடை, பாதணி, கழுத்துப்பட்டி, சிகையலங்காரம், கல்வி, விளையாட்டு, கலை, கலாசாரம், பண்பாடு, ஒழுக்கம், சுகாதாரம் அனைத்தையும் அன்றாடம் கவனிப்பதில் நேர்த்தியாக இருந்தார்.

கண்ணிலே கண்ணாடி உண்டோ இல்லையோ கண்ணாடி அறைக்குள் இருக்கின்ற பொழுதும் கூட அவர் கண்கள் அனைத்தையும் அவதானித்த வண்ணமேயிருக்கும். கையில் கம்பில்லாத போதும் தவறு வரும் மாணவரை அன்பினால் அவர்களை அணுகி அறிவுரைகள் பல சொல்லி புத்திமதிகளைக் கூறி இயன்றவரை நேர்கோட்டில் நடக்க வைப்பார்.

ஆசிரியர்களுக்கிடையில் மாணவர்களுக்கிடையில் ஏற்படும் கருத்து முரண்பாடுகளை மிகவும் இலகுவாக தீர்த்து வைப்பதில் திறமை கொண்டவர். பாடசாலை வேளையில் மட்டுமன்றி ஏனைய நேரங்களிலும் பாடசாலைப் பணியாளர்களுடன் பாடசாலை வளாகத்திற்குள் கண்ணும் கருத்துமாக இருப்பார். பாடசாலை அபிவிருத்திப்பணியிலே பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கு வழிகாட்டியாக உறுதுணையாக இருந்து ஒத்துழைப்பார்.

பாடசாலையில் நடைபெறும் பரிசளிப்பு விழா, வாணிவிழா, முத்தமிழ் விழா, பிரிவுபசார நிகழ்வுகள், வருடாந்த திறனாய்வுப் போட்டி, ஒளிவிழா, ஒன்று கூடல்கள் அனைத்தையும் தேவைக்கேற்றவாறு அவ்வவ் வேளைகளில் பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழையமாணவர் சங்கம், நலன் புரிச்சங்கம், பாடசாலை முகாமைத்துவக் குழு, உயர்தர மாணவர் ஒன்றியம் ஆகிய அமைப்புக்களுடன் கலந்துரையாடி தலைமை தாங்கி சிறப்புற நடாத்தி வைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் அவர்களை சிறந்த ஓர் கலைஞனாகப் பார்க்கிறேன். மிகவும் கலை ஆர்வம் கொண்டவர், அனைவரும் கேட்டு ரசித்து மகிழும் வகையில் சிறப்பாகப் பாடும் திறமையுடையவர். இந்த வகையில் வருடாந்த மாணவர் ஒன்று கூடலில் அநேகமாக ஆசிரியர்கள், மாணவர்களது விருப்பிற்கும், நெருக்குதலுக்கும் நல்ல பெயரை வாங்க வேண்டும் பிள்ளைகளே, நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி, தூங்காதே தம்பி தூங்காதே, நாளை நமதே, ஒளிமயமான எதிர்காலம் ஆகிய பாடல்களைப் பாடி பாட்டின் மூலம் புத்திமதி கூறுவார். தமிழ்த்தினப்போட்டி போன்ற போட்டி நிகழ்வுகளுக்கு நாடக நிகழ்வுகளை அத்துறை சார்ந்த ஆசிரியர்கள் பயிற்றுவித்த போதிலும் தானும் அதனைச் சீர் பார்த்து மேடையேற்றுவதற்கு முன்னிப்பார். எமது பாடசாலை முன்னணி பெற வேண்டும். வெற்றி பெற வேண்டும் எனும் குறிக்கோளிலும் பேரவாவிலும் தனது பணத்தைச் செலவளித்து அண்ணாவியார் பக்கவாத்தியக் கலைஞர்களை அழைத்து ஆசிரியர்களுக்கு ஒத்துழைப்பார்.

அதிபரது காலத்தில் பல அபிவிருத்திப் பணிகள், செயற்றிட்டங்கள் நடைபெற்ற போதிலும் அனைவராலும் பாராட்டக்கூடிய வகையில் இதுவரை காலமும் இப்பாடசாலையில் மாணவர்கள் விளையாட்டுப் பயிற்சியினைப் பெறவோ, விளையாட்டுப் போட்டியினை நடாத்தவோ இரவலாகப் பாவித்து வந்த காணியினை பழைய மாணவர் சங்கத்தின் குறிப்பாக இச்சங்கத்தின் செயலாளர் திருமதி இராசாம்பிகை குமாரவேலு அவர்களின் அயராத முயற்சியினால் பாடசாலைக்கென கொள்வனவு செய்யப்பட்டமை பாராட்டுதலுக்கும் நன்றிக்கும் உரியதாகும்.

அதிபர் அவர்கள் அனைத்து மாணவர்களையும் தன்பிள்ளைகள் போன்றே கருதுவார். எமது அதிபர் அவர்களுக்கு அன்பான மனைவி (ஆசிரியை ) ஆசையாக புத்திரனும் புத்திரியும் பல்கலைக்கழக மாணவனும், மாணவியுமாகக் கொண்ட அருமையான குடும்பம். சேவையிலிருந்து ஓய்வு பெறும் அதிபர் அவர்கள் மேன்மேலும் கல்விச் சமூகத்திற்கு துணைநிற்க வேண்டும். இனிதான குடும்பத்தினருடன் இன்புறவே பல்லாண்டுகாலம் நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**திரு.து.திரவியரத்தினம்**

செயலாளர்,

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (SDS)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

கிளி/பளை மத்திய கல்லூரியின் அதிபர் திரு.சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் அவர்களின் மணிவிழாச் சிறப்பு மலராக வெளிவரும் "பாலாவின் பயணம்" மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். இவருடைய 41 வருட சேவையில் பல சாதனைகளைப் படைத்து பாடசாலையின் வளர்ச்சியில் பங்கு கொண்டுள்ளார். கற்றல் பெறுபேறு, இணைப்பாடவிதான செயற்பாடுகள் மேலோங்கிக் காணப்படுவதுடன் பல வைத்தியர்களையும், பொறியியலாளர்களையும் உருவாக்கி மாவட்ட நிலை, தேசிய நிலையில் முதனிலை மாணவர்களை உருவாக்கிய அதிபர் என்ற மகுடத்தினைச் சூடியுள்ளார். வர்த்தகத் துறையில் 3A சித்தி பெற்று சாதனை படைக்க வழிகாட்டியுள்ளார். ஆங்கில மொழிக் கற்கைநெறியினை இப் பாடசாலையில் உருவாக்கிய பெருமைக்குரியவர்.

அதிபர் திரு.சி.பாலகிருஷ்ணன் அவர்கள் பழைய மாணவர் சங்கச் செயலாளர் திருமதி.இ.குமாரவேலு ஆகிய என்னுடனும் ஏனைய நிர்வாக சபை உறுப்பினர்களுடனும் இணைந்து ஏனைய உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் பளை மத்திய கல்லூரிக்கென இரண்டு கோடி பெறுமதியுள்ள காணியை பழைய மாணவர்கள், புலம்பெயர் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளின் நிதியினைப் பெற்றுப் பாடசாலைக்குரிய விளையாட்டு மைதானமாகக் கல்லூரியின் சொத்தாகக் கிடைத்தது. அதிபர் பாலகிருஷ்ணன் காலத்திலேயே இக்காணியைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்ற எனது ஆதங்கமும் எதிர்பார்ப்பும் மணிவிழா நாளுக்குள் நிறைவடைந்ததை எண்ணி புளகாங்கிதமடைகின்றேன். மனநிறைவு பெற்ற மகிழ்வில் மலருக்கான வாழ்த்துச் செய்தியைத் தருவதில் பேருவகையடை கின்றேன்.

இவர் ஒரு சிறந்த சமூக சேவையாளர் என்பதைக் கல்விப்புலம் சார்ந்தோர் மட்டுமல்ல அவரிடம் பயன் பெற்ற எல்லோரும் நன்கறிவர். அனுபவத்தின் பொக்கிசமாக, ஆளுமையின் சிகரமாக மிளிர்ந்த இவர் ஓய்வு காலத்திலும் பொதுப்பணி புரிந்து தனது குடும்பத்துடன் நலமாக நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.

**திருமதி.இ.குமாரவேலு**
(ஓய்வு பெற்ற அதிபர்)
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



பளை மத்திய கல்லூரி முதல்வர் உயர்திரு.சி.பாலகிருஷ்ணன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ் வடைகின்றேன்.

மாந்தர் மனத்துக்கும் பலவீனத்துக்கும் அடிபணியாமல் தான் எடுத்துக்கொண்ட செயல் முடியுமாறு வினைகளை ஆளும் தன்மை கொண்ட ஆழ்வினைத்திறன் உடையவர்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" - குறள்

அதாவது ஒருவர் எந்தத் துறைக்கு வந்தாலும் அந்தத்துறை புகழ் பெறும் படியாகவும், அதனால் புகழ் அடைபவராகவும் செயலாற்றுதல் வேண்டும். அந்தச் செயலாற்ற இயலாதவர்கள் அந்தத் துறைக்கு வராமல் இருப்பதே நல்லது என்பது வள்ளுவம். அந்த வகையில் வள்ளுவரின் வாக்கிற் கேற்ப முதல்வர் கல்வித்துறையில் எங்கெங்கு பணியாற்றினாரோ அங்கெல்லாம் தனது தனி முத்திரையைப் பதித்துப் பணியாற்றிய ஊரில் உள்ள மக்களும் போற்றும் வகையில் புகழ் பெறும் வகையில் அர்ப்பணிப் புடன் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். தான் பதவியால் பெருமை பெற்றதை விட தான் வகித்த முதல்வர் எனும் பதவிக்குப் பெருமை சேர்த்துள்ளார். அத்துடன் பழகும் மனிதப் பண்பாடு கொண்டவர். நயத்தக்க நாகரிகம் கொண்டவர். தமிழ்ச்சங்கத்தின் தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்குபவர். உயர்ந்த உள்ளம் உடையவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மீது செறிவார்ந்த ஈடுபாடும் நனிமிக வேட்கையும் ஈடில்லாப் பற்றும் கொண்டவர். முதல்வர் பணியில் அர்ப்பணிப்புடன் ஆற்றிய பணியைப் பாராட்டி தமிழ்ச்சங்கம் நன்முதல்வர் விருதை வழங்கிப் பெருமை தேடிக்கொண்டது.

மணி என்பது மண்ணுதல்; நீராட்டுதல் உடையது. ஒருவரை மாசற்ற மணியாகக் கருதி எடுக்கப்படும் உயரிய விழா இது. இவர் உண்மையில் மாசற்ற மணியாகவே வாழ்பவர். இவ்விழாவிற்கு முற்றிலும் தகுதி உடையவர்.

இவர் வாழ்வில் அடைய வேண்டிய பேறுகளையெல்லாம் அடைந்துள்ளார். இனி இவர் பாதுகாப்பாக அமைந்து மக்களுக்கும் சுற்றத்தவர்களுக்கும் அறிவு, அற ஒழுக்கங்களைக் கற்பித்து வழிகாட்டுவதே கடமையாகும். எனினும் தமிழ்ச்சங்கத்திலும் இணைந்து ஏற்கனவே வழிகாட்டியது போல் தொடர்ந்து வழிகாட்ட வேண்டும் என்று கேட்டு நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றேன். வாழ்க வளமுடன்.

வாழ்த்துரை வழங்க வாய்ப்பை வழங்கிய விழாக் குழுவினருக்குத் தமிழ்த்தாயின் பெயரால் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ்ப்பணியில்,

**வே.இறைபிள்ளை**

நிறுவுநர்,

தமிழ்ச்சங்கம் - கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் உயர்தரப் பாடசாலையாகக் காணப்படும் எமது பாடசாலை 1957ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு இன்றுவரை பல தலைசிறந்த அதிபர்களை இனங்கண்டுள்ளது. அவ்வகையில் இப்பள்ளியில் 2014ஆம் ஆண்டு அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்ட திரு.சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் அவர்கள் பாடசாலையில் பல சாதனைகளை உருவாக்கியவராகக் காணப்படுகின்றார். இணைப் பாடவிதான செயற்பாடுகளில் மாவட்ட, மாகாண, தேசிய மட்ட விருதுகளை வெல்வதற்கு ஒரு வழிகாட்டியாகச் செயற்பட்டுள்ளார் என்றால் மிகையாகாது.

கணித பாட ஆசிரியர் என்பதற்கு அமைவாக கணித பாடத்தை O/L மாணவர்களுக்கு விடுமுறைகளை விசேட கணித வகுப்புக்களை நடத்தி 43% கணிப்பிட்ட பெறுபேற்றை 86% மாக 2017ஆம் ஆண்டு பரீட்சை முடிவில் மாற்றி சாதனைக்கு முதல் காரணமாக அமைந்துள்ளார்.

எமது மாவட்டத்தின் முதல் தரமான பாடசாலையில் ஒன்றாக மாற்றுவதற்கு முதல் கர்த்தாவாகக் காணப்பட்டுள்ளார்.

பச்சிலைப்பள்ளி என்ற பெயருக்கு ஏற்ப எமது பாடசாலையை பசுமை நிறைந்த பாடசாலையாக மாற்றியமைத்தார். தனது நேரம் முழுவதையும் பாடசாலைக்காக அர்ப்பணித்து செயற்படும் திறமையாளன்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்துவிடல்"

என்பதற்கு அமைய தனது கொள்கையாகக் கொண்ட உத்தமன்.

ஓய்வு காலத்தில் அவரும் அவரின் குடும்பத்தவரும் இனிதே வாழ இறைவன் துணை புரிய வேண்டுகிறேன்.

**சின்னத்தம்பி வதனராசா**
தலைவர்,
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் 10 சத வீத மாணவர்கள் தந்தையை இழந்தவர்கள்

நேர்காணல்:
கிளிநொச்சியிலிருந்து கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன்

## அதிபர் பாலகிருஷ்ணன் கூறுகிறார்

வன்னியில் நடைபெற்ற போருக்குப் பின்னர் இப்போது அங்கே மக்கள் மீண்டும் மீளக் குடியமர்ந்து வருகிறார்கள். ஒரு பெரும் போருக்குப் பின்னே அந்தப் போரில் சிக்கிய மக்கள் மீளக்குடியேறுவதென்பது மிகவும் முக்கியமான ஒரு உணர்வு பூர்வ நிகழ்ச்சி.

அவர்கள் தங்கள் கூரையில்லாத வீடுகளுக்கு வருகிறார்கள். தங்களுடைய குடும்ப உறுப்பினர்களில் சிலரை இழந்துவிட்டு வருகிறார்கள். தாங்கள் சேர்த்த பொருட்களை எல்லாம் எங்கெங்கோ பறி கொடுத்து விட்டு வெறுங் கையோடு வருகிறார்கள்.

இப்படி வருகின்ற மக்களின் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளும் இடிந்தும் சிதைந்தும் தான் இருக்கின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகம் சேதங்களில்லாத பாடசாலை கிளி இந்துக்கல்லூரிதான். ஆனால் இந்தப் பாடசாலைக்கும் கூரைகள் பல இருக்கவில்லை. ஆனால் இந்தக் கூரைகள் இப்போது செப்பனிடப்பட்டிருக்கின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முன்னணிப் பாடசாலைகளில் குறைந்து பின்னர் மெல்ல மெல்ல அதிகரித்து வந்தது. இறுதியாக 2008 இல் நாம் இங்கிருந்து இடம்பெயர்ந்தபோது 1200 மாணவர்கள் இருந்தனர். இது ஆண்டு ஆறுக்கு மேல் வகுப்புகள் உள்ள கல்லூரி. இப்போது இந்த மாணவர் தொகை 600 ஆக உள்ளது.

இந்த மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கு 59 ஆசிரியர்கள் இருக்கின்றனர். இது போதாது. விஞ்ஞானம், இரசாயனவியல், மனையியல் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. இந்தப் பாடங்களுக்கு நிரந்தரமற்ற ஆசிரியர்களைக் கொண்டே வகுப்புகளை நடத்துகிறோம். ஆனால் எங்கள் பாடசாலைக்குத் தேவையான வளங்களை முடிந்த அளவுக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் ஸ்ரீகுருவாற்று பெற்றுத் தருவதற்கு முயற்சிக்கிறார். ஆனால் அவராலும் ஒரு எல்லைவரைதான் இந்த வந்து தங்கி இருந்து பாடசாலைக்கு வருகிறார்கள். ஆனால் அவர்கள் படுகின்ற சிரமம் பெரிது.

தூர இடங்களில் இருந்து வருகின்ற ஆசிரியர்கள் நேரத்துக்கு வருவதிலும் திரும்பிப் போவதிலும் பிரச்சினைகள் இருக்கின்றன. நிலைமைகளைக் கருத்திற் கொண்டு மாணவர்களின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்படுகிறோம்.

இந்த நிலையில் எங்களுடைய மாணவர்களின் கல்வித்தரந்தான் பாதிக்கப்படப் போகிறது. நாங்கள் அடுத்த ஆண்டில்தான் ஒரு முன்னேற்றத்தைக் கல்வியில் காண முடியும் என நம்புகிறோம்.

**கேள்வி: ஆனால் இந்த ஆண்டும் நாங்கள் சில இலக்குகளை எட்டுவதற்காக கடுமையாக முயற்சிக்கிறோம். எங்களுக்கு தொடர்ந்தும் ஏதோ ஒரு வகையில் சோதனைக் காலந்தான்.**

**உங்களின் கல்லூரியில் போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மாணவர் கள் இருக்கிறார்களா?**


பதில்: இருக்கிறார்கள். இது பல வகைகளில் உண்டு. சிலருக்கு கால் இல்லை. சில பிள்ளைகள் காயமடைந்து இப்போது தேறியிருக்கிறார்கள். தகப்பனை இழந்த நிலையில் சில பிள்ளைகள் இருக்கின்றனர். அதைப்போல தாயை இழந்த பிள்ளைகளும் உண்டு. தாயும் தந்தையும் இல்லாத பிள்ளைகளும் இருக்கிறார்கள்.


கேள்வி: இந்தத் தொகை எவ்வளவு [illegible]


[illegible] ருக்கின்றன. வடமாகாண ஆளுநர் இந்த வசதியைச் செய்தார். இன்னும் குறைந்தது 150 கைக் கின்களாவது இருந்தால் ஓரளவு சமாளிக்கலாம். ஆனால் வசதி கொறுடன், தள்ளு வண்டியுடன் வரும் பிள்ளைகளும் இருக்கிறார்கள். [illegible]

அலைப்பட்டவர்கள் என்பதால் எங்களுக்கு மக்கள் [illegible] கிராமங்கள் புரியும். இதே வேளை இடம் பெயர்ந்து வந்த பின்னும் நாங்கள் விளையாட்டுப் போட்டியை நடத்தியிருக்கிறோம்.

[illegible]







கண்காட்சி கராத்தேயின் போது வீரர் மற்றும் கராத்தே ஆசிரியரின் அசைவுகளையும், பதக்கம் வென்றோர் விருந்தினர்களுடன் நிற்பதையும் காணலாம்

# மாகாண கராத்தே போட்டியில் பளை மத்திய கல்லூரி அசத்தல்

(யாழ்ப்பாணம்)


இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட மாகாண மட்ட கராத்தே போட்டியில் கிளிநொச்சி பளை மத்திய கல்லூரி வீரர்கள் ஆறு தங்கம் உட்பட 16 பதக்கங்களை வென்று அசத்தியுள்ளனர்.

இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் வடக்கு மாகாண வீர,வீராங்கனைகளுக்கான கராத்தே போட்டி அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் முதன் முறையாகப் பங்குகொண்ட கிளிநொச்சி பளை மத்திய கல்லூரி வீரர்கள் ஆறு தங்கம் உட்பட 16 பதக்கங்களை வென்று அசத்தியுள்ளனர். பதக்கம் வென்ற வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளருக்கான பாராட்டு பாடசாலையின் பரிசளிப்பு விழாவின் போது இடம்பெற்றது. கடந்த 13ஆம் திகதி கல்லூரி அதிபர் சி. பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வின்போது பதக்கம் வென்ற வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர் சென்.சே. விஜயரர் ஆகியோரின் கண்காட்சி கராத்தே போட்டியும் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த. கலாமணி, சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. இருதயராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எஸ்.பி.)





பளை மத்தியகல்லூரி, பளை இந்து ஆரம்ப வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி பயிலும் 60 மாணவர்களுக்கு ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டிகள், காலணிகள் , புத்தகப்பைகள் என்பன அண்மையில் பளை மத்திய கல்லூரி ஆசிரியர் ம. மதிதாஸின் அனுசரணையில் வழங்கப்பட்டுள்ளன. ஆசிரியர் ம. மதிதாஸ், பளை மத்திய கல்லூரி அதிபர் சி. பாலகிருஷ்ணன் ஆகியோர் துவிச்சக்கர வண்டிகள் வழங்குவதையும், உதவிகள் பெற்றுக் கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த (உ/த) பரீட்சை-2015

## மாவட்ட நிலையில் முதலிடம் பெற்றோர் பெயர் விபரம்



### கிளிநொச்சி



கலைப்பிரிவு
மாசில்லாமணி அருள்ஸ்ரீபன்
(3ஏ)
(கிளி/பளை மத்திய கல்லூரி)




## பாராட்டும் வாழ்த்துக்களும்

2015 ஆம் ஆண்டு அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் திறனாய்வில் சாதனை படைத்த மாணவர்கள்



| வயதுப் பிரிவு | பெயர் | நிகழ்ச்சி | நிலை |
|---|---|---|---|
| 21 பெண்கள் | செல்வி.யோ.சுகித்ரா | உயரம் பாய்தல் | 4 |
| 21 பெண்கள் | செல்வி.யோ.சுகித்ரா | கோலூன்றி பாய்தல் | 4 |
| 17 ஆண்கள் | செல்வன். சி. தசாந்தன் | கோலூன்றி பாய்தல் | 4வர்ண விருது |

இவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் எமது கல்லூரி 'நல்லதிபர்' விருதுபெற்ற



**சின்னத்தம்பி பாலகிருஷ்ணன்**
B.Ed,M.Ed,D.S.M, Maths.Trd, SLPS-I

Best Wishes

கல்லூரிச் சமூகம்
கிளி பளை மத்திய கல்லூரி.




கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் இலண்டன் விமலதாசன் சந்திராதேவி தம்பதியினரின் புதல்வி அமரர் அபிராமி நினைவாக திருவள்ளுவர் விழா அண்மையில் இடம்பெற்றபோது, கல்வித் துறைக்கான விருதினை பளை மகா வித்தியாலய அதிபர் பாலகிருஷ்ணன் கிளிநொச்சி மாவட்ட கல்விப்பணிப்பாளர் முருகவேலிடமிருந்து பெற்றுக்கொள்வதையும், இலக்கியத் துறைக்கான இலக்கியச் செல்வர் விருதுபெற்ற சமுகானந்தனை வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா கௌரவிப்பதையும், பாடசாலை மாணவிகளின் நடனநிகழ்வினையும், விழாவில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் இங்கு காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுதுகொண்ட ஆலமரம்



எமது பாடசாலையின் அதிபர் திரு.சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் அவர்களின் மணிவிழாச் சிறப்பிதழாக வெளிவரும் "பாலாவின் பயணம்" மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

எமது அதிபர் 41 வருடகால அரச சேவையை நிறைவு செய்து 22.02.2019 அன்று ஓய்வு பெறுகின்றார். சிறந்த அதிபராக, சமூக சேவையாளனாக, நேர்மை, பொறுமை, கணிதத்தில் மிகுந்த ஆற்றல், நல்லறிவு, புன்முறுவல், வள முகாமை, தூர நோக்கு என்னும் பல பண்புகளைத் தன்வசம் கொண்டவர்.

எமது அதிபரிடமிருந்து நிறைய விடயங்களைக் கற்றுக் கொண்டேன். சவால்கள் நிறைந்த இன்றைய சமூகத்தில் எமது அதிபர் போன்ற அர்ப்பணிப்பு மிகுந்த அதிபரைக் காண்பது அரிது.

அறுபது அகவையிலும் இளமைத்துடிப்புடன் "நிமிர்ந்த நன்னடையாளனாக" பழைய பாடல்களை இசையுடனும், இரசனை உணர்வுடனும் பாடி அனைவரது உள்ளங்களிலும் இடம் பிடித்த உத்தமனார். இவர் தனது ஓய்வு நிலையில் சமூகப் பணியுடனும், மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்களோடு சீரும் சிறப்புடனும் உடல் நலத்துடன் பல்கலையும் பெற்று நீடூழி வாழ மன நிறைவுடன் வாழ்த்துகின்றேன்.

**ச.வசந்தராணி**
உப அதிபர்,
கிளி/பளை மத்திய கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



வளமும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் அமைந்துள்ள கிளி/பளை மத்திய கல்லூரியானது 14 பாடசாலைகள் இயங்கும் இக்கோட்டத்தில் ஒரே ஒரு உயர்தரப் பாடசாலையாக இயங்குகின்றது.

அவ்வாறான வளம்மிக்க பாடசாலையை 2013ஆம் ஆண்டு துணிச்சலுடன் இறுதிக்கால சேவையாகப் பொறுப்பேற்று எப்பொறுப்பை யும் தன்னகத்தே மட்டும் என்று வைத்திருக்காது ஒவ்வொரு வேலைத் திட்டங்களையும் குறிப்பாகப் பாடசாலை அபிவிருத்தி வேலைகளைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஊடாகவும், பாடசாலை நிர்வாக வேலை களை அதற்குப் பொறுப்பான ஆசிரியர்கள் ஊடாகவும் முக்கியமாக நிதியைக் கூட தான் கையாளாது எல்லாவற்றையும் முகாமைத்துவம் செய்து சிறந்த முறையில் செயற்படுத்திய பெருமை மிக்க அதிபராகத் திகழ்ந்துள்ளார்.

இவருடைய சிறந்த ஆளுமையை கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்க தலைமைத்துவம் கூட எமக்கு எடுத்து வெளிப்படுத்துகிறது. இவரது பாடசாலை தலைமைத்துவக் காலத்தில் கல்வி, கலாசார செயற்பாடுகள் கோட்ட, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் பெருமையைத் தேடித் தந்துள்ளது.

"ஒளியொருவருக்கு உள்ள வெறுக்கை இழி ஒருவற்கு அஃது
திறந்து வாழ்தும் எனல்"

ஒருவருக்குப் பெருமை பிறர் செய்ய முடியாத நல்லன செய்வேன் என்று எண்ணும் மன ஊக்கமே என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு ஏற்ப அதிபர் தன்னாலான நற்பணிகள் பலவற்றை ஆற்றி ஓய்வு நிலையை அடையவுள்ளார். அவருக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இதன் பொருட்டு மணிவிழா சிறப்பு மலர் வெளியிடுவதை யிட்டு மகிழ்வதுடன் இவ்விழா சிறந்திடவும் மனமார வாழ்த்துகின்றேன்.

**சி.செல்வராசா**
இணைச்செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் வாழ்க எம் அதிபர்



அகவை அறுபதில் தடம்பதித்த அதிபரே!
இறுதிவரை இனியவதனமாய் எமது தலைவனாய்
பள்ளியில் பதவியேற்று சாதனை பல படைத்தீர்!
கணிதத்தில் வித்தகராய் தத்துவங்கள் பல சொன்னீர்.

உள்ளத்தில் இரக்கமும் உதட்டினில் முறுவலும்
பொன்னொளியின் கதிர்வீச்சாய் புரிந்திடுவீர் எம்மவரை
அன்பெனும் கயிற்றினாலே அறிவுதனை ஊட்டி
ஆற்றலான மாணவராய் அகிலத்தில் உயர வைத்தீர்!

கண்டிப்பு சிறிதாகவிருந்தாலும் கரிசனை எம்மவரில்
பட்டம் பல பெற்றுப் பல்கலைக்கழகம் எம்மவர் புக
ஏணிப்படியாய் நின்று ஏற்றம் புரிய வைத்தவரே
அகவை அறுபதில் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

**செல்வன்.பரமநாதன் கவிதன்**
தரம் 13, வர்த்தகம்,
சிரேஷ்ட மாணவ தலைவன்,
கிளி/பளை மத்திய கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலாவின் பயணம்...

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் கிழக்குப் பிரதேசத்திலே புத்தூர் கிழக்கிலே வாதரவத்தை எனும் குக்கிராமத்தில் சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதியரின் புதல்வனாக 1959 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தையார் ஒரு விவசாயி. இவருக்கு நான்கு பெண் சகோதரர்கள். இவரது காலத்தில் முன்பள்ளிகளே இல்லை. இதனால் ஐந்து வயது வரை இவரை இவரது பெற்றாரும் சகோதரர்களும் செல்லமாக வளர்த்து வந்தனர். மேலும் இவரது சுற்றத்தாரும் இவருடன் அன்பாகப் பழகினர்.

ஐந்து வயது நிரம்பியதும் இவரது தாயார் இவரை உக்களையில் எடுத்துச் சென்று யா/ வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் முதலாம் தரத்தில் சேர்த்துக்கொண்டார். பாடசாலைக்கும் வீட்டுக்கும் இடைத்தூரம் 2 கிலோமீற்றர். அதனால் பாடசாலை செல்லவும் திரும்பி வரவும் தாயார் நடந்து வந்து தூக்கிச் செல்வார். இரண்டாம் தரத்திலிருந்து பாடசாலைக்கு இவரது நண்பர்களுடன் நடந்து செல்வார். எட்டாந்தரம் அப்பாடசாலையில் இல்லாமையால் யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரியில் அனுமதிக்கப்பட்டார். க.பொ.த (சா/த) வகுப்பிலே தமிழ்மொழி, தூயகணிதம், பிரயோக கணிதம், உயர் கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், இந்துசமயம், ஆங்கிலம் ஆகிய எட்டுப் பாடங்களைக் கற்று 1974ஆம் ஆண்டு சித்தி பெற்றார். தொடர்ந்து க.பொ.த (உ/த) கணிதப் பிரிவில் கற்று 1977ஆம் ஆண்டு சித்தியடைந்தார். ஆனால் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லை.

இவரது குடும்ப நிலை வறுமையாக இருந்ததால் முதலாம் தடவை பரீட்சைப் பெறுபேறு கிடைத்ததும் ஆசிரியர் தொழிலுக்காக விண்ணப்பித்தார். நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. நேர்முகப் பரீட்சையிலும் சித்தி பெற்றார்.

01.06.1978ஆம் திகதி முதல் வடமாகாணக் கல்வி அதிபதி தி.மாணிக்கவாசகர் அவர்களினால் கிளி/தட்டுவாங்கொட்டி கண்ணகை அம்மன் வித்தியாலயத்துக்கு ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

அப்பாடசாலை ஆனையிறவு A9 நெடுஞ்சாலையிலிருந்து 3km தூரத்தில் அமைந்துள்ளது. அக்காலத்தில் இப்பாடசாலை ஒரு ஆரம்ப பிரிவுப் பாடசாலையாகும். இப்பாடசாலைக்குத் தினமும் வாதரவத்தையிலுள்ள வீரவாணிச் சந்தியில் காலை 6.00 மணிக்கு பஸ்சில் ஏறிச் சாவகச்சேரியில் இறங்கி A9 நெடுஞ்சாலையில் செல்லும் பஸ் ஒன்றில் ஏறி ஆனையிறவில் இறங்கும்போது நேரம் 7.15 மணி ஆகிவிடும். தொடர்ந்து 3km தூரத்திலுள்ள பாடசாலை நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைந்து நடந்து 7.50 மணியளவில் பாடசாலை சென்றுவிடுவார். காலை 8.00 மணிக்கு முதலாவது மணியுடன் பாடசாலை ஆரம்பமாகும். மூன்றாம் வகுப்பின் பொறுப்பாசிரியராக இவர் அதிபர் திரு.க.கணபதிப்பிள்ளை அவர்களால் நியமிக்கப் பட்டார். 1½ வருடங்கள் கழிந்தது. இவர் கணிதம் கற்றவர் என்பதனை பரந்தன் வட்டாரக் கல்வி அதிகாரி திரு.க.தங்கராசா அவர்கள் அறிந்து கிளி/தருமபுரம் மத்திய கல்லூரிக்கு இவரை இடமாற்றம் செய்தார். அவ்வேளை அதிபர் திரு.மார்க்கண்டு அவர்களின் தலைமையின் கீழ் 26 ஆசிரியர்கள் கற்பித்துக் கொண்டிருந்தனர். 370 மாணவர் கல்வி கற்றனர். க.பொ.த (சா/த) வரை வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இவர் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பித்தார். இவருடன் திரு.தம்பிராசா குருகுலராஜா (முன்னாள் வடமாகாணக் கல்வி அமைச்சர்) திரு.சபாபதி பரமேஸ்வரன் (மறைந்த கோட்டக்கல்வி அலுவலர்) ஆகியோரும் சக ஆசிரியர்களாகக் கற்பித்தனர்.

தருமபுரத்தில் கற்பித்த காலத்தில் ஆசிரியர் விடுதியில் தங்கியிருந்து கற்பித்தார். திங்கள் காலை வீட்டிலிருந்து புறப்பட்டு பாடசாலையில் கற்பித்துவிட்டு ஆசிரியர் விடுதியில் தங்கி நின்று வெள்ளி மாலை வீட்டுக்குத் திரும்புவார். இவருடன் இருந்த ஆசிரிய நண்பன் திரு.ஈஸ்வரவேலுடன் விடுதியில் சமைத்து உணவை உட்கொண்டார். பாடசாலை முடிவடைந்த பின்னர் மாலை வேளையில் மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞான வகுப்புகளை இவர்கள் இருவரும் திங்கள், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நான்கு நாட்களும் தினமும் 1½ மணித்தியாலங்கள் கற்பித்தார்கள். பின்னர் மாலை நேரம் 4.00மணி முதல் 5.00 மணிவரை மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து பெருவிளையாட்டுப் பயிற்சிகளிலும் போட்டிகளிலும் ஈடுபடுவார்கள். 1980, 1981 ஆகிய இரு ஆண்டுகள் இப்பாடசாலையில் கடமையாற்றிய பின் 1982, 1983ஆம் ஆண்டுகளில் யா/பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கணிதபாடப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டார். பயிற்றப்பட்ட பின்னர் நுவரெலியா மாவட்டத்திலுள்ள நு/நாணுஓயா சிங்கள தமிழ் மகாவித்தியாலயத்துக்கு கல்வி அமைச்சினால் இடமாற்றப்பட்டார். அங்கு செல்வதாயின் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் செல்லும் யாழ்தேவி அல்லது உத்தரதேவியில் சென்று பொல்காவலைச் சந்தியில் இறங்கி நின்று கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச் செல்லும் உடரட்டமெனிக்கே அல்லது பொடிமெனிக்கவில் ஏறி நானுஓயாவில் இறங்க வேண்டும். 1983 யூலைக் கலவரத்தின்போது தென்பகுதி, மத்திய பகுதிகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட யாழ்ப்பாணத் தமிழர்கள் உத்தியோக நிமித்தம் 1983 டிசம்பர் வரை வேலைக்குச் செல்லவில்லை. 1984 ஜனவரி மாதத்தின் பின்னரே மெல்ல மெல்ல மீள வேலைத்தளங்களுக்குச் சென்றனர். இந்த வேளையிலேயே இவரும் பயிற்றப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித ஆசிரியராக இன்னொரு ஆசிரிய நண்பனும் பயந்து பயந்து கண்டிக்கு பேருந்தில் சென்று பின்னர் கண்டியிலிருந்து நுவரெலியாவுக்கு பேருந்தில் சென்று மீளவும் நுவரெலியாவிலிருந்து நானுஓயாவுக்கு பேருந்தில் சென்றனர். நானுஓயா 6182 அடி உயரமானது என்பதனால் இரவு நேரத்தில் தாங்க முடியாத குளிராக இருந்தது. குளிப்பது, குடிப்பது யாவற்றுக்கும் சுடுநீரையே பயன்படுத்தி வந்தனர்.

நானுஓயாவில் கற்பித்தவேளை பெரக்கும்பர புகையிரத தரிப்பு நிலையத்துக்கு அருகிலுள்ள விடுதி ஒன்றில் தங்கி நின்று பாடசாலைக்குச் சென்றனர். அவர் தும்பளையைச் சேர்ந்தவர் இவரது உறவினர். இதனால் இவருக்கு வழிகாட்டியாக இருந்து சிங்களத்தையும் இவருக்குக் கற்பித்தார்.

1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இவருக்குத் திருமணம் நடைபெற்றது. இவரது துணைவியார் தமிழ்ப்பாட ஆசிரியராவார். காங்கேசந்துறை தையிட்டியைச் சேர்ந்தவர்.

1989ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நுவரெலியாவிலிருந்து இவருக்கு யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. யா/காங்கேசன்துறை ம.வி இல் ஒரு வருடம் ஆசிரியராகக் கற்பித்தார். 1989 யூன் மாதம் இவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். 1990 ஜனவரி மாதம் முதல் காங்கேசன்துறை கொத்தணி அதிபர் திரு.க.இராசதுரையின் கொத்தணி உதவியாளராக யா/நடேஸ்வராக் கல்லூரியில் நியமிக்கப்பட்டுக் கடமையாற்றிக்கொண்டிருந்தார். 1990 யூன் மாதம் 15ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் ஏற்பட்ட யுத்தம் காரணமாக முப்படையினரதும் தாக்குதல் காங்கேசன்துறையில் ஆரம்பித்தது. மறுநாளே இவர்கள் இடம்பெயர்ந்து இறுதியில் இணுவிலில் உறவினர் வீட்டில் ஒரு வருடம் தங்கி வாழ்ந்தனர். 1991, 1992, 1993 ஆகிய வருடங்களில் சுன்னாகத்தில் தங்கி வாழ்ந்தனர். 1993ஆம் ஆண்டு இவர்களுக்கு ஒரு மகள் பிறந்தாள். இக்காலத்தில் இவரும் மனைவியும் கடமையாற்றிய யா/நடேஸ்வராக் கல்லூரி இடம்பெயர்ந்த பாடசாலையாக சுன்னாகம் யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் மாலைநேரப் பாடசாலையாக இயங்கியது. 1994, 1995ஆம் ஆண்டுகள் யா/புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் இடம்பெயர்ந்து இயங்கிக்கொண்டிருந்த யா/குட்டியபுலம் அ.த.க பாடசாலையில் கடமையாற்றினார். இக்காலத்தில் புத்தூரிலும், வாதரவத்தையிலும் மாறி மாறி வசித்து வந்தார். இப்பகுதியிலும் படையினரின் தாக்குதல்கள் ஆரம்பமாகியது. இதனால் 1995 ஒக்ரோபர் மாதம் இடம்பெயர்ந்து பூநகரிக் கடலேரி ஊடாக கிளாலியிருந்து படகு மூலம் இவரும் மனைவியும் இரண்டு பிள்ளைகளும் பூநகரி நல்லூர் சென்றடைந்து பஸ்வண்டி மூலம் அக்கராயன் குளத்துக்குச் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1996ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் கிளி/அக்கராயன் ம.வி இல் ஆசிரியராகக் கடமையாற்றினார். 1997ஆம் ஆண்டு இவர் ஆசிரியராக இருந்தவேளை அக்கராயன் மத்திய கல்லூரியின் அதிபர் திரு.கனகசபாரத்தினம் அவர்கள் இந்தியா சென்றதனால் தொடர்ச்சியாக லீவில் நின்றார். இதனால் பாடசாலையின் சிரேஷ்ட நிலையிலுள்ள ஆசிரியராக இவர் இருந்தபடியாலும் இவரது செயலாற்றலை நேரடியாக ஓர் ஆண்டு மதிப்பீடு செய்தமையாலும் இவரைப் பொறுப்பேற்று நடாத்தும்படி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.பொன். சபாபதி அவர்கள் கூறினார். அப்போது 2140 மாணவர்களும் 107 ஆசிரியர்களும் கடமையாற்றிக்கொண்டிருந்தனர். (கிளிநொச்சி கல்வி வலயம் இடம்பெயர்ந்து வந்து அக்காலத்தில் அக்கராயன் மத்திய கல்லூரிக் கட்டடத்திலேயே 1996 முதல் 2000ஆம் ஆண்டுவரை இயங்கியமை குறிப்பிடத்தக்கது.) பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நல்லபிப்பிராயத்துடன் இணைந்து இவரைப் பதில் அதிபராக திரு.பொன்.சபாபதி அவர்கள் நியமித்தார். தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் அதிபராக அங்கு கடமையாற்றினார். இக்காலத்தில் திரு.ப.அரியரத்தினம் அவர்கள் கல்விப் பணிப்பாளராக இருந்து இவருடன் நெருங்கிப் பழகி இவருக்குப் பூரண ஒத்துழைப்பையும் வழங்கினார். அவருடைய காலத்தில் இவருக்கும், பல பதில் அதிபர்களுக்கும் அதிபர் தரம் கிடைத்தமை பெருமைக்குரியது.

ஏழு வருடங்கள் அப்பாடசாலையில் இவர் தொடர்ந்து கடமையாற்றியதால் 2003ஆம் ஆண்டு கிளி/இராமநாதபுரம் மேற்குப் பாடசாலைக்கு இடமாற்றத்தில் சென்று நான்கு ஆண்டுகள் அதிபராகக் கடமையாற்றினார். அதன் பின் கிளி/இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டு 2007முதல் 2012 வரை கடமையாற்றினார். இந்தக் காலத்திலேயே பல வேதனைகளையும் சோதனை களையும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மடு, வவுனியா வடக்கு மக்கள் சந்தித்தனர். உள்நாட்டுப் போரின் பல்வேறு வடிவங்களையும் எதிர்கொண்டனர். உடைமை களை, உறவினகளை, நண்பர்களை இழக்க வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டது. 2008ஆம் ஆண்டு ஆவணி மாதம் கிளிநொச்சி இந்துக்கல்லூரி இடம்பெயர்ந்து சென்று கிளி/கல்மடுநகர் அ.த.க பள்ளியில் இயங்கியது. அங்கு பாடசாலையைக் கொண்டு சென்று நடாத்தினார். ஆயினும் 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன. இவர்கள் தொடர்ந்து இடம்பெயர்ந்து மாத்தளன் கடற்கரைக்கு நடந்து சென்றனர். அங்கே மக்கள் அனைவரும் தறப்பாளின் கீழ் வெள்ளம் நிரம்பிய பதுங்குகுழியின் உதவியுடன் பசியும், பட்டினியுமாக நாட்களைக் கழித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரின் உக்கிரங்களைத் தாங்க முடியாத மக்கள் எவ்வித ஆபத்தையும் பொருட்படுத்தாது மாத்தளன் கடலேரி வழியாக வெறுங்கைகளுடன் 2009 மார்ச் மாதத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வவுனியா நோக்கி வெளியேறினர். இவ்வாறு வெளியேறும்போது காயமடைந்தவர்கள், இறந்தவர்கள் பலர். இத்தொகை எந்தக் கணக்கிலும் வரையறுத்து யாராலும் இன்றுவரை கூற முடியாமலே உள்ளது.

இவரும் இவரது குடும்பமும் 2009 மார்ச் மாதம் 13ஆம் திகதி மாத்தளன் கடலேரி ஊடாகச் சென்றபோது இராணுவத்தினர் இவர்களை அழைத்து முழுமையான பரிசோதனைக்கு உட்படுத்திவிட்டு வள்ளிபுனம், பரந்தன், கிளிநொச்சி, தாண்டிக்குளம் ஊடாக பஸ்வண்டி மூலம் வவுனியாவுக்குக் கொண்டு சென்றனர். வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் 6 மாதங்கள் தங்க வைத்தார்கள். எவரும் முகாமிலிருந்து வெளியேற முடியாது என்ற இராணுவத் தினரின் கட்டுப்பாட்டுடன் இருந்தனர். பொருத்தமான உணவு இல்லை. உடைகள் இல்லை. உறையுள் இல்லை. 20' x 20' அறையில் பல குடும்பங்களைச் சேர்ந்த 20இற்கும் மேற்பட்டோருடன் இரவு பகலாக 6 மாதங்களாகத் தங்கியிருந்தனர். குளிப்பதற்கு தண்ணீர் இல்லை. மலசலகூடத்திற்குச் செல்வதாயின் வரிசையில் பல நிமிட நேரம் காத்து நின்றே செல்ல வேண்டும். இத்தகைய அவலங்களைச் சுமந்து கொண்டு உயிர்பிழைத்து வாழ்ந்தனர். அவ்வேளை தறப்பாள்களை மைதானத்தில் கட்டி மாணவர்களுக்கு முடியுமான வரை பாடங்களைக் கற்பித்தனர்.

பின்னர் இவர்கள் வவுனியா மருதமடு வலயம் 7 என்ற இடைத்தங்கல் முகாமிற்கு மாற்றப்பட்டு அங்கு 4 மாதங்கள் தறப்பாள் கொட்டகைக்குள் தங்கியிருந்தனர். அப்போது இவர்களை IDP (Inland Displaced Person) எனவும், இவர்களது வாழ்விடத்தை IDP Camp எனவும் அழைத்தனர். வவுனியாவில் வாழும் வன்னி மக்கள் இவர்களை வன்னியார் என அழைத்தனர்.

இடம்பெயர்ந்தோர் மீளக்குடியமர்வு என ஆரம்பித்தார்கள். இவர்களது குடும்பம் வவுனியாவிலிருந்து கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கொண்டு வந்து விடப்பட்டது. பாடசாலை திருத்தம் செய்யப் பட்டிருந்தது. குடிசை அமைக்கும்படி ஒவ்வொரு குடும்பத்துக்கும் 12 தகரங்கள் கொடுக்கப்பட்டது. பாடசாலைக்கு அருகிலுள்ள ஓர் காணியில் ஓர் தகரக் குடிசை அமைந்து வாழ்ந்து கொண்டு பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04.01.2010ஆம் நாள் வட. மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஏ.சந்திரஸ்ரீ அவரது செயலாளர் திரு.இளங்கோவன், இராணுவத்தளபதி திரு.கத்துருசிங்க, வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.த.குருகுலராஜா அரசாங்க அதிபர் திருமதி.கே.ரூபவதி ஆகியோர் வருகை தந்து பாடசாலையை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தனர். போருக்குப் பின் கிளிநொச்சி மாவட்டத்தில் அந்நேரம் கட்டடங்கள் புனரமைக்கப்பட்ட முதலாவது பாடசாலை அதுவாகும்.

கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகக் கட்டடங்கள் திருத்தப்படாமல் இருந்ததால் கிளிநொச்சி மாவட்டத்துக்குரிய ஆசிரியர், மாணவர் தளபாடங்கள், இலவச பாடநூல்கள், ஆசிரியர் கைநூல்கள், முதலுதவிப் பொருட்கள், சுகாதாரத் தேவைக்குரிய பொருட்கள் கிளிநொச்சி இந்துக் கல்லூரியிலேயே களஞ்சியப் படுத்தப்பட்டு பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டது. அதிபர் கடமையுடன் இந்தப் பணிகளையும் இவரே தனது ஆசிரியர்களுடன் நிறைவேற்றினார். ஆறு ஆண்டுகள் அப்பாடசாலையில் இவர் கடமையாற்றியமையால் கிளி/பளை மத்திய கல்லூரிக்கு 2013ஆம் ஆண்டு தை மாதம் இடமாற்றம் செய்யப்பட்டு இன்று வரை கடமையாற்றிக்கொண்டிருக்கிறார். இவரது 60ஆவது வயது 22.02.2019ஆம் திகதியுடன் நிறைவு பெறுவதால் அன்றைய நாளில் ஓய்வு பெறுகிறார்.

இவரது பிள்ளைகள் இருவரும் பல்கலைக்கழகங்களில் இறுதியாண்டு கல்வி கற்றுக்கொண்டிருக்கிறார்கள். இவரது துணைவியார் ஓய்வுநிலை ஆசிரியராக இருந்து வீட்டுப் பணியை ஆற்றி வருகிறார்.

**ஆறில் இருந்து அறுபது வரை**

6 வயதில் மாணவனாகத் தொடங்கிய இவரது பாடசாலை வாழ்க்கை பின்னர் ஆசிரியராகவும் இறுதியாக அதிபராகவும் 60 வயது வரை நீடித்தது. 6 வயதில் இருந்து 60 வயது வரை இவரது பாடசாலை வாழ்க்கை தினமும் 6 வயதிலிருந்து 60 வயது வரையுள்ள உயிர்களுடனேயே ஆரோக்கியமாகக் கழிந்தது.

1990ஆம் ஆண்டு இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட இவரது காங்கேசன்துறையிலுள்ள சீதனக்காணி 29 வருடங்களின் பின் 2019ஆண்டு தை மாதம் தான் விடுவிக்கப்பட்டுள்ளது. இனித்தான் இவரது குடும்பம் அங்கு சென்று காணி எல்லைகளைக் கண்டறிந்து வீடு கட்டி வாழ்வதற்குரிய ஆயத்தங்களைச் செய்ய வேண்டியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ◆ வயது | - | 60 வருடங்கள் |
| ◆ கல்விப்பணி | - | 41 வருடங்கள் |
| ◆ விவாகம் ஆகி | - | 32 வருடங்கள் |
| ◆ வாழ்ந்தது | - | 3 மாவட்டங்கள் |
| ◆ சேவையாற்றிய பாடசாலைகள் | - | 10 |
| ◆ வாழ்ந்த இல்லிடங்கள் | - | 32 |

## அதிபரின் சுயவிபரம்

- பெயர் : சின்னத்தம்பி பாலகிருஷ்ணன்
- முகவரி : வாதரவத்தை புத்தூர்
- வயது : 60 வருடங்கள்
- முதல் நியமனத் திகதி : 01.06.1978
- ஆசிரியர் சேவைக்காலம் : 20 வருடங்கள்
- அதிபர் சேவைக்காலம் : 21 வருடங்கள்
- கல்வித்தகைமை : கல்விமாணி
- தொழிற்தகைமை : பயிற்றப்பட்ட கணிதம்,
  பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா
  கல்வி முதுமாணி
- சேவை : இலங்கை அதிபர் சேவை தரம் I

**ஆசிரியராகச் சேவையாற்றிய பாடசாலைகள் :**

- கிளி/தட்டுவங்கொட்டி கண்ணகை அம்மன் வித்தியாலயம்
- கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி
- நு/நாணுஓயா சிங்கள தமிழ் மகா வித்தியாலயம்
- யா/காங்கேசன்துறை மகா வித்தியாலயம்
- யா/நடேஸ்வராக் கல்லூரி
- யா/குட்டியபுலம் அ.த.க. பாடசாலை
- கிளி/அக்கராயன் மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதிபராகச் சேவையாற்றிய பாடசாலைகள்**

- கிளி/அக்கராயன் மத்திய கல்லூரி
- கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை
- கிளி/இந்துக் கல்லூரி
- கிளி/பளை மத்திய கல்லூரி

**சேவையாற்றிய மாவட்டங்கள்**

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- நுவரெலியா

**பெற்ற விருதுகள்**

- கல்வி அமைச்சின் தேசிய மட்ட சிறந்த அதிபர் விருது (குரு பிரதீபா பிரபா - 2015)
- கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தினால் "தமிழ் எழில்" விருது - 2014

**குடும்ப விபரம்**

- மனைவி - ஓய்வுநிலை ஆசிரியர்
- மகன் - பல்கலைக்கழக மாணவன்
- மகள் - பல்கலைக்கழக மாணவி

**வகித்த பதவிகள்**

- ஆசிரியர்
- கொத்தணி உதவியாளர்
- அதிபர்
- அதிபர் சங்கத் தலைவர் - கிளிநொச்சி மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலாவின் காலத்தில் எம்பள்ளி

திருமதி.வெ.அன்னமேரி
ஆசிரியர்,
கிளி/பளை மத்திய கல்லூரி.

பச்சைப்பசேல் எனக் கழனியாய் விரியும்
பச்சிலைப்பள்ளியில் பளை என்னும் ஊரில்
பளை மத்திய பள்ளியில் பதினொராவது முதல்வனாய்
பணிசெய்யப் பாதம் பதித்திட்ட பாலாவே!

பாலகருடன் பாசமாய்ப் பழகிப் பல்கவி சொல்லி
பாங்காய் அணைத்திட்டீர் பள்ளி மாணவரை
இசையால் வசமாக்கி ஈந்திட்டீர் பல மனங்களை
பாசத்தின் தந்தையாய் பவனி வந்தீர் பள்ளியிலே!

எடுப்பான தோற்றமும், மிடுக்கான நடையும்
துடிப்பான மாணவரைக் கனிவான மொழி கூறி
கொடுப்புக்குள் முறுவல் இட்டுக் கொஞ்சு தமிழால்
வெஞ்சினம் தணித்திட்ட தலைவரே!

மகிந்தோதய ஆய்வுகூடம் மலர்ந்தது - உம் வரவால்
ஆங்கில மொழிமூலம் பாடங்கள் மிளிர்ந்தன
விளையாட்டு மைதானம் பள்ளியின் சொத்தானது
கராட்டி சாதனை பதக்கம் வென்றது.

பள்ளியின் வளர்ச்சியில் பாங்காய் உதித்திட்ட
கணித அறையோடு தொழில்நுட்பப் பாடமும்
கொடிக்கீதமும் அதிபர் விடுதியும் தோன்றிடவே
அயராது உழைத்திட்ட ஆளுமையின் வடிவமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்த இடமெல்லாம் பசுமிலைச் சோலையாய்
பார்ப்போரின் மனதை ஈர்க்கின்றதையா
பக்குவமாய்ப் பேணி வளர்த்திட்டீர் பாதுகாப்பும் கொடுத்திட்டீர்
பாலாவின் கதையை என்றும் சொல்லுமையா!

பல தடைகளைத் தகர்த்தெறிந்தீர் தந்திரப் பேச்சால்
சாமர்த்தியமாய் சங்கடங்களைக் களைந்தீரையா
சவால்களுக்கு சாவுமணி அடித்து சரித்திரம் படைத்தவரே
சத்திய நேசனாய் சாதனை புரிந்தவரே!


சுற்றுச் சூழலில் சுற்றித் திரிந்து சுத்தம் பார்த்து
சுந்தரப் பேச்சால் சுற்றங்கள் சேர்த்து
தூர நோக்கினைத் துல்லியமாய்க் கொண்டவரே
சுகத்துடன் வாழ சுந்தரமாய் வாழ்த்துகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்லாண்டு வாழ்க!

நிசாந்தன்
ஆசிரியர் (சித்திரம்),
கிளி/பளை மத்திய கல்லூரி.



எண்ணத்தில் உதித்தது எம்மதிபர் வதனமது
உள்ளத்தில் மலர்ந்தது உதட்டினது சிறுமுறுவல்
வண்ணத்தில் தீட்டினேன் வாஞ்சையுடன் சித்திரமாய்
வன்னிமண் குளிர்ந்த வாண்மையாளன் பாலகிருஷ்ணன்

கணிதத்தில் வித்தகனாய் கருணையிலே சிறந்தவனாய்
துடிப்பான தோற்றமும் எடுப்பான நன்னடையும்
கடுப்பில்லா வார்த்தையும் கவர்ந்திழுக்கும் கண்களும்
மிடுக்கான மீசையும் சித்திரத்தில் பதிந்தன.

நண்பனாய் சகபாடியாய் தந்தையாய் சோதரனாய்
என் அகமதில் தோற்றம் பெற்ற உத்தமர்
அகவை அறுபதில் பல்லாண்டு நீடூழி
பல்கலையும் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதவள விருத்திக்குக் கல்வியின் பங்களிப்பு



**பா.பத்மநாதன்**
B.A (Hons) Tamil sp -1st class
M.A (Tamil) - 1st class
M.Ed (Hons) - 1st class
Dip. in Ed.
(ஆசிரியர், கிளி/பளை மத்திய கல்லூரி)

**அறிமுகம் :-**

ஒரு நாட்டின் அபிவிருத்தியின் பிரதான குறிகாட்டியாகக் கல்வி விளங்குவதனால் ஒவ்வொரு அரசாங்கமும் கல்வியை மிகவும் நுட்பமான முறையில் திட்டமிட்டு வழங்கவேண்டியுள்ளது. இந்த யதார்த்தத்தை ஒவ்வொரு நாடும் தெளிவாக விளங்கிக் கொண்டமையாலேயே நிதி ஒதுக்கீட்டில் கல்விக்கு அதிகளவான நிதியை ஒதுக்குவதைக் காணமுடிகின்றது. அரசு கல்வியாலடையும் அபிவிருத்தியை மிகவும் கவனமாக உணர்ந்து , கால மாற்றத்திற்கேற்பக் கல்விக் கொள்கைகளை வகுப்பதுடன் கல்விக்காக அதிகளவான நிதியைச் செலவிடு கின்றது. கல்விக்குச் செலவிடும் நிதியானது ஒரு முதலீடாகவே கருதப்படுகின்றது. ஏனைய செலவீடுகளைப் போலன்றி, கல்வியில் செலவிடும் நிதி தனி நபருக்கும் முழுமையான சமுதாயத்திற்கும் வருவாய்களைத் தரக்கூடிய செலவாகக் கல்விச் செலவு நோக்கப்படுவதால் அது மனித வள முதலீட்டுச் செலவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**கல்வியில் முதலீடு**

ஒரு நாட்டின் ஒட்டு மொத்த அபிவிருத்திக்கான உத்தியாகப் பொருளாதார அபிவிருத்தியுடன் கல்வி அபிவிருத்தியும் இடம்பெறுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும். கல்வி அபிவிருத்தியில் நிதி செலவிடுவது தொடர்பில் நோக்குதல் அவசியமானது. இலங்கையில் உணவு மானியத்திற்கு அடுத்த மிகப்பெரிய நலன்புரிச் செலவு கல்வி, சுகாதாரம் என்பவற்றின் மீதாகவே கருதப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் ஆரம்பக்கல்வி தொடக்கம் பல்கலைக்கழகம் வரையில் அரசாங்கம் இலவசக் கல்வியை வழங்குகின்றது. அத்துடன் புலமைப் பரிசில், மகாபொல கொடுப்பனவுகள் போன்ற பலவற்றையும் வழங்கி வருகின்றது. இதற்காக அதிக நிதியை அரசாங்கம் செலவிடுகின்றது. 1946 இல் இறப்பு வீதத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட வீழ்ச்சியினால் குடிப்பெருக்கம் அதிகரிக்கவே பாடசாலை செல்லும் மாணவர் தொகை பெருகியதன் காரணமாகக் கல்விச்செலவுகள் அதிகரிக்கப்பட்டன. 1960 இல் கட்டணம் அறவிடும் தனியார் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றதைத் தொடர்ந்து அரசின் கல்விச்செலவு மேலும் அதிகரித்தது. ஆசிரியர் சம்பளம், உபகரணச் செலவு, இலவச மதிய உணவு, இலவசச் சீருடை, இலவசப் பாடநூல்கள் காலத்திற்கு காலம் அரசினால் வழங்கப்பட்டன. எல்லோருக்கும் கல்வி என்ற கொள்கையால் பாடசாலை செல்லும் மாணவர் தொகையிலும் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டது. பாடசாலைகளும் அதிகரித்தன. நாட்டில் பல பாகங்களில் பாடசாலைகளும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளும், கல்வியற் கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் நிறுவப்பட்டன. இவற்றுக்காக அரசு அதிகளவான நிதியைச் செலவிடுகின்றது.

**மனித வள முதலீடாகக் கல்வி :-**

கல்வியில் செலவிடப்படும் நிதியானது மனித வள முதலீடாகவே கொள்ளப்படுகின்றது. கல்வி சமூகத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்தக் கூடியது. கல்விச் செலவு மனிதனது உழைப்பாற்றலைத் தனிப்பட்ட ரீதியிலும் சமூக ரீதியிலும் வலுவுடைய வினைத்திறனாக்கும் என எண்ணப்படுகின்றது. இவ்வகையில் கல்விச்செலவு ஒரு மனித முதலீடாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. சேர் வில்லியம் பெற்றி என்னும் அறிஞர் மனித மூலதனம் பற்றிக் கூறியிருக்கின்றார். அல்பிரட் மாஷல் கல்விச் செலவு ஒரு தேசிய முதலீடு எனக் குறிப்பிடுகின்றார். மனிதரில் செய்யப்படும் முதலீடு ஏனையவற்றை விடப் பெறுமதி கூடியதாகும். இவை மனிதர்களுக்குக் கல்வியில் செலவிடும் நிதி ஒரு நாட்டின் மனிதவள முதலீடு என்பதை அழுத்தமாக வெளிப்படுத்திக் காட்டுவனவாக உள்ளன.

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு நிதி முதலீடு மிகவும் முக்கியம் வாய்ந்த ஒன்றாகும். நிதி முதலீட்டை மிகவும் கவனமான முறையில் திட்டமிட்டுக் கையாளுவதன் மூலமே அதன் நோக்கத்தைச் சிறந்த முறையில் அடைய முடியும். நாட்டின் அபிவிருத்தியானது வெறுமனே இயற்கை வளங்கள், பௌதீக வளங்கள், பௌதீக மூலதனங்கள் என்பவற்றால் மாத்திரம் ஏற்படுவதல்ல. உற்பத்தியில் மாற்றத்தை ஏற்படுத்தும் செயற்படு முகவரான மனிதரின் செயற்பாடும் அதில் பிரதான பங்கு வகிக்கிறது. இதிலிருந்து கல்வியில் செலவிடும் நிதி ஒரு நாட்டின் மனிதவள முதலீடாகக் காணப்படுகின்றது என்பதை அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியில் நிதியைச் செலவிடுவதன் மூலம் எதிர்காலத்தில் நாட்டின் அபிவிருத்திக்கு உதவக்கூடிய ஆற்றல் மிகு தொழிலாளர்கள், தொழில் வல்லுநர்களை உருவாக்க முடியும். அதாவது நாட்டின் அபிவிருத்திக்கு எதிர் காலத்திற்கு வேண்டிய ஆற்றல் மிக்க அரசியல் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், சட்டவல்லுநர்கள், நீதிபதிகள், பொறியியலாளர்கள், வைத்தியர்கள், முகாமையாளர்கள், கலைஞர்கள், நுட்பவினைஞர்கள், பத்திரிகை யாளர்கள் போன்றோரை மிகவும் கவனமாக உருவாக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது . இவர்களே நாட்டில் அபிவிருத்தியின் சகல துறைகளிலும் மக்களுக்கு வழிகாட்ட வேண்டியவர்கள். எனவே கல்வியில் நிதியை முதலீடு செய்வதன் மூலம் இத்தகைய அபிவிருத்திக்கு வழிகோலக்கூடிய சிறந்த மனித வலுவை உருவாக்க முடிவதால் கல்வியில் செலவிடும் நிதி சிறந்த முதலீடாகவே நோக்கப்படுகின்றது.

கல்வியில் நிதியைச் செலவிடுவதன் மூலமே சிறந்த முறையில் மனித வள அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும். இத்தகைய மனிதவள அபிவிருத்தி ஒரு நாட்டின் முதலீடாக நோக்கப்படுகின்றது. அறிவைக் கட்டியெழுப்புதல், திறன் களை மேம்படுத்துதல், தொழில் செய்யும் தகுதி, வினை ஆற்றல் போன்றவற்றை எல்லா மக்களிடத்தும் ஏற்படுத்த இது உதவுகின்றது. மனிதவளம் பல வழிகளில் விருத்தி செய்யக் கூடியது. முன்பள்ளி, ஆரம்பப்பள்ளி, இடைநிலைப் பாடசாலை, பல்கலைக்கழகம், உயர் தொழில் நுட்பக்கல்லூரிகள் போன்றவற்றிலே தொடர்ச்சியாகக் கற்பதன் மூலம் மனிதவளம் வலுவான விருத்தி பெறுகிறது. தனியார் துறை, அரச துறையில் காணப்படும் முறை சார்ந்த, முறை சாராத தொழில் முறையில் பயிற்சிகளும் மனிதவள விருத்திக்குப் பல வழிகளிலும் உதவி செய்கின்றன. தொலைக்கல்வி அல்லது சுயமுயற்சி என்பவற்றால் மற்றவரிடம் கேட்டோ அல்லது வாசித்தோ தன் அறிவு, ஆற்றல் என்பவற்றை மனிதன் விருத்தி செய்கின்றான். சுய விருத்தியானது நேரடியாகத் தொழில் பெற அல்லது பயிற்சி பெறுவதற்கு ஏற்ற ஊக்கத்தை வழங்ககின்றது. அதுமட்டுமன்றிச் சுகாதார வசதி ஏற்படுவதுடன் போசாக்குத் தராதரமும் உயர்வடையும். இவை கல்வியில் நிதியைச் செலவு செய்வதனால் சிறந்த மனிதவள அபிவிருத்தி ஏற்படும் என்பதைக் காட்டுகின்றது. இத்தகைய மனித வள அபிவிருத்தி என்பது முதலீடாகவே நோக்கப்படுகின்றது.

சில நாடுகள் போதியளவில் இயற்கை வளங்களை கொண்டிருக்கின்றன. அவை தமக்குத் தேவையான பொருட்களையும் மனித வளங்களையும் இறக்குமதி செய்ய முடியும். இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் போதியளவில் மனிதவலு காணப்பட்டாலும் இயற்கை வளம் போதியளவில் இல்லை. எனவே இத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்முக நாடுகள் மனிதர்களில் முதலீடு செய்வதன் மூலம் உற்பத்தித் திறனைப் பெருக்க முடிவதுடன் சேமிப்பு வீதத்தையும் அதிகரிக்க முடியும். இவ்வாறு கல்வியில் செலவிடும் நிதி மனிதவலு மூலம் உற்பத்தியை அதிகரிக்கவுள்ளதுடன் சேமிப்பையும் அதிகரிக்க உதவுவதனால் அது முதலீடாகவே கருதப்படுகிறது.

கல்வியில் செலவிடும் நிதியானது நேரடியாக பொருட்கள், சேவைகளில் உற்பத்தித் திறனைக் கொண்டோ, தனி மனிதனின் பண வருமானத்தைக் கொண்டோ, பொருளாதாரத்தில் முழு வருமானத்தைக் கொண்டோ தீர்மானிக்க முடிவதில்லை. கல்வியில் செலவிடும் நிதி ஒரு நாட்டின் சகலவித அபிவிருத்திக்கும் துணை நிற்கும் மனித வள முதலீடாகவே நோக்கப்படுகின்றது. இன்று நவீன மனிதனின் உண்மையான உளப்பாங்கு கல்விச்செலவு பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவி செய்யும் கருவியாக இருக்க வேண்டும் என்பதாகும். எனினும் சுதந்திரம், சுயகௌரவம், தனிமனித பெறுமானம் என்பவற்றைப் பேணவும் கல்வி உதவ வேண்டும் என்பது மறுப்பதற்கில்லை. சுதந்திரம், சுயகௌரவம், தனிமனித பெறுமானம் என்பனவும் ஒரு நாட்டின் அபிவிருத்தியின் குறிகாட்டிகளே ஆகும்.

ஒரு நாட்டின் கல்விக்குச் செலவிடும் நிதி அதிகரிக்க, அந்நாட்டின் வருவாயை அதிகரிக்கும் திறனும் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. அதாவது கல்வியினாலான காலப்பகுதியில் செலவும் அதிகரிக்க அந்நாட்டின் வருவாயை அதிகரிக்கும் திறன் கூடியே செல்கின்றது. இவ்வாறு கல்வியில் செலவிடும் நிதி ஒரு நாட்டினது வருமானப் பெருக்கத்தினை ஏற்படுத்துவதோடு , சமூகத்தின் தாழ் நிலையில் உள்ளவர்களை மேல் நோக்கி நகர்த்தும் முதலீடாகக் கல்விச் செலவு அமையக் காணலாம்.

**நிறைவுரை**

பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய காரணிகளுள் பௌதிக மூலவளங்களிலும் பார்க்க மனித மூலவளம் முதன்மையானதாக விளங்குகிறது. பொருளியல் காரணிகளின் வளர்ச்சியை மட்டும் ஊக்குவிப்பதனூடாக நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என்பது சாத்தியமில்லை. இந்நிலையிலேயே "கல்வியில் முதலீடும் மனிதவள அபிவிருத்தியும்" பற்றிய சிந்தனைகள் மேற்கிளம்பத் தொடங்கின. பொருளியலின் தந்தை என்று அழைக்கப்படும் அடம் சிமித் காலத்திலிருந்தே பொருளியல் நோக்கில் கல்வியினைச் சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி மீதான செலவு மக்கள் வாழ்க்கை நிலையை உயர்த்துவதுடன் தேசிய செல்வத்தை அதிகரிக்கச் செய்வதோடு தேசிய உணர்வையும் மேம்படச் செய்கின்றது. இதனால் நாட்டில் அபிவிருத்தி ஏற்பட வாய்ப்பு அதிகமாகவே இருக்கின்றது. ஒவ்வொரு நாடும் பொருளாதாரப் பின்புலத்தில் கல்விபற்றிச் சிந்தித்து கல்வியில் நிதியைச் செலவிடுவதன் மூலமே சிறந்ததொரு மனிதவளத்தை உருவாக்க முடியும். வலுவான மனிதவளத்தின் மூலமாகவே பேண்தகு அபிவிருத்தியை அடைந்து கொள்ளலாம்.

**உசாத்துணை நூல்கள்**


1. சின்னத்தம்பி, மா., **இலங்கையின் கல்விச் செலவு**, விஸ்டம் பப்ளிகேசன்ஸ், சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (2005)

2. சந்திரசேகரன் , சோ., சின்னத்தம்பி, மா., **கல்வித்திட்டமிடல் கோட்பாடுகளும் புதிய வளர்ச்சியும்**, எஸ்.எச். பதிப்பகம், நந்தன தோட்டம், கொழும்பு - 04 (2000)

3. ஜெயராசா, சபா., சந்திரசேகரன், சோ., **கல்வியலும் நிகழ் பதிவுகளும்**, சேமமடு பொத்தக சாலை, யு.ஜி.50, பீப்பிள்ஸ் பார்க், கொழும்பு - 11 (2008)

4. சந்திரசேகரன், சோ., சின்னத்தம்பி, மா., **கல்வியும் மனிதவள விருத்தியும்**, எஸ்.எச் பதிப்பகம், நந்தன தோட்டம், கொழும்பு - 4 (2002)

5. **மனித விருத்திக்கான கல்வி பற்றிய தொலைநோக்கு**, தேசிய கல்வி ஆணைக்குழு, (2003)

6. **பேராசிரியர். க. சின்னத்தம்பி கல்விச்சேவை பொன்விழா மலர்** (2010)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனாம் நம் பள்ளி முதல்வன்



திருமதி.அ.காந்தரூபி
ஆசிரியர் (வரலாறு),
கிளி/பளை மத்திய கல்லூரி.

விடுமுறை தினமாம் அன்று நியமனத் திகதியும் அதுவே
ஆரவாரத்துடன் வந்தோம் அன்று பளை மத்திய கல்லூரிக்கு
எம்மை வரவேற்ற முகமோ நம் மணிவிழா நாயகன் - எம்
பள்ளித்தலைவர் பாலகிருஷ்ணன் ஐயா!

விடுமுறை கழிந்தது பாடசாலையும் ஆரம்பமானது
வரவதனை உறுதிப்படுத்தவே ஓடி வந்தால்
அலுவலகத்தில் உங்கள் முகமே வணக்கம் சேர் என்று
முணுமுணுக்க மௌமான தலையாட்டல் வந்திடுமே.

வகுப்பாசியராய் நாமிருந்து கல்வியைப் புகட்டிட
கற்றல் கற்பித்தல் பயன்பெற வேண்டுமென்று
பார்வையிட்டு அறிவுரை பலகொண்டு வந்ததுண்டு
மெல்ல மெல்ல மாடிப்படியேறி

அத்திவாரமிட்டு ஒரு படியில் நாம் ஏறிவிட - நீரோ
ஏணிப்படியாய் இருந்து நல்வழிகாட்டி - பள்ளி
மாணவரை பல்கலை அனுப்பி இன்று பல்துறையில்
வைத்தியராய், பொறியியலாளராய், ஆசிரியராய்

மிளிர வைத்த மணிவிழா நாயகனை வாழி வாழியென
வாழ்த்தி நிற்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உயர்தரத்தில் (A/L) இரசாயனவியலில் சில அணுகுமுறைகள்



**திரு.சுப்பிரமணியம் சுரேஸ்குமார்**
**B.Sc(Hons) MBA (London)**
**PGDE (Merit)**
இரசாயனவியல் ஆசிரியர்

மனித வாழ்வுடன் இரசாயனம் இரண்டறப் பின்னிப் பிணைந்துள்ளது. காலையில் பல் துலக்குவதிலிருந்து உணவில் இடும் கறியுப்பு வரை இரசாயனவியல் எமது வாழ்க்கைக் கோலத்தில் பிரிக்க முடியாத ஒன்றாகவிட்டது.

விஞ்ஞானத்தின் பிறப்பென்பது வாழ்க்கையை இலகுபடுத்துதல், சூழலுடன் இயைபுபடுத்துதல் போன்றவற்றிற்காக உதயமாகியது. எனவே இலகுவான ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட படிமுறையே விஞ்ஞானம். அவ் விஞ்ஞானத்தின் ஓர் அங்கமாகிய இரசாயனவியலும் மிக இலகுவானது.

கிட்டத்தட்ட 6.5 million சேர்வைகளைக் கொண்ட பெருங்குடும்பமாக இரசாயனவியல்துறை காணப்படுகின்றபோதும் சில நூற்றுக்கணக்கான சேர்வைகளைக் கொண்ட மிகச்சிறிய பாடத்திட்ட ஒழுங்கமைப்பே க.பொ.த உயர்தர இரசாயனவியலாகும்.

மாணவர்கள் உயர்தரத்திற்கு கணித உயிரியல் பிரிவில் காலடி எடுத்து வைக்கும்போது அவர்கள் அடிப்படையாக வைத்துக்கொள்ள வேண்டியவை.

1) ஆசிரியர் கைந்நூல்
2) கடந்தகால வினாத்தாள்கள் (குறைந்தது 15 வருடம்)
3) கடைசி 5 வருட இறுதிப் பரீட்சையின் புள்ளித்திட்டம்
4) அலகு ரீதியாகத் தொகுக்கப்பட்ட M.C.Q வினாக்கள்

பொதுவாகவே விஞ்ஞான ரீதியான அணுகுமுறை அவதானித்தலுடன் ஆரம்பமாகும். இங்கு அவதானித்தல் செயன்முறை வகுப்பறையிலும், ஆய்வு கூடத்திலும் பிரதானமாகக் காணப்படும். பொதுவாக விஞ்ஞான பாடங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியான இணைந்த தன்மை காரணமாக இயன்றவரை தொடர்ச்சியான அவதானித்தலில் குறைபாடு ஏற்படின் மாணவர்கள் பல இடர்பாடுகளை எதிர் கொள்ள நேரிடும். எனவே ஒழுங்குமுறையான அவதானித்தல் மிக அடிப்படை யானதும் அவசியமானதுமாகும்.

இரு வகையிலான பாடத்துறை மாணவர்கள் இரசாயனத்தை உயர் தரத்தில் கற்பதால் இயன்றவரை இருமுறையான அணுகுமுறையைக் கற்றல் - கற்பித்தலில் கையாள்வது இலகுவானதாக இருக்கும்.

**1) கணிதப்பிரிவு மாணவர்கள் :-**

இவர்களுக்கு முதலாவது அலகாக பொது இரசாயனத்தைக் கற்பிப்பின் அவர்கள் சிலவேளைகளில் சலிப்புத் தன்மையை எதிர்கொள்வர். எனவே இயன்றவரை முதலாவதாக இரசாயனக் கணித்தலை இவர்களுக்கு மேற் கொள்ளல் சாலச் சிறந்தது.

அதே போல் அசேதன இரசாயனத்திற்கு அடுத்த அலகாக சேதன இரசாயனத்தைக் கற்பிப்பதற்குப் பதிலாக பௌதிக இரசாயனத்தைக் கற்பித்தல் கணிதப்பிரிவு மாணவர்களுக்கு இரசாயனத்தின் மீது அதிக விருப்பத்தை ஏற்படுத்தும்.

**2) உயிரியல் பிரிவு மாணவர்களுக்கு :-**

இயன்றவரை முதலாவதாக பொது இரசாயனத்தைக் கற்பிப்பின் சிறந்தது (பாடத்திட்ட ஒழுங்குப்படி)


பாடத்தை விளங்குவதற்கு சிறுசிறு அலகு ரீதியான கடந்தகால வினாக்களைப் பயில்வதுடன் இயன்றவரை சிக்கலானவற்றை இலகுவான உதாரணங்களுடன் ஞாபகப்படுத்தல் சிறந்தது.

**விடயம் 1 :-**

உதாரணமாக புதிய பாடத்திட்டத்தில் ஊக்கி ஏவற்சக்தி குறைப்பதனூடாக தாக்கத்தை நடாத்துகின்றது என எழுத முடியாது. வேறு இலகுவான தாக்கப் பாதை யினூடாக தாக்கத்தை நிகழ்த்துவதன் மூலம் குறைந்த சக்தி கொண்ட பாதையினூடு தாக்கத்தை நிகழ்த்துகின்றது என்பதே மிகப் பொருத்தமானது. இதனை விளங்குவதற்குப் பொருத்தமான உதாரணமாக கீழ் உள்ளதைக் கருதலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இம்மலையில் குரங்குகள் சில A இலிருந்து Bற்கு தரை வழியே ஏறியும் செல்லலாம். இல்லையேல் இம்மலையிலுள்ள மரங்களில் தாவியும் செல்லலாம். இங்கு ஊக்கி மரம் வழியே தாவி இலகுவான இன்னொரு பாதையினூடாக தாக்கத்தை நிகழ்த்துவது போன்றதாகும்.

**விடயம் 2 :-**

ஒன்றுக்கு மேற்பட்ட படிகளில் நடைபெறும் தாக்கத்தில் ஆறுதலான படியே தாக்கவீதத்தைத் தீர்மானிக்கின்றது.

இதனை விளங்குவதற்கான உதாரணம் :-

ஒரு வீட்டிற்கு விருந்தாளிகள் வருகின்றபோது அவர்களுக்கான உணவை குடும்பத்திலுள்ள அங்கத்தவர்கள் இணைந்து தயாரிக்கும்போது குடும்ப அங்கத் தவரில் பெரியோர்கள் வேகமாகத் தொழிற்பட்டாலும் கடைசி வயது குறைந்த அங்கத்தவர் மெதுவாக மரக்கறிகளை வெட்டுவாராயின் அன்றைய விருந்து மெதுவாக வெட்டுபவரிலேயே தங்கும். இவ்வாறான உதாரணங்கள் மாணவர்கள் பாடத்தை விளங்கப் பெரிதும் உதவும்.

பாட விடயங்களை ஆசிரியர்கள் கற்பிக்கும்போது மாணவர்கள், சொல்வதை அப்படியே கேட்க வேண்டுமென்றில்லை. ஏன் என்ற கேள்வி மனதில் தோன்றுமிடத்தே விளக்கத்தைப் பூரணப்படுத்த முடியும்.

ஆசிரியர் கற்பித்த விடயங்களை நீங்கள் சரியாக விளங்கியுள்ளீர்களா என சரி பார்ப்பதற்கு இரண்டு பிரதான உத்திகள் உள்ளன.

1) கடந்தகால வினாக்களைப் பயிலுதல்.
2) குறைந்தது இருவருடனாவது கலந்துரையாடல் மேற்கொள்ளல்.

பரீட்சை விடயத்திற்கு வருவோமாயின் நேரத்திற்குள் பரீட்சை எழுது வேண்டியுள்ளதால் நேரத்தை மீதப்படுத்தக்கூடிய இடங்களைக் கண்டறிந்து அவற்றை முதலிலேயே தயார்ப்படுத்தி வைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக :-

$CaCO_3$ இன் மூலர்திணிவைக் கணிக்க வேண்டியிருப்பின் $CO_3^{2-}$ இன் மூலர்த்திணிவு 60 எனக் முதலிலேயே தயார்ப்படுத்தி இருப்பின் பரீட்சையில் அதனுடன் Ca இன் 40 இனைக் கூட்டி விடலாம். இல்லையேல் C = 12, O = 16 எனத் தரப்பட்டதைப் பயன்படுத்தி 12 + 16 x 3 = 60 எனக் காணுவதற்கு சிறிது தாமதாகும். அதேபோல் $SO_4^{2-}$ = 96 எனக ஞாபகமாக வைத்திருப்பின் $H_2SO_4$ = 96+2 = 98 விரைவாகக் கணிக்க முடியும்.

உதாரணம் 2 :-

எமது பாடத்திட்டத்தில் தேவையான மடக்கைப் பெறுமானங்கள் பிரதான மாக $\log^{1}_{10}$ தொடக்கம் $\log^{10}_{10}$ வரையானவை எனவே $\log^{1}_{10} = 0$ $\log^{10}_{10} = 1$ எனவே இடையிலுள்ள $\log^{2}_{10}$ , $\log^{3}_{10}$ .... இவற்றின் பெறுமானங்களைப் பாடமாகவே வைத்திருத்தல் எவ்வளவோ நேரத்தை மீதப்படுத்தும். சிரமத்தைத் தவிர்க்கும்.

உதாரணம் 3 :-

$MnO_4^-$ அயன் அமில ஊடகத்தில் ஒட்சியேற்றியாகத் தொழிற்படும்போது 5e மாற்றம் என்பதைக் கணித்தும் முறைப்படி காணலாம். எனினும் அடிக்கடி பாவனையிலுள்ள $MnO_4^-$, $CrO_4^{2-}$, $Cr_2O_7^{2-}$ என்பவற்றின் மாற்றங்களை ஞாபகப்படுத்தி வைத்திருத்தல் சிறந்தது.

உதாரணம் 4 :-

அவகாதரோ எண்ணினால் வகுக்க வேண்டிய இடங்களில் அணுத் திணிவலகாகிய $1.66 \times 10^{-24}$(g) இனால் பெருக்குதல் சுலபமானது.

உதாரணம் 5 :-

எச்சமன்பாடாயினும் முதலாவதாக தானங்களைப் பிரதியிடும்போது அலகுகளுடன் பிரதியிடுதல் மிக மிக முக்கியமானதாகும். ஏனெனில் புள்ளித் திட்ட மிடலில் அலகு பிரதியீட்டிற்கு வேறாக புள்ளிகள் ஒவ்வொரு சமன்பாட்டிற்கும் வழங்கப்பட்டுள்ளது. இறுதி விடை பிழை எனில் இப்புள்ளிகள் கைகொடுக்கும்.

Eg :- 1kg உழுந்து 400.00
1m சீத்தைத் துணி = 60 ரூபா

250(g) உழுந்து, 250cm சீத்தைத்துணி எவ்வளவு எனக் கேட்பின் விடை 115.00. இது பிழை. 250.00 சரியானது. எனவே அலகு ரீதியான தவறே அநேக பெரும் தவறுகளை உண்டு பண்ணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் 6 :-

$$\frac{x}{124} + \frac{y}{258} = 72$$

என ஒரு சமன்பாடு காணப்படின் சுலபமாக்குவதற்கு முழுச்சமன்பாட்டையும் 124 x 258 இனால் பெருக்கவும்.

$$124 \times 258 \ \frac{x}{124} + 124 \times 258 \times \frac{y}{258} = 72 \times 124 \times 258$$

$258x + 124y = 72 \times 24 \times 258$ என இலகுவாக்கிக் கொள்ளலாம்.

உதாரணம் 7 :-

$H_2SO_4$ இன் பயன்பாட்டை SODAN எனச் சுருக்கி ஞாபகப்படுத்துதல்

**S**ulphonation
**O**xidation
**D**ehydration
**A**cid
**N**itration

இதே போல் வேறு பலவற்றுக்கும் சுருக்கக் குறியீட்டு ஞாபகப்படுத்தல் உத்தியாகப் பயன்படுத்துதல்.

உதாரணம் 8 :-

தசம பெறுமானங்களைச் சுருக்கும்போது இயன்றவரை பத்தின் அடுக்குகளாகவும் சுலமானதாகும் தவறைத் தவிர்க்கவும் உதவும்.

Eg : $\frac{0.001}{0.01} = \frac{1 \times 10^{-3}}{1 \times 10^{-2}} = 1 \times 10^{-1}$

$= 0.1$

$\frac{78}{9.8}$ இதை சுருக்க சுலபமான வழி

9.8 இனைப் போல் 78 கிட்டத்தட்ட எட்டு மடங்கு. எனவே 9.8 உடன் 0.2இனைக் கூட்டின் 78 உடன் அவ் 0.2 இன் எட்டு மடங்கை கூட்டின் சுலபமாகச் சுருக்கலாம்.

$$\frac{78 + 0.2 \times 8}{9.8 + 0.2} = \frac{78 + 1.6}{10}$$

$$= \frac{79.6}{10}$$

$$= 7.96$$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/Lஇல் வெற்றிச் சிகரத்தைத் தொட வேண்டுமாயின் பாடத்திட்டத்தைக் கால எல்லைக்குள் நிறைவு செய்வதும், கடந்த கால வினாக்களில் குறைந்தது 15 வருடத்தை முற்றாகச் செய்வதும் சிறந்த பலனளிக்கும். கடந்த கால வினாக்களைப் பின்வரும் மூன்று முறைகளில் செய்தல் சிறந்தது.

1) அலகு நிறைவடையும் தறுவாயில் அலகு ரீதியாக
2) முழு வினாத்தாளையும் ஒரேயடியாக
3) நேரத்திற்குள் செய்யப்பழகுதல்.

இதுவரை சில நுட்பங்களைக் கையாள்வதன் மூலம் நான் இயன்றவரை எட்டு மாதங்களுக்கு முன்னரே பாடத்திட்டங்களை நிறைவாக்கியுள்ளேன். அதற்கு இறைவனின் ஆசீர்வாதமும் மாணவர்கள், பெற்றோர்களின் ஒத்துழைப்புமே காரணம். முதல் தடவை தோற்றும் மாணவர்களுடன் இரண்டாவது, மூன்றாவது தடவை மாணவர்களும் போட்டி இடுவதால் முதல் தடவை மாணவர்கள் பாடத்தைச் சுமூகமாக விரைவுபடுத்துவது அவர்களுக்குச் செய்யும் மிகப்பெரிய சேவையாகும்.

அத்துடன் ஆய்வுகூடப் பயன்பாட்டில் மிகக்கவனமாக, நுட்பமாக, முன்னெச்சரிக்கையாக இரசாயனங்களைக் கையாளுதல் வேண்டும். ஏனெனில் இரசாயனங்கள் தவறுகளை மன்னிப்பதில்லை. எனவே

1) உயிரியல் ஆபத்துக்கள்
2) உடலியல் ஆபத்துக்கள்
3) இரசாயனவியல் ஆபத்துக்கள்

ஏற்பட வாய்ப்புண்டு. எனவே விஞ்ஞானகூடத்தில் பின்வரும் பிரதானமாகப் பின்வருவனவற்றின் பாதுகாப்பு அவசியம்.

1) நெருப்பிலிருந்து பாதுகாப்பு.
2) கண்களைப் பாதுகாத்தல்.
3) இரசாயனத்திலிருந்து பாதுகாத்தல்.
4) ஆய்வுகூட நுட்பங்கள் தொடர்பான பாதுகாப்பு
5) தனியாள் முற்பாதுகாப்பு
6) ஆய்வுகூடச் சூழல் பாதுகாப்பு

எனவே இவ்வகையான பாதுகாப்புகளுக்காக பின்வரும் பிரதான உபகரணங்கள் பயன்படுத்துதல் வேண்டும்.

1) ஆய்வுகூட மேலங்கி
2) காலணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) கண் பாதுகாப்புக் கண்ணாடிகள்
4) கையுறை
5) தலைக்கவசங்கள்
6) முக அங்கிகள்
7) ஆவி, புகை என்பவற்றை மறைக்கும் கவசம்
8) சுவாசப் பாதுகாப்பு அங்கிககள்.

எனவே இவற்றைப் பயன்படுத்திப் பாதுகாப்பதுடன் முன்னெச்சரிக்கையாக முன்ஆயத்த மாதிரிப் பயிற்சிகளும் மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும். இயன்றவரை இவற்றைக் கையாண்டு இரசனை மிக்க இரசாயனவியலில் துறைசார் தேர்ச்சி பெற எல்லாம் வல்ல இறைவனின் துணையையும் வேண்டி நிறைவுறுத்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளியை வளர்த்திட்ட பாலாவே...

**அபிலாசா – வதனராசா**
2018 உயிரியல் பிரிவு

வெள்ளை புறாக்களாக நாம் பள்ளியில் அமைதியாய் வலம் வரவே
தன் வெள்ளை மனம் கொண்டு எமக்காய் வழியமைத்து தந்திட்டனர்
வருடங்களோ ஆறதான் ஆனால் எம்பள்ளியின் வளர்ச்சி தான் என்னும் ஆறுமோ!
பதவிகாலத்தில் பண்பாய் - தன் கடமை அறிந்து செயற்பட்டார்.

மரங்களே தெய்வம் என தன் குழந்தை போல் அவற்றையெல்லாம் - தினம்
வளர்ந்திட்டே எம் பள்ளியை நல்லதொரு பூஞ்சோலையாய் மாற்றியவர்
பேச்சினிலே சிறந்தவர் தான் - அவர் கலகலப்பான பேச்சுக்கோ
குறைவில்லை எம் அதிபர் அறையினிலே ..

வகுப்புக்கு ஆசிரியர்கள் வரவில்லை எனின் வந்திடுவார்
வரிவரிவாய் சமன்பாடுகளை வரிசையாய் தீர்த்திடுவார்.
பதினோராம் வகுப்பினிலே பலர் கணிதத்தினை வெறுத்திடவே
அதை சரிசெய்ய தினம் தினமும் முனைந்திட்டார்.

சங்கீதம் பாடுகையில் இனிய குரல் கேட்டு வந்திடுவார்
ஸ்வரங்கள் முதற்கொண்டு நாட்டு பாடல்களையும் புரிந்திடுவார்.
பள்ளி விழாக்களிலே தன் இனிய குரல் கொண்டு
இன்பமான கான மழை பொழிந்திடுவார்.

நாட்டியமும் நாடகமும் வளர்ந்ததும் அவராலே
போட்டிகள் முதற்கொண்டு அரங்கேற்றம் வரை தன்
முழுமையான ஒத்துழைப்பினை முனைப்பாக வழங்கியே
பலர் பாராட்டை பெற்றிடுவார்.

தற்காப்பு முக்கியம் தான் இது காலத்தின் தேவையென
தன் காலத்தில் கராத்தேயில் பல பரிசில்களை பெறவைத்தார்
விஞ்ஞான பாடமதை நம் விருப்புடனே கற்றிடவே - பல
வழிகளிலே முயன்றிட நல்லதொரு முயற்சியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு போட்டியிலே அணிநடையின் வருகையிலே
அவர் நடையின் சாயலுண்டு
சிறுவிளையாட்டு முதற்கொண்டு பெரு விளையாட்டு வரை
அனைத்தினையும் கற்றுணர்ந்த ஆய்வாளர்.

சைவமும் தமிழும் எம்பள்ளியிலே தனித்துவமாய் மிளிர்ந்திடவே
தன்நலம் பாராது உழைத்திட்ட உழைப்பாளி
ஆங்கில போட்டிகளில் அவர்தான் - எம்
மதிப்பீட்டாளர் அவ்வகையில் நல் ஆசானவர்.

எத்தனையோ கலைகளிலே எம் பள்ளி வெற்றி பெற
காலை, மாலை மட்டுமன்றி தினம் தினம் இரவினிலும் பாடுபட்டார்.
பள்ளியில் மட்டுமன்றி தேசியத்துடனே சர்வதேசம் வரை
புகழ் பெறவே வித்திட்ட நல் அதிபரவர்
நீர் அமைத்த பாதையிலே - நாம் சென்று
வெற்றி கண்டோம் - என்றும உம்புகழ் பாடி
காத்திருப்போம் பள்ளி விழாக்களுக்காய்
வரவேண்டும் காலமெல்லாம் இது எங்கள் வரவேற்பு

பல வருட சேவையில் பண்பாளரையும் - நல்
படிப்பாளர்களையும் பலர் கண்முன்னே - செதுக்கிய சிற்பி
பாலகிருஷ்ணன் ஐயா! நீர் பலகாலம் வாழவேண்டும்
பார் போற்றும் நல் வாழ்வுதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2019ம் ஆண்டிலிருந்து க.பொ.த (சா/த) கணித வினாப்பத்திர அமைப்பும், எதிர்கொள்ளும் சவால்களும் அதற்கான தீர்வும்



திரு.நா.கேதீஸ்வரன்
**Sp.Trd (Maths),**
**BA, Dip. in Ed.**
கணிதபாட இணைப்பாளர்.
கிளி / பளை மத்திய கல்லூரி

**பகுதி 1** **பகுதி 2**

பகுதி 1A 2 x 25 = 50 புள்ளிகள் பகுதி 2 A 10 x 5 = 50 புள்ளிகள் பகுதி

1B 10 x 5 = 50/100 புள்ளிகள் பகுதி 2 B - 10 x 5 = 50/100 புள்ளிகள்

(நேரம் 2 மணித்தியாலம்) (நேரம் 3 மணித்தியாலம்)

100+ 100 = 200 ÷ 2 = புள்ளிகள்

2016, 2017 க.பொ.த (சா/த) A தரசித்தி வீதம் இலங்கை ரீதியில் 19% ஆகக் காணப்படுகின்றது. க.பொ.த (சா/த) இல் A தர, Bதர சித்தி பெற்றோர் க.பொ.த (உ/த) கணித விஞ்ஞானப் பிரிவுகளை தேர்ந்தெடுக்கும் பல மாணவர்கள் உ/த பரீட்சையில் சித்தி பெறத் தவறுகின்றனர். அதற்காக A தர சித்தி வீதத்தை 19% இலிருந்து 10% ஆகக் குறைக்க அரசாங்கம் ஆலோசனை வழங்கியுள்ளது. அதே நேரத்தில் S தர சித்தி வீதம் பாதிக்காத வகையிலும் திட்டமிடப்பட்டுள்ளது. இனிவரும் காலத்தில் மாணவர்கள் A சித்திவீதத்தை இலகுவாகப் பெற இக்கட்டுரை மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

புதிய வினாத்தாளின் படி நேரம் போதாமல் இருந்தது என்பதனை கருத்தில் கொண்டு 4 ½ மணித்தியால வினாத்தாள் 5 மணித்தியாலமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது மீத்திறன் மாணவருக்கு உதவியாக இருக்கும்.

பகுதி 1ல் வரக்கூடிய வினாக்கள் பாடத்திட்டத்தில் எல்லைப்படுத்தக் கூடியதாக வரையறுக்கப்பட்டுள்ளது. (தரம் 10, 11 பாடத்திட்டம்) மட்டும் பகுதி 2 வினாத்தாளிலே 12 வினாக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2016 க்கு முதலில் வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாத்தாளிலும் 12 வினாக்களே உள்ளடக்கப்பட்டிருந்தன. ஆனால் பழைய வினாத்தாள்களில் 12 வினாக்களும் பல கட்டமைப்பைக் கொண்டிருந்தன. எனவே ஒவ்வொரு வினாவிலும் ஐந்து கட்டமைப்புக்கள் காணப்பட்டமையினால் ஒவ்வொரு வினாவிலும் சில கட்டமைப்பு பகுதிகள் மாணவர்கள் சிரமத்தை எதிர்நோக்கிலும் கணிசமான புள்ளிகள் பெறக்கூடியதாக இருந்தது.

புதிய வினாத்தாள்களில் 12 வினாக்கள் காணப்பட்டாலும் அதில் நான்கு அல்லது ஐந்து வினாக்கள் மூன்று கட்டமைப்பு அல்லது கட்டமைப்பு இல்லாத வினாக்களே காணப்படுகின்றன.

உதாரணமாக 2017 பகுதி 2 ல் 9ம் வினா இரண்டு கட்டமைப்புக்களும் 1ம்,4ம், 5ம் வினா மூன்று கட்டமைப்புக்களும் 2016 பகுதி 2ல் 1ம், 12ம் வினாக்கள் கட்டமைப்பு இன்றியும் 4ம், 7ம் வினாக்கள் முறையே மூன்று, இரண்டு கட்டமைப்புக்கள் மட்டும் காணப்படுகின்றன. இவ்வாறான வினாக்கள் மீத்திறன் மாணவர்களாலேயே விடையளிக்க முடியும்.

எனினும் பகுதி1 வினாத்தாள் சாதாரணமாக எல்லா மாணவர்களாலும் விடையளிக்க முடியும். பகுதி 2 வினாத்தாள் A பகுதியில் 3 வினாவும் சாதாரண பயிற்சியின் மூலம் விடையளிக்க முடியும்.

புதிய வினாத்தாளில் சித்தியடைவது இலகுவாக காணப்படுகிறது. A தரசித்தி B தர சித்தி பெறுவதற்கு பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

கணிதத்துறை தேசிய கல்வி நிறுவகத்தால் க/பொ/த (சா.த) செயற்றிட்டத்தை அதிகரிக்கும் முகமாக 9, 10, 11 என ஒவ்வொரு தரத்திலும் ஏழு மாதிரி வினாத்தாள்கள் இணையத்தளத்தில் வெளிவந்துள்ளன. தரம் 9 இல் இருந்து தரம் 11 வரை வினா கட்டமைப்பு வினாக்கள் மாணவர்கள் பயில்வதன் மூலம் அதிக மாணவர்கள் இக்குறிக்கோளை அடைய முடியும். இவ்வினாத்தாளில் வந்த 9 இல் உள்ள வினா உதாரணம்

இரண்டு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| |
|---|
| ரூபா 850 க்கு வாங்கிய சட்டையை ரூபா 1190 க்கு விற்றல் |
| ரூபா 780 க்கு வாங்கிய காற்சட்டையை ரூபா 1170 க்கு விற்றல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சட்டை விற்பனையில் அடைந்த இலாபம்
- சட்டை விற்பனையில் கிடைத்த இலாபத்தை சதவீதமாக தருக.
- சட்டை ஒன்றை விற்பதிலும் பார்க்க காற்சட்டை ஒன்றை விற்பது இலாபகரமானது என நிமால் கூறுகிறார். அவரின் கூற்று உண்மையானதா? காரணம் தருக?

சட்டை ஒன்று r% இலாபத்துடன் ரூபாP க்கு விற்கப்பட்டால்

$P = \frac{17(100+r)}{2}$ எனக் காட்டுக.

2017 பகுதி 2 இல் சில வினாக்களில் ஒரு வினாவில் III, IV பகுதி கடினத்தன்மை காணப்பட்டாலும், அதற்கு புள்ளிகள் குறைவாக கொடுத்து 1, 2 ஆம் பகுதிக்கு கூடுதலாக புள்ளி வழங்கப்பட்டு A, B தர சித்திகள் அதிகளவு மாணவர்கள் பெற வாய்ப்பு ஏற்படுத்தியிருந்தது. ஆனால் காலப்போக்கில் இப்புள்ளியிடும் திட்டம் மாற்றப்பட்டு A, B தரச் சித்தி பெறுவதற்கு மாணவர்கள் கூடுதலாக கவனம் செலுத்த வேண்டியிருக்கும். A தர சித்தி விரும்பு மாணவர்கள் பகுதி 2 Aஇல் வினா 6உம் பகுதி 2 B இல் 6 வினாவும் விடையளிக்கும்போது குறைந்த புள்ளிகள் உள்ள ஒவ்வொரு வினாவும் நீக்கப்படும். இதனால் உயர் புள்ளிக்கு பாதிப்பு ஏற்படாது. மேலும் ஒரு சில விடைகளில் பிழை ஏற்பட்டாலும் A தர சித்தி வீதம் பாதிப்பு ஏற்படாது. அதற்கு ஏற்றவாறு மாணவர்கள் கூடுதலாக பயிற்சியில் ஈடுபடும் போதும் கடந்த 10 வருட வினாக்கள் மீட்டுப் பார்க்கும் போதும் இலகுவில் வெற்றியடைய முடியும்.

பகுதி 1 A யில் உள்ள 30 வினாக்கள் 25 வினாக்களாக குறைக்கப்பட்டு சமனான புள்ளி வழங்கப்பட்டமையும், ஒரேயளவு தரநிர்ணயம் பேணப்படுகிறது. பகுதி 2 இல் எல்லைப்பத்தப்பட்டு வினாக்கள் அமைவதால் குறைந்த அடைவில் உள்ள மாணவர்கள் குறிப்பிட்ட சில பாட அலகுகள் விருப்பத்துடன் கற்று சித்தி பெற ஏதுவாக அமைகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபர்

பாஸ்கரன் சதுஸ்டிகன்
(தரம் 12 கணிதப்பிரிவு)
பாஸ்கரன் சாரங்கன்
(தரம் 10)

எங்கள் அதிபர் பாலகிருஷ்ணன்
கருணை மிக்க பெருந் தலைவர்
வாதரவத்தை ஊரின் மைந்தன்
பளை மத்திய கல்லூரியின் அதிபர்

கண்ணிற் சிறந்த கல்விக்காய்
கிளிநொச்சி மாவட்டத்தில் அதிபராய் பணி செய்தார்.
மாணவர் எங்கள் வாழ்வு சிறக்கவே
மாண்புடனே சேவை செய்த எங்கள் அதிபர்

காலை, மாலை எப்பொழுதும்
கருத்துடனே கடமை செய்வார்
வேலை இன்றி சிறுபொழுதும்
வீணாய் போக்க மாட்டார்.

கற்றறிந்து நித்தம் வாழ்வில்
வெற்றி காணவே
கல்வியின் அவசியத்தை
உயர்த்திய அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித பாடத்தின் அடைவு மட்டத்தை
உயர்த்திட
விடுதலைக் காலங்களில்
நுண்ணறிவு நுட்பங்களை
கற்றுத்தந்த எங்கள் அதிபர்

இனிக்க இனிக்கப் பாடிப்பாடி
நடித்துக் காட்டுவார்.
நகைச்சுவையாய் பேசிப்பேசி
போதனை செய்திடுவார்
எங்கள் அதிபர்

எண்ணும் எழுத்தும் கண்கள் என்று
ஆர்வம் ஊட்டுவார்.
கண்ணியமாய்க் கற்றும் உயர
வழியும் காட்டுவார்
எங்கள் அதிபர்.

எம்மை என்றும் சோர்ந்திருக்க
விட்டிட மாட்டார்.
எம்முள் ஒருவராய் இருந்து
கல்வியையும் ஒழுக்கத்தையும் ஊட்டிடுவார்
எங்கள் அதிபர்.

அதிபராக தந்தையாக
வலம் வருகின்றார்.
மனிதத் தெய்வமாக அவரை
வாழ்த்தி வணங்கிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மறையே எங்கள் திருக்குறளே ...



திருமதி.நே.ரஞ்சிதமலர்
இதழாசிரியர்,
ஆசிரியர் (தமிழ்)
கிளி/பளை மத்திய கல்லூரி.

திருக்குறளைத் தொட்டாலும் கை மணக்கும், படித்தால் கண் மணக்கும் கேட்டால் செவி மணக்கும், எண்ணினால் இதயம் மணக்கும். செய்யா மொழியெனும் வடமொழி வேதத்தினும், பொய்யா மொழியெனும் இத்தமிழ் மறையே நூலவும் சிறந்தது.

பொன்னுக்குள்ளே சாம்புனையப் பொன்னும் , மலர்களுக்குள் தாமரையும், யானைகளில் ஐராவதமும் , தேவர்களுள் திருமாலும் போல நூல்களில் சிறந்தது திருக்குறளாகும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய பொக்கிசமாக மானிட வாழ்வில் இந்நூல் சிறப்புப் பெறுகின்றது. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பால்களையும் கொண்டு நூற்றுமுப்பத்து மூன்று அதிகாரங்களையும் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களையும் கொண்ட வாழ்வியல் நூலாகத் திருக்குறள் மிளிர்கின்றது.

திருக்குறள் முதன் முதலில் 1812 ஆம் ஆண்டு ஓலைச்சுவடியிலிருந்து அச்சிடப்பட்டது. இந்நூலுக்கு முதல் முதலில் உரை எழுதியவர் மணக்குடவர் ஆவார். நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களுடைய குறளில் ஒரே ஓர் அதிகாரத்தின் பெயர் மட்டுமே இரண்டு அதிகாரங்களுக்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது. அது குறிப்பறிதல் என்ற அதிகாரமாகும். “அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு” என்று கடவுள் வாழ்த்திலே ஆரம்பித்த இந்நூல் அதன் பெருமை சேர் பொக்கிசங்கள் பலவற்றை தன்னகத்தே அடக்கி உலகப் பொதுமறை என்ற சிறப்பைப் பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறளை முதன் முதலில் பிறமொழியில் மொழி பெயர்த்தவர் பெஸ்கி என்றழைக்கப்படும் வீரமாமுனிவராவார். இதனால் உலகமக்கள் அனைவரும் பயன் பெறும் நூலாக மிளிர்கின்றது. திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்கள் 42, 194 ஆகும். "ஔ" என்ற உயிர் எழுத்து திருக்குறளில் இல்லை.

அன்புடைமை பேணி, இனியவை கூறி செய்ந்நன்றி அறிந்து நடுவு நிலைமை பேணி அடக்கம், ஒழுக்கம், பொறுமை என்ற வாழ்வியல் பாடங்கள் அமைந்த சிறந்த நூலாகத் திருக்குறள் விளங்குகின்றது.

உலகப்புகழ் பெற்ற தமிழிலக்கியம் திருக்குறளாகும். திருக்குறளில் தமிழ் என்ற சொல் இடம் பெறவில்லை. வள்ளுவர் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களில் கடவுள் என்ற சொல்லை வைக்கவில்லை. எனவே கடவுளில் நம்பிக்கை வைத்துள்ள வள்ளுவர் கடவுளுக்கென்று ஒரு அதிகாரம் வைத்துள்ளார். எல்லா மதக் கடவுளையும் இவர் தன் குறட்பாக்களில் குறிப்பிட்டுள்ளார். அகரம் ஆகிய முதல் எழுத்தில் முதலதிகாரமான கடவுள் வாழ்த்தில் "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என முதல் குறளில் தொடங்கி ஆயிரத்து முந்நூற்று முப்பதாவது இறுதிக்குறளில் இறுதி எழுத்தான "ன்" ஐச் சேர்த்துள்ளார். "ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கு இன்பம் கூடி முயங்கப் பெறின்" என குறள் காட்டியுள்ளார்.

திருக்குறளில் இடம்பெறாத எண் ஒன்பது . இந்நூல் இருபத்தாறு மொழிகளில் வெளிவந்துள்ளது. ஆங்கிலத்தில் நாற்பது மொழிகளில் மொழிபெயர்த்துள்ளார். குவளை மலரும் அனிச்சம் பூவும் திருக்குறளில் இடம்பெற்றுள்ளது. நெருஞ்சிப் பழமும், குன்றிமணி விதையும் பயன் படுத்தப்பட்டுள்ளது. "னி" என்ற எழுத்து அதிக தடவை பயன்படுத்தப்பட்டுள்ளது.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருள்களில் முதல் மூன்றையும் கூறியவர் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்பதற்கிணங்க இவ்வுலகில் மூன்றையும் அனுபவித்தவன் தேவருலகில் வைக்கப்படுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ண லீலை

திருமதி. வூர்தகவி தேசநாயகம்
ஆசிரியை - சங்கீதம்
கிளி / பளை மத்திய கல்லூரி

பார்த்தனுக்கு அணி செய்த கண்ணன் அவன் - ஆண்டு
நாற்பதாய் பணி செய்த கிருஷ்ணன் இவன்

குழலொடு எழிலுறு கண்ணன் அவன் - விருது
"தமிழெழில்" பெறு பால கிருஷ்ணன் இவன்

வைகுண்டத் தலைவனாம் கண்ணன் அவன் - கிளி
அதிபர்க்கு முதல்வனாம் கிருஷ்ணன் இவன்.

பிருந்தாவன மாயக்கண்ணன் அவன் - எதற்கும்
கிறுங்காத ஒரு பாலகிருஷ்ணன் இவன்

யுக்தியால் பகைமை வெல் கண்ணன் அவன் - தனது
புத்தியால் தலைமை செய் கிருஷ்ணன் இவன்

ஆயர் பாடியின் கண்ணன் அவன் - பல
நேயர் உள பால கிருஷ்ணன் இவன்

வெண்ணெய் தனையுண்ட கண்ணன் அவன் - கணித
எண்ணைக் கரைகண்ட கிருஷ்ணன் இவன்

கேட்ட வரம் தரும் கண்ணன் அவன் - இனிய
பாட்டும் தரும் பால கிருஷ்ணன் இவன்

கீதையைப் போதித்த கண்ணன் அவன் - பலர்
பாதையைச் சாதித்த கிருஷ்ணன் இவன்

ராதையின் விழி மலர்க் கண்ணன் அவன் - அன்புக்
கோதை மதிமலர்க் கிருஷ்ணன் இவன்

காலிங்க நடமிடும் கண்ணன் அவன் - உரிய
காலத்தே களமிடும் கிருஷ்ணன் இவன்

சாரதியாய் நின்ற கண்ணன் அவன் - அன்பு
மாருதியாம் பால கிருஷ்ணன் இவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்களுக்கோர் முன்னுதாரணம் ...



திரு.ம.மதிதாஸ்
(B.A, PGDE, JUSTICE OF THE PEACE (WHOLE ISLAND)
முன்னாள் ஆசிரியர்,
கிளி/பளை மத்திய கல்லூரி
தற்போது
யா/சிதம்பராக் கல்லூரி
வல்வெட்டித்துறை.

41 வருட கால ஆசிரிய, அதிபர் பணியில் இருந்து ஓய்வு பெறும் திரு.சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் அவர்களுக்கு பாராட்டுக் கட்டுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 2013ம்ஆண்டில் இருந்து இன்று வரை நான் ஆசிரியப்பணியுடன் அறப்பணியினையும் மேற் கொள்வதற்கு எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் அதிபரை இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்திப் போற்றுவது சாலச்சிறந்தது.

பொதுவாக பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலைக்கு வருகின்ற நலன் விரும்பிகளின் நிதியுதவிகளை வலயமட்ட வெளிவாரி மதிப்பீட்டில் உயர் புள்ளியைப் பெறுவதற்காக தமது பாடசாலைக்கே முழுமையாகப் பயன்படுத்த முற்படுவார்கள். ஆனால் எமது அதிபர் பளை மத்திய கல்லூரிக்கு என்னால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியுதவிகளை பளைக் கோட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் சமமாகப் பங்கீடு செய்து வழங்குமாறு கூறியதுடன் அதை நான் நடைமுறைப்படுத்துவதற்கு என்னுடன் தோளோடு தோள் நின்று தன்னால் ஆன அனைத்து உதவிகளையும் வழங்கியிருந்தார்.

இது அதிபர் அவர்களுடைய பெருந்தன்மையையும் அனைத்துப் பாடசாலை மாணவர்களையும் தனது பாடசாலை மாணவர்களாக ஏற்றுக் கொண்ட மனப்பக்குவத்தையும் எடுத்துக் காட்டுகின்றது.

செய்யும் தொழிலே தெய்வம் என்பதற்கு கொப்ப, வேலை நேரம் தவிர்ந்து தனது சொந்த நேரம் முழுவதையும் பாடசாலை வளர்ச்சிக்குரிய நேரமாகக் கருதி அர்ப்பணிபோடு செயலாற்றிய உயரிய மனப்பக்குவம் கொண்டவர் இவர். இவருக்கு நாள் முழுவதும் வேலை நாளே. வீட்டிற்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லாது பாடசாலையிலேயே தங்கியிருந்து அதிபராக, ஆசிரியராக, அலுவலக ஊழியராக, இரவுக் காவலாளியாக சேவையாற்றிய இவரைப் போன்ற ஒருவரை எனது ஆசிரிய சேவைக்காலத்தில் நான் கண்டது இல்லை. மிகவும் குறிப்பிடப்பட வேண்டிய கோடிட்டு காட்ட வேண்டிய முக்கிய விடயம் இவரை அனுகுதல் மிகவும் எளிதானமையாகும். மாணவர்களோ, பெற்றோர்களோ, ஆசிரியர்களோ பாடசாலை நேரமா யினும் சரி விடுமுறை நாளாயினும் சரி இவரைப் பாடசாலையிலேயே சந்திக்க முடியும். மேலும் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்யும் பண்பு அதிபரிடத்தில் மேலோங்கி இருந்ததை நான் நேரடியாக அவதானித்து இருக்கிறேன். இவரது காலத்தி லேயே கல்வியிலும் சரி விளையாட்டிலும் சரி தேசிய மட்டத்திற்கு மாணவர்கள் சென்று வெற்றியீட்டி வந்தமை இங்கு முக்கியமாகக் குறிப் பிடப்பட வேண்டிய விடயம். குறிப்பாக துடுப்பாட்டப் போட்டிக்கு பொறுப்பான ஆசிரியராக என்னை நியமித்து கோட்ட, வலய, மாகாண, தேசிய மட்டப்போட்டிகள் அனைத்திலும் வெற்றி பெறுவதற்கு ஊக்க மளித்தது இன்றும் எனது மனதில் பசுமையான நினைவுகளாய் உள்ளது.

அதிகமான பெண் ஆசிரியர்களையும், கடினமான குடும்ப பின்னணி யைக் கொண்ட ஆசிரியர்களையும், தற்காலிக இணைப்பு பெற்றுவரும் ஆசிரியர்களையும் வளமாகப் பயன்படுத்தி 1AB தரப் பாடசாலையான பளை மத்திய கல்லூரியினை நிர்வகிப்பது என்பது சவாலானதொன்றாகும். எனினும் சிறந்த ஆளுமையும் நிர்வாகத் திறனும் மனிதாபிமானமும் அதிபரிடத்தில் இருந்ததனால்தான் கடந்த காலங்களில் கல்வியிலும், விளையாட்டிலும் சிறந்த பெறுபேற்றினை இப்பாடசாலை பெற்று வருகின்றது. இவரது விருந்தோம்பல் பண்பு, கள்ளம் கபடம் அற்ற வெளிப்படையான பேச்சும் அவரது உயர்வுக்கும் பாடசாலையின் மேன்மைக்கும் அடிநாதமாக விளங்கின. அவரது நேர்மை கேள்விகளுக்கு அப்பாற்பட்டதாகும். சவால்களை எதிர்நோக்கி எந்த ஒரு செயற்பாட்டை யும் வெற்றிகரமாக செய்யக்கூடிய மன வைராக்கியத்தையும், நம்பிக்கையை யும், பொறுப்புக்களை ஏற்கக்கூடிய பண்புகளையும் எதற்கும் தயங்காது வகை கூறும் ஆற்றலையும் வினைத்திறன்மிக்க தொடர்பாடலையும் உள்ளடக்கிய ஒரு சிறந்த தலைமைத்துவத் திறனையும் தன்னகத்தே கொண்ட அதிபர் அவர்கள் பளை மத்திய கல்லூரிக்கு கிடைத்தது ஒரு மிகப் பெரிய பொக்கிஷமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெகிழ்ச்சித்தன்மையான அதேநேரத்தில் ஒழுக்காற்றலில் உள்ள இறுகிய தன்மை,தனது சக ஆசிரியர்கள்,கல்வி சாரா ஊழியர்களை தனது வலைப்பின்னலில் வைத்திருந்தமை என்பன இவர் இப்பாடசாலையில் சிறந்த முகாமையாளர் என சமூகத்திற்கு எடுத்துகாட்டியது. வயது எல்லையடையும் போது எல்லோரும் ஓய்வு பெற வேண்டி தேவையுள்ளது. எனினும் அதிபர் அவர்கட்கு இன்னும் சில காலம் சேவை செய்யும் உடல்,உள ஆற்றல் காணப்படுகின்றது. எனவே பொது அமைப்புகளோடு இணைந்து எமது தமிழர் தாயகத்தினுடைய கல்வி, கலை, விளையாட்டு மேம்பாட்டிற்கு உழைக்க வேண்டும் என்பது எனது பேரவாவாகும். வயதுதான் அறுபது ஆனால் உள்ளமோ நாற்பது. இளமைத்துடிப்புடனும், குழந்தை மனத்துடனும் கடமை, கண்ணியம், கடப்பாடு என்ற வரம்புக்குள் நின்று தனது பணியை செவ்வனே ஆற்றி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் உள்ளங்களிலே சிரித்த முகத்துடன் வீற்றிருக்கும் அதிபர் வாழ்க பல்லாண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "யாம் வாழும் நாளின் பின்பும் நீங்கள் வாழியவே"

திருமதி.பிரேமலா தங்கறூபன்
ஆசிரியர்

இரணைமடு தாலாட்டும் நொச்சியூரில்
ஈரிருபது வருடங்கள்
காலம் நேரம் பாராது
கல்விக்கு தாமம் சூடிய தலைவன்
மேகக் கல்வியை நாடியோருக்கு
மாகமென முன்னின்ற அருந்தவன்

மூலை முடுக்கெல்லாம் முதுபெரும்
சோதியாம் அதிபர் பணி புரிந்து
பிள்ளைகளுக்கும் புரிய வைப்பவர்க்கும்
தாதியென உதவும் தலைவன்
அறுகுபோல் முளைத்து ஆல்போல்
அரும்பணி ஆற்றிய அதிபர்.

கவின் கலையை கல்லூரி எங்கும்
சிற்பியால் வடித்தெடுத்து
காலைப்பிரார்த்தனையிலும் - மாலை
அறிவுரைப்புக் கூட்டத்திலும்
தேடித் தேடி எழுதாக்
கவி வளர்த்த இளையோய் /
வேளைக்கு வருவதென்றால் - நீரும்
சூரியனும் நேரமிடுவீரோ.

கூடியிருந்த குறை கதையாய்
நாடி வருவோர்க்கு நாடிய பதில் சொல்லி
இன்முகம் காட்டி பன்முக ஆளுமையை
முகாமைத்துவத்தின் அடையாளமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் நல்லன செய்யும் நல்லோய்
பின்னாளில் புன்சிரிப்போடு வாழும்
ஆசிரியப் பெருந்தகையின் உள்ளமதை அறிவீரோ!

சமூகத்தின் நாடிதனைப் பிடித்து
சுமூகமாய் சிக்கல் நனை தீர்த்து
வசீகரமான உள்ளத்துடன்
வந்தவர்களில் உளமறிந்து - நீங்கள்
தினம் தினம் அவதாரம் செய்யும்
ஆற்றலுள்ள தோற்றம்
பளையவர்க்கும் பழமையானதே!

வாழ்க ............................ பல்லாண்டு
வாழ்க .................. பல்லாண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைக்கு நீர்தான் ஐயா!



நாகராசா நகுலேஸ்வரன்
பெற்றோர்.

ஆசிரியம் என்றால் அவனியிலே
அனைவரும் போற்றிடும் பணியே
சான்றோரை உருவாக்கிடும் பணியும் அதுவே.

அகவையாகி மூப்புப் பெற்று
முதல்வர் தான் விடுதலையாகி
விடையளிக்கும் பெற்றோரான யான்
அரியதொரு கவி எழுதி
அனுப்புகின்றேன் இன்று.

உளநலம் பேணும் வகையில்
உன்னத வரிகளைத் தாம்
உளமார வாரி இறைத்தும்
கலகலவெனச் சிரித்து மகிழ்ந்து
கனிமொழி பேசியெம் சிறார்களின்
கல்விதனை வளர்த்திட்ட முதல்வரே!
உமதன்புப் பணியைப் பாராட்டி
பச்சைக் கொடியைப் பணிவுடனே காட்டுகிறேன்.

ஆசிரியர்களுக்கு நண்பனாய்
நல்ல வழிகாட்டி
பிள்ளைகளுக்குத் தோழனாய்
கல்வி வழிகாட்டி
பெற்றோர்களுக்குச் சகோதரனாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளை மண் பெற்றெடுத்த குழந்தை போல்
பலகால கல்விப்பணிதனைப்
பளை மத்திய கல்லூரியின்
முதல்வராய் நின்று மூப்புப் பெற்று
விடைபெறும் பாலகிருஷ்ணன் ஆசிரியர்
அவர்களை பாராட்டியே யான்
பச்சைக்கொடி அசைக்கின்றேன்.

இக்கால வேளையிலே எதிர்காலக் கல்வியுடன்
வாழ்வை வளமாக வகுத்து வைத்த
பலநூறு மாணவர்களும் பச்சையை அசைப்பதில்
பங்குண்டு அவர்களுக்கும்.

ஆறுதல் காலத்திலும்
அறநெறிக் கல்வியைத் தாம் ஆற்றவெனக் கோரி நின்று
அன்புடன் வழியனுப்பும்
நகுலேஸ்வரன் நான் இன்று
நற்பெயரைக் காத்திடுவேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# How to choose streams for higher studies



Nesarasa Nithunshan
B.Sc.(Hons) in Quantity Surveying
Soranpattu, Palai.
Old Student,
KN/Pallai Central College.

This becomes a headache when you are just entering 11th and you have to choose stream. In class 11 children tend to take the decision with a puzzled and ambiguous mind. Many times, they end up selecting a wrong stream, thereby opening the door to worst consequences in the long - term career prospects. while choosing intelligently can help you secure your future, going by others or just taking a stream forcefully can make your life more touch. Here are same simple steps to follow before choosing your stream.

First and foremost follow your heart. Seems funny but this is true. Always try to take the stream you feel. Your heart agrees with. It is always said that one should follow their heart this goes same with choosing a stream for yourself.

Take suggestions, but never let others decide for you. It is good to take suggestion from someone experienced because it helps us when we are confused but remember never let their suggestions be your final choice. The final choice should be yours because its not them who have to study but you. If you take your decision on other's suggestions without taking into account your choices you will never succeed.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

While choosing a stream one should choose something that he/she is interested in. It is proven that it something is done with some interest it yields more success than something done without any interest or less interest.

For example : If you ask someone interested in maths to take up humanities will he be able to do that well?

Every one has different thinking and different plus points and weak points and it is not necessary that you make the same choice your friend does. Maybe they is comfortable doing something which you don't find comfortable. So if you follow them you will surely not be able to do as good as they do. so never try to take the stream just because your friend does so.

When deciding a stream for yourself think what plus points you have and choose accordingly. For example If you are good in solving numerical then physics chemistry and math is the perfect stream for you. A confused person can never take good decision. So never be confused between two streams.

Once you have decided what to choose be sure of that. Don't change your stream after finalizing just because any of your friend is not taking that or you are discouraged by come one. Believe in what you have decided and be confident of that.

"Believe in yourself and all that you are. Know that there is something inside you that is greater than any obstacle".

Christian D.Larson.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமோடும் நலமோடும் வாழ்ந்திட
# உளமார வாழ்த்துகின்றோம்

சிறப்பான புதுமை விளையும் புத்தூரில் வந்துதித்த முத்தானவரே

கன்னல் தமிழ் மகனாய் கல்வியால் உயர்ந்திட்ட வித்தகனே

மணங்கொண்டு மண்ணில் மகத்தான சேவை நல்கிய உத்தமரே

தித்திக்கும் நற்பணிகளை நயமுடன் நானிலத்தில் வித்திட்டவரே

தமிழ் அன்னைக்கு அணிகலனாய் பெருமை தந்த புத்திரனே

உம்மை பெற்றவரும் குடும்பத்தவரும் மணவாழ்க்கைத் துணையவளும்

பிள்ளைகளும் மற்றவரும் உற்றவரும் மகிழ்ந்திருக்கும் புனிதமானவரே

பாடசாலையே வாழ்க்கையாகக் கொண்டு பண்பட்ட பணி புரிந்தீர்கள்

லட்சுமி கடாச்சமாய் எளிமையாக இருந்திட்டே ஏற்றங்கள் பெற்றவரே

கிளிநொச்சி மண்ணிலே மக்கள் மனதில் நிறைந்திட்ட மாண்பளரே

அருமையான ஆற்றல்களால் ஆசிரியர், மாணவர்களை ஆற்றுகைப்படுத்தியவரே

விஷ்வருபமாய் வளமான மாற்றங்கள் விளைவித்த ஆளுமையானவரே

மணம் வீசிடும் என்றும் உங்கள் மாசற்ற எண்ணங்களை மதிக்கின்றோம்

அன்பான அழகான குடும்பத்தோடு வளமும் நலமும் பெற்று

**வாழ்க பல்லாண்டு**

**வாழ்க! வாழ்க! வாழியவே!**

**திரு.வே.அன்பழகன்,**
ஆசிரியர்.
யா/செட்டித்தெரு அ.த.க. பாடசாலை.
**திருமதி.கவிதா அன்பழகன்**
ஆசிரியர்
கிளி/பளை மத்திய கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதார வாழ்த்துகின்றேன்



க.அபிஷிகா
2018இல் மருத்துவப் பிரிவில்
மாவட்ட நிலையில் முதலிடம் பெற்ற மாணவி.

கிளிநொச்சி மாவட்டத்திலே பளைப் பிரதேசத்திலே சாதனைகளுக்கு மேல் சாதனை படைத்துவரும் பளை மத்திய கல்லூரியிலே அதிபராகக் கடமையாற்றித் தற்போது ஓய்வுபெறும் எமது அதிபர் பாலகிருஷ்ணன் ஐயா அவர்களை வாழ்த்துவதில் என் உள்ளம் உவகை கொள்கின்றது.

கடந்து வந்த பாதையின் சாதனைத் தடங்களை நிலைநிறுத்துவதன் மூலம் கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி பளை மத்திய கல்லூரியை மீள் எழுச்சி பெறச் செய்து அதனை அபிவிருத்தியின் பாதையில் இட்டுச்சென்று பல வெற்றிகளையீட்டிச் சாதனை படைத்தவர் நம் அதிபர்.

நான் இப்பாடசாலைக்கு அனுமதிக்கு வந்தபோது என்னை இன் முகத்தோடு வரவேற்று மாவட்ட நிலையில் மருத்துவப் பிரிவில் முதல்நிலை பெற வேண்டும் என்று என்னை வாழ்த்தி ஊக்குவித்து ஆலோசனைகளை வழங்கி சிறந்த வழிகாட்டியாக இருந்தது மட்டுமல்லாமல் அடிக்கடி வகுப்பறைக்கு வந்து எமக்கெல்லாம் ஆக்கமும் ஊக்கமும் அளித்து நல்லாசானாகவும் நல்லதொரு தந்தையாகவும் திகழ்ந்தவர் இவர். அவரது விருப்பத்திற்கு இணங்க நானும் மருத்துவப் பிரிவில் மாவட்ட நிலையில் முதல்நிலை பெற்று அவருக்கும், எனக்கும், எனது பாடசாலைக்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளேன் என்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

கற்றோரும், கலைஞரும், உற்றோரும் உடன் வாழும் பழைமை மாறாப் பண்புகளைத் தன் மடியில் தாங்கித் தளைத்தோங்கும் எங்கள் அதிபரும், அவரது குடும்பமும் இவ்வுலகில் சீரும் சிறப்புடன் வாழ வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அவருடைய ஓய்வுக் காலத்திலும் கல்விப்பணி தொடர வேண்டும் என்றும் அவருடைய சேவை அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்றும் வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் அதிபர்



செல்வராசா கின்ஷிகா
மாணவி,
கிளி/ பளை மத்திய கல்லூரி

திறமையுள்ள அறிவாளி எம் அதிபர்
திட்டங்கள் தீட்டிடுவார் எம் அதிபர்
பட்டங்கள் பல பெற்ற எம் அதிபர்
பாலா என்ற நாமம் கொண்டார் எம் அதிபர்

பழைமையான பாட்டிசைக்கும் எம் அதிபர்
பாரிலுள்ளோர் மேன்மை கண்ட எம் அதிபர்
குன்றிலிட்ட தீபம் எம் அதிபர்
குன்றாத கணித மேதை எம் அதிபர்

கல்லாதவர் கற்றிடவும் எம் அதிபர்
கற்றார் தாம் உயர்ந்திடவும் எம் அதிபர்
தீயோரை நல்லோராய் எம் அதிபர்
வாழ வழி சமைத்திடுவார் எம் அதிபர்

கல்விக்குச் சுடரொளியாய் எம் அதிபர்
கலங்கரை தீபமாக எம் அதிபர்
நல்வித்தை போதித்த எம் அதிபர்
நம்மவர்கள் போற்றிடும் எம் அதிபர்

உதட்டினிலே சிறு நகையர் எம் அதிபர்
ஊக்குவிப்பார் மாணவரை எம் அதிபர்
பள்ளியில் வாத்திமாரை எம் அதிபர்
பாட்டினாலே சுவைக்க வைப்பார் எம் அதிபர்

அகவை அறுபதில் எம் அதிபர்
இளமை குன்றாத எம் அதிபர்
பல்லாண்டு வாழ எம் அதிபர்
பண்புடனே போற்றுகின்றோம் எம் அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கல்லூரி அதிபரே !



நகுலேஸ்வரன் சங்கவி
தரம் 8C மாணவி,
கிளி / பளை மத்திய கல்லூரி

அந்நாளில் அகத்தினுள் ஆர்வமாய் அறிவுரையை
அளித்திட்ட ஆசிரியர் தாம் எண்ணை எனக்குள் எழவைத்து
என்னை என்னுள் எழுதியது தாம், இன்று இலக்கமாய்
இயங்குவதை இனிதாய் இன்புற இலக்கணமாய்
எமைத் திகழ வைத்தீர்!

திறம்பட திசையாய் திகழ்ந்திட தினந்தோறும் தம் உழைப்பினை
உண்மையாய் உதிர்த்து உயர்வினை உலகெலாம்
உரைப்பதே நீர் தானே!

இறைவனுடைய பெயரைக் கொண்டு எமது பள்ளியின்
தெய்வமாய் ஒவ்வொரு பாடவேளையும் உலாவருவதும் நீர் தானே!
உமது பாட்டுத்திறமை, ஒவ்வொரு நிகழ்வுகளிலும்
எம்மை மகிழ்வூட்டிய உம் குரல் மறக்குமோ!

கல்வியின் கருத்தினை கவனித்தே களிப்புடன் கரவொளி
தாம் எண்ணத்து ஏணியில் ஏற்றமுடன்
ஏகியே நம் சிந்தனையை சீவியே
சீருடன் அவனியில் நாம் வாழ
நயப்புடன் நம்மை நல்லோராய் வாழ
வழிசமைத்த நல்லதிபரே நீவிர்
நலமுடன் வாழ வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Will remember you always Sir!



**Mrs.Mathura Parameswaran**
Teacher
KN/Pallai Central Collged

Mr.Sinnathamby Balakrishnan
Who contributed immensely to the
growth of our school in her thirty
long years teaching and administration

Since still looks very much
inclined and hopeful of doing
something to the smooth development
of our kilinochchi district

You did everything you could
to help your students shine
Despite the nasty challenges
no one has ever seen you whine

You've inspired our souls
with a precious legacy
You've taught us values
that will never retire sir!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The walls of this school
will feel hollow,
Corridors and garden
will feel empty,

Classrooms and office
will feel lifeless - without
the inspirational presence
of a principal like you

We will miss you sir,
for your patience and tolerance
and for your silly jokes
but mainly you'll be remembered

Your words and lessons
will be in our hearts for sure
you set the highest standards
for yourself and others too

May your retirement be filled
with many new adventures
I hope that your retirement years
are the best years of your life.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் அதிபர் - அனுபவப்பகிர்வு

செல்வி.கேதீஸ்வரன் திவாரகா
மருத்துவபீடம்
(மாவட்டநிலை 03- 2018)
பழையமாணவி
கிளி/பளை மத்திய கல்லூரி



அன்றொருநாள் புதிய அதிபர் நிமிக்கப்படப்போவதையும் பழைய அதிபர் மாற்றலாகிப் போகப்போவதையும் பற்றி ஆசிரியர் வட்டாரத்திலிருந்து பேச்சு அலுவலகப் பணியாளர் மூலம் எங்களுக்கும் கசிந்தது. அவர் எப்படி இருப்பார் என்பது பற்றிய ஏகப்பட்ட எதிர்பார்ப்புக்கள் எமக்குள் இருந்தன. பழைய அதிபரின் பிரிவின் துயர் அதிகம் வாட்டியதால் புதிய அதிபரை யாரோ ஒருவர் என்றே கருதியிருந்தனர். இந்துக் கல்லூரியிலிருந்து வந்தார். இந்தக் கல்லூரிக்கு என்னதான் செய்வார் என எண்ணினேன். முதல் வருடமே முன்னுதாரணமாகச் சிறந்த பெறுபேறு கிடைத்தது. அவர் மீதான எதிர்பார்ப்பு எகிறியது. பாடசாலையை அழகுபடுத்தினார். ஆங்கிலமொழி தினப்போட்டிகளில் அதிக அக்கறைகாட்டினார். அந்த வருடமே முயற்சிக்கு கைமேல் பலன் கிடைத்தது. அதுவரையில் பெரியபடிப்பு எதுவுமின்றி கடமைக்காக ஆங்கிலம் படித்த எனக்குகம் கூட ஏதோவொரு விருப்பம் வந்தது அந்த வெளிநாட்டு மொழியில். அதன் பின்னர் நடந்தது எல்லாம் அவருக்கு ஏற்றத்தையே கொடுத்தது.

அதிபர் என்றால் எப்பொழுதும் கையில் கம்புடன் முகத்தில் புன்னகை சிறிதுமின்றி மாணவர்களை மிரட்டுவார்; கண்டிப்பானவர்; பாடசாலை நிகழ்வுகளில் உரைமட்டுமே ஆற்றுபவர்; மாணவர்கள் தனதருகே நெருங்கவே விடாதவர். இப்படித்தான் அதுவரை ஒரு பிம்பத்தைக் கொண்டிருந்தேன். அவை அனைத்தையும் சுக்குநூறாய் உடைத்தவர் திரு.பாலகிருஷ்ணன் சேர். அவர்கள் முதல் வருட சரஸ்வதி பூஜையில் உரைதான் நிகழ்த்துவார் என எதிர்பார்த்திருக்கையில் திடீரென பாடல் என்றது ஒலிவாங்கி. அந்த ஆச்சரியம் நீங்கமுன்னரே காதில் தேனாய் பாய்ந்தது அவரின் "அன்பு மலர்களே ..." பாடல் தொடர்ந்ததும் அடுத்தடுத்தும் பல "நல்ல பெயரை வாங்க வேண்டும் பிள்ளைகளே..." பாடல் இன்னும் எங்கு கேட்டாலும் அவர் முகம் கண்முன் தோன்றுவதைத் தவிர்க்க முடியவில்லை. எப்பொழுதும் அக்கறை எப்போதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிப்பு எனத் திகழ்ந்தார் எம் அதிபர். எனக்கான O/L காலம் தொடங்கியது. அப்பொழுது மாணவர் கல்வியிலும் பாடசாலைப் பெறுபேற்றை உயர்த்துவதிலும் அவரது அயராத உழைப்பைக் கண்கூடாகக் கண்டேன். என்னாலும் என் நண்பர்களாலும் உயர் பெறுபேறுகளைப் பெறமுடிந்தமைக்கு முதுகெலும்பே எம் அதிபர்தான் என்றால் மிகையாகாது.

பாடசாலையில் ஆங்கிலத்திற்கு இருந்த ஆசிரியர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முயன்றும் முடியாமல் இறுதியில் வெளிப் பாடசாலையிலிருந்து ஆசிரியரை வரவழைத்து கற்றல் செயற்பாடுகளைத் தொடரச் செய்தார். எமது பள்ளிக்கு முதல் முதலில் ஆங்கிலவழிக் கல்வியைக் (English Medium) கொண்டு வந்தவரும் இவரேதான்.

நான் A/L வந்தபின்னும் அவர் என்னுடையதும் என் நண்பர்களினதும் கல்வியில் காட்டிய அக்கறை அளப்பரியது. ஒவ்வொரு மாணவரையும் தன் சொந்தப் பிள்ளையை விட அதிகமாகவே நேசித்து அவர்களை உயர்த்தியவர்.

A/L பரீட்சை எழுதி முடித்தேன். அதிபர் உட்பட அனைவரும் நான் மருத்துவபீடம் செல்வேன் என எதிர்பார்த்துக் காத்திருக்கையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றும் கூட துரதிஸ்ட வசமாக என்னால் மருத்துவபீடம் செல்ல முடியவில்லை. என்மேல் உண்மையாய் அன்பு கொண்டோர்அனைவரும் வருந்தினர். “அய்யோ பாவம்” என்றனர். ஆனால் அவர் சொன்ன மொழி என்னால் மறக்க முடியாதது. “3B நல்ல ரிசல்ட் தானே. உங்கட Batchஇல் போட்டி கூட அதனால் உமக்கு medicine கிடைக்கேல்ல என்றார். அந்த நேரத்தில் எனக்கு ஆறுதல் மொழிகளோ அனுதாபமோ தேவைப்படவில்லை. ஊக்கமும் பெருமை யும் எனது பெறுபேற்றிற்கான அங்கீகாரமுமே தேவையாயிருந்தது. அதை வழங்கியவர் என் குரு திரு.சி.பாலகிருஷ்ணன் சேர் அவர்களே.

அடுத்த வருடமே எனக்கு மருத்துவபீட அனுமதி கிடைத்தது. சந்தோசத்தில் யார் யாருக்கோ எல்லாம் phone செய்து பேசினேன். அதிபரை மறந்துவிட்டேன். அம்மா ஞாபகமூட்ட வெந்நீரைக் காலில் ஊற்றிய ஓர் உணர்வு. பல தடவை அழைத்துப் பார்த்தேன் அவருடன் பேசமுடியவில்லை. அடுத்தநாள் அவருடன் பேசியதும் என் பெறுபேற்றைச் சொல்லி மகிழ்ந்ததும் மனநிறைவைத் தந்தது.

என்னைப் போன்ற பல மாணவர்களிற்கு ஏணியாய் நின்றவர். அனைவர் மனங்களையும் வென்றவர். கணிதமேதை எம் அதிபர் திரு.சி.பாலகிருஷ்ணன் சேர். நீண்ட ஆயுளுடன் சேவைகள் செய்து மனநிறைவுடன் வாழ இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவையாற்றிய பாடசாலைகளும் அதிபர்களும்

| பாடசாலை | பதவி | சேவைக் காலம் | அதிபர் | கல்விப் பணிப்பாளர் |
|---|---|---|---|---|
| 1. கிளி/தட்டுவங்கொட்டி மத்திய கல்லூரி | ஆசிரியர் | 01.06.1978 - 09.03.1980 | திரு.க.கணபதிப்பிள்ளை | திரு.தி.மாணிக்கவாசகர் |
| 2. கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி | ஆசிரியர் | 10.03.1980 - 31.12.1981 | திரு.மார்க்கண்டு<br>திரு.அந்தோனிப்பிள்ளை | திரு.இ.சுந்தரலிங்கம் |
| 3. யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி | ஆசிரிய மாணவன் | 01.01.1982 - 31.12.1983 | திரு.இ.கனகலிங்கம் | - |
| 4. நு/நாணுஓயா சிங்கள தமிழ் வித்தியாலயம் | ஆசிரியர் | 01.01.1984 - 31.03.1989 | திரு.று.ஆ.சந்திரபாலா | திரு.A.Z.ஒமர்டீன் |
| 5. யா/காங்கேசன்துறை மகா வித்தியாலயம் | ஆசிரியர் | 01.04.1989 - 31.12.1989 | திரு.இ.அப்பாத்துரை | |
| 6. யா/நடேஸ்வராக் கல்லூரி | கொத்தணி உதவியாளர் | 01.01.1990 - 31.12.1993 | திரு.க.இராசதுரை | |
| 7. யா/குட்டியபுலம் அ.த.க. பாடசாலை | ஆசிரியர் | 01.01.1994 - 31.12.1995 | திரு.க.சிவப்பிரகாசம் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 8. கிளி/அக்கராயன் மத்திய கல்லூரி | ஆசிரியர் | 01.01.1996 - 31.12.1997 | ஆசிரியர் | திரு.த.துரைசிங்கம் |
| 9. கிளி/அக்கராயன் மத்திய கல்லூரி | அதிபர் | 01.01.1998 - 31.12.2002 | | திரு.பொன்.சபாபதி<br>திரு.ப.அரியரத்தினம் |
| 10. கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா | அதிபர் | 01.01.2003 - 31.12.2006 | | திரு.ப.அரியரத்தினம் |
| 11. கிளி/இந்துக் கல்லூரி | அதிபர் | 01.01.2007 - 17.01.2013 | | திரு.த.குருகுலராஜா |
| 12. கிளி/பளை மத்திய கல்லூரி | அதிபர் | 18.01.2013 - 21.02.2019 | | திரு.க.முருகவேள்<br>திரு.குயின்ரஸ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி/பளை மத்திய கல்லூரியிலிருந்து கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் 2013 மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றவர்கள்

**கணிதப்பிரிவு**

தி.சகாணன் 3A - மாவட்ட நிலை - 1

**கலைப்பிரிவு**

த.தர்மினி 3A மாவட்ட நிலை - 2

## கல்விப்பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை 2014 மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றவர்கள்

**விஞ்ஞானப் பிரிவு**

ச.சரவணன் 2A, B மாவட்ட நிலை - 2

**கலைப்பிரிவு**

யோ.ஜெனோஸ் 3A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி/பளை மத்திய கல்லூரியிலிருந்து
## பல்கலைக் கழகத்திற்குத் தெரிவானவர் விபரம்
## 2015 & 2016

### கணிதப்பிரிவு (2015)

1. கோபாலராஜா விந்துஜன் 2A B (1)
2. சத்தியமூர்த்தி மிதிலன்
3. சிற்றம்பலம் மிதுசா
4. அரசரத்தினம் நிசாந்தன்
5. திலகேஸ்வரன் ஜெயீவன்
6. நவரத்தினம் அருந்ததி
7. தம்பிப்பிள்ளை சரணியன்

### கணிதப்பிரிவு (2016)

1. திருநாமம் தபோதரன் A 2 B (5)
2. இராசகுலசிங்கம் உசாந்தன்
3. விற்றர் அன்ரனி வினோஜா
4. ரவீந்திரராசா பிரியங்கன்
5. அருமைநாதன் அஜிதன்
6. நடராசா சாள்நிலா

### உயிரியல் பிரிவு - மருத்துவபீடம் (2015)

1. சிவஞ்ஞானம் பிரணவன் 2A B (2)
2. செல்வரத்தினம் ஜெனனி
3. நவரத்தினசாமி சிவதாஸ்
4. சத்தியேஸ்வரன் குகதாஸ்
5. மாணிக்கராசா சுஜீவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஜீவரத்தினம் லஜீக்கா
## தமிழ்த்தினப் போட்டி
## தேசிய மட்டம் - 3ம் இடம்
## 2018

## க.பொ.த (உ/த) பெறுபேறு - 2018

### விஞ்ஞானப்பிரிவு

**2 *A,B*** - கருணானந்தன் அபிசிகா மாவட்ட நிலை - 1

**2 *A,B*** - கேதீஸ்வரன் திவாரகா மாவட்ட நிலை - 3

### வர்த்தகம்

***3 A*** - யசோதரன் தமிழ்நிலா மாவட்ட நிலை - ***8***

### தொழிநுட்பம்

**2 *B,S*** - ஜீவரத்தினம் லஜீக்கா மாவட்ட நிலை - **2**

**விளையாட்டு பெறுபேறு - 2018**

கோல் ஊன்றிப் பாய்தல் - தெய்வநாதன் திவ்யா - தேசிய மட்ட வர்ண விருது (நிலை - 4)



பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்கிற்கிணங்க நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம். எமது கல்லூரி அதிபர் திரு.சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் அவர்களின் மணிவிழாவையொட்டிச் சிறப்பு மலராக வெளியிடப்படும் "பாலாவின் பயணம்" மணிவிழா மலர் வெளிவரப் பலரும் பல வழிகளில் ஒத்துழைத்துள்ளனர்.

இம்மலர் ஆக்கத்திற்கு உதவிய மலர்க்குழுவிற்கும், ஆசியுரை, வாழ்த்துரைகள், ஆக்கங்கள் தந்த சமயத்தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள், கல்விப்புலம் சார்ந்தோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இத்துடன் பல்வேறு வழிகளில் துணை நின்ற அன்புள்ளங்களுக்கும் நன்றிகள்.

எமது கல்லூரியால் வெளியிடப்படும் இந்நூல் மலரப் பெரிதும் உதவிய பிரதி அதிபர், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பாடசாலை நலன் விரும்பிகள், அன்பான பெற்றோர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இம்மலர் வெளிவருவதற்கு எம்மோடு தோளோடு தோள் நின்று உழைத்த திரு.பா.பத்மநாதன், திரு.யோ.பகீரதன், ப.நிசாந்தன், சு.சுரேஸ்குமார், நா.கேதீஸ்வரன் ஆகியோருக்கும் உளமார்ந்த நன்றிகள்.

மேலும் "பாலாவின் பயணம்" மலராக்கத்திற்கான நிதியுதவியை வழங்கிய யாழ் வைத்தியசாலை உரிமையாளரும் மாகாண சபை உறுப்பினருமாகிய S.புலேந்திரராசா அவர்களுக்கும் பாடசாலைச் சமூகம் சார்பாகவும், மலர்க்குழு சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் இம்மலராக்கத்திற்கு மேலும் பல வழிகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் மலர்க்குழு சார்பாகவும், பாடசாலைச் சமூகம் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மலர்க்குழு,**
கிளி/பளை மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளமையில் தாய், தந்தை, மனைவியுடன்



இளமைத் தோற்றம்




அதிபரின் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணித வினாடி வினா மாகாண மட்டத்தில் முதலாம் இடம்
பெற்று தங்கப் பதக்கம் பெற்ற மாணவர்கள் (2017)



செல்வன் கே.கிசேரன் தமிழ் தினப்பேச்சுப் போட்டி தேசிய
மட்டத்தில் முதலாம் இடம் (2017)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணித ஒலிம்பியாட் போட்டியில் தேசிய மட்டத்துக்கு
தெரிவு பெற்ற மாணவர்கள் (2018)



செல்வி லோ.துவாரகா கணித ஒலிம்பியாட் பரீட்சையில்
தேசிய மட்டத்தில் மூன்றாம் இடம் (2017)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நு/நாணுஓயா சிங்கள தமிழ் வித்தியாலயத்தில்...



கிளி. இந்துக் கல்லூரி மீள ஆரம்பிக்கும் நிகழ்வு



கிளி/இந்துக் கல்லூரிக்கு நாமல் ராஜபக்ஷ
விஜயம் செய்தபோது...



கிளி/அக்கராயன் ம.வி ஒளிவிழாவில்...



சிறந்த கிரிக்கெட் அணியையுடைய
கிளி/இந்துக் கல்லூரிக்கு
மஹல ஜெயவர்த்தன
விஜயம் செய்தபோது...




முன்னாள் கல்வியமைச்சர்
பந்துலகுணவர்த்தன
நினச தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்



க.பொ.த.(சா/த) - 2015
சிறந்த பெறுபேறு பெற்ற
மாணவர்களையும்
அதிபர்களையும் கௌரவிக்கும்
நிகழ்வில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**2018 தமிழ்விழாவின் போது**



**அதிபருடன் ஆசிரியர் குழாம் - 2019**



**பழைய மாணவர் சங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி விழாக் காணும் அதிபரை வாழ்த்துகின்றோம்.

# New YARL HOSPITAL

1. காது, கண், மூக்கு, தொண்டை சத்திர சிகிச்சை
2. கண் சத்திர சிகிச்சை
3. பெண்ணியல் சத்திர சிகிச்சை
4. லேசர் சத்திர சிகிச்சை
5. ஸ்கான்

**லப்பிரஸ்கோப் சத்திர சிகிச்சை**

(சிறிய துவாரத்தின் ஊடாக)

**315, பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி**

**தொலைபேசி : 021-222-3533, 021-222 1011**

மணி விழாக் காணும் அதிபரை வாழ்த்துகின்றோம்.



முத்துமாரி

கட்டடப் பொருட்கள் உதிரிகள் வாணிபம்

muththumari

building materials & parts merchants

புகையிரத வீதி, பளை. 021 205 0088



116A, இராமநாதன் வீதி, கலட்டிச் சந்தி,

யாழ்ப்பாணம். 021 720 0756

077 027 6375

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org